# ஜகன்மோகினி

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்.

1—1—1949 26-வது ஆண்டு அணா நான்கு



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MAR 1949
MADRAS

வை. மு. ஸ்ரீ. 1-வது நவீனம்— மூன்றாம் பதிப்பு.

## உதய சூரியன்

(ரூ. 1—4—0. ரிஜிஸ்தர் தபாலில் 1—8—0.)

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம்
2. நாமகரணமும் நாற்பது திங்களும்
3. மங்களபுரியின் மூன்று திலகங்கள்
4. ஜீவியச் சுழலில் சோதனையின் கொடுமை
5. புயலும் அமைதியும்
6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும்
7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்ய பாரமும்
8. காதல் போதனை—கம்பன் வர்ணனை
9. எதிர்பாராத சம்பவம்
10. அதிர்ச்சியும் வைராக்யமும்
11. இதய ஒலி
12. போர்க்களத்தில் மனப்போர்
13. உணர்ச்சி வெள்ளம்
14. இருண்ட வானம்
15. உதய சூரியன்

---

வை. மு. ஸ்ரீ. 2-வது நவீனம்— இரண்டாம் பதிப்பு.

## மதமா, மனமா?

(ரூ. 1—4—0. ரிஜிஸ்தர் தபாலில் 1—8—0)

1. சேற்றில் முளைத்த செந்தாமரை
2. அகமலர்ச்சியும் ஆபத்தும்
3. பரபரப்பும் பரிதவிப்பும்
4. வாழ்வும் தாழ்வும்
5. சோகமும் வேகமும்
6. இடியும் மின்னலும்
7. பிரசாரமும் விசாரமும்
8. அன்றும் இன்றும்
9. அலறலும் ஆறுதலும்
10. விழிப்பும் உழைப்பும்
11. விளம்பரமும் விபரீதமும்!
12. மனக்கண்ணாடியே உலகம்!
13. இன்னலைப் புன்னகைப்போம்!
14. உயிர் நிலை—உயர் நிலை.
15. பொருள்—அருள்—அமைதி
16. மனதின் சூக்ஷ்மாணுக்கள்.
17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர்!
18. அவனியில் யாவும் அவனாலே!
19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம்!
20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்!

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
– திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து.
– வீரராகவ கவி

Vol. 26. ஸர்வதாரி ௵, சுதந்தர சகாப்தம் January.
No. 1. மார்கழி ௴ 18-ம் திங்கள். 1949.

## வெள்ளிவிழா அழைப்பிதழ்

### சகோதர சகோதரிகளுக்கு

### சந்தோஷகரமான அழைப்பும் நற்செய்தியும்

### தைமாதம் நம்மனைவருக்கும் பாக்கியமான மாதம்

பாரதியார் அன்று கனவில் கற்பனை உலகில் கண்ட புதுமைப் பெண்மணிகளில் ஒருவர் நம் மோகினியின் ஆசிரியை: பழைய பண்பும், புதுமையின் மணமும் கலாசாரமும் அமையப்பெற்ற சிறந்த மாணிக்கம்.

பத்திரிகைத் தொழில் நடத்துவதென்றால் எவ்வளவு எதிர்ப்பு, எவ்வளவு உழைப்பு, அறிவாற்றல் வேணுமென்பது எல்லோரும் அறிந்ததே. அதுவும் ஒரு சகோதரியினால் நடத்தப்பட்டால் அதன் உயர்வு அலாதி. "வேதம் படைக்கவும், நீதிகள் செய்யவும்வேண்டி ந்தோமென்று கும்மியடி" என்றார் பாரதி. இவைகளெல்லாம் ாகினி என்ற பெண், நாட்டிற்கு ஓரளவு செய்திருக்கிறாள் என்பது நிச்சயம்.

இத்தகைய பெருமைவாய்ந்த ஜகன்மோகினி பத்திரிகை ஆரம்பித்து கிரமமாய் 25 ஆண்டுகள் சென்ற விநாயகசதுர்த்தி அன்று பூர்த்தி அடைந்து, மோகினியின் அன்பர்களால் கொண்டாடப்பட்ட விஷயம் ஏற்கனவே பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறோம். ஆனால், கமிட்டியாரால் நிச்சயிக்கப்பட்ட விழா நடத்த நாளாது தை ௴ 10-ந் தேதி (23-1-49) நாள் குறிப்பிட்டிருக்கிறோம். விழாவை ராஜாஜி ஹாலில் கொண்டாடுகிறோம்.

அச்சமயம் ஆசிரியைக்கு "கலாரத்தினம்" என்ற பட்டம் அளிப்பதாக கமிட்டியார் தீர்மானித்தோம். ஆம்! "கலாரத்தினம்" என்று வாயால் சொல்லிவிடுவது போதுமா? [இதை அன்பர்கள் யோசிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். இன்று எல்லோரும் கூடி ஆசிரியைக்குப் பட்டத்தை அளித்து வைபவமாய்க் கொண்டாடி விடலாம். ஆனால், அது காற்றுவாக்கில் போய்விடக்கூடாதல்லவா?] என்றென்றும் அந்த பட்டம் அளித்தது நிரந்தரமாக எடுத்துக்

கிட்ட நாங்கள் மிகச் சிறிய திட்டம்போட்டிருக்கிறோம். மோகினியின் உருவைத் தங்கத்தில் சித்திரித்து அதன்மேல் "கலாரத்தினம்" என்ற வார்த்தைகளைப் பொறித்து அதை சிவப்பு ரத்தினங்கள்பதித்த ஒரு தங்கஹாரத்தில் இணைத்துக்கொடுப்பதாக நிச்சயித்தோம். ஆசிரியை இடைவிடாமல் செய்த—செய்துவரும்—மாபெரும் தொண்டிற்கு இன்னும் விலையுயர்ந்த முறையில் எவ்வளவோ அழகாகச் செய்யலாம். ஆனால், அன்பர்களிடமிருந்து போதுமான நிதி உதவி கிடைக்காததனால் ஷை மட்டும் செய்து மோகினியின்பாலுள்ள பேரன்பை ஓரளவு காட்டுகிறோம். விழா வெள்ளிவிழாவானதால் கமிட்டியாரின் அன்பளிப்பாக ஒரு வெள்ளி புஷ்பக்கூடை செய்து, அதையும் அளிப்பதாக நிச்சயித்திருக்கிறோம்.

ஆசிரியைக்கு ஸரஸ்வதி கடாக்ஷமும் லக்ஷ்மி கடாக்ஷமும் ஒருங்கே அமைந்திருக்கின்றன. இது எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய பாக்கியமல்ல. இவைகளுக்குச் சிகரம் வைத்ததுபோல் நற்குணம், தன்னலமற்ற சேவை இவைகளும் ஆசிரியையுடன் பிறந்த விசேஷகுணங்கள். நேரில்சந்தித்துப் பழகினவர்களும் அவருடைய கதைகளின் வாயிலாகவும் இதை நன்றாய் அறிந்திருக்கலாம், அதையே நாங்கள் மறுபடியும் சொல்ல விரும்பவில்லை.

ஆசிரியையின் மேம்பட்ட குணத்தினால், இந்த சின்னஞ்சிறு அன்பளிப்பைக்கூட அவர் பலமாய்த் தடுத்தார். புகழையும், முகஸ்துதியையும் விரும்பாத,—என் கடன் பணி செய்வதே என்ற மனப்பான்மையுடைய—ஆசிரியைக்கு நாம் எவ்வளவு செய்தாலும் குறைவுதான்.

அவருக்கில்லாததற்குச் செய்யவேண்டாம். கலைமகள், திருமகள் இருவருமே அவரிடம் அன்புகொண்டவர்கள். ஆனால், இருபத்தைந்து ஆண்டுகள் ஒரு பத்திரிகை நடத்தி அதன்மூலம் தேசிய பிரசாரம், சமூக சீர்திருத்தம், உண்மை அநுபவம், பக்திரஸம், கலாசாரம் இவைகளையும் சமைத்துக் கொடுத்து பெருந்தொண்டாற்றியிருக்கிறார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு ஸகோதரி பததிரிகை நடத்த முன்வருவது எவ்வளவு அசாத்தியம் என்று சொல்லத்தேவையில்லை.

அவருடைய ஜீவிதகாலத்தில் அவரை கௌரவிக்கும் மாபெரும் பாக்யம் பெற்றிருக்கிறோமென்பதை எல்லோரும் உணர்ந்து அவருடைய உழைபபையும, இடைவிடா முயற்சியையும் கறபனைசக்தியையும் போற்றிப் பாராட்டுவது நம் கடமை. அத்தகைய அரிய சந்தர்ப்பமும கடவுளருளால நமக்குக் கிடைத்திருக்கிறது.

நாளது ஜனவரி 23-ந்தேதி ராஜாஜி ஹாலில் விழா நடக்கிறது. காலையில் 8-30 முதல் 10-30 வரையிலும் மாலை 3 முதல் 8 வரையிலும் நடக்கும். அச்சமயம் பிரபல எழுத்தாளர்களும் இதர பெரியார்களும் ஆசிரியையின் பேராற்றலைப்பற்றிப் பேசுவார்கள். ஆசிரியையின் [illegible] தேசிய, பாடல்களில் சிலவற்றை இரு வேளையும் மகாத்மாஜி சேவாசங்கத்து இசை கோஷ்டியினர் பாடுவார்கள்.



183446

மோகினியில் அறிவிக்கப்பட்டுள்ள ஜாபிதாப்படி சில அன்பர்களால் அளிக்கப்பட்டதொகையைக்கொண்டு மேலே சொன்ன இச்சிறிய ஆபரணமும், புஷ்பக்கூடையும் கமிட்டியினால் எல்லோர் சார்பாகவும் ஆசிரியைக்கு அளிக்கப்படும். அச்சமயம் ஸ்வாமி சுத்தானந்தபாரதியாரின் அன்பளிப்பாகிய "கலை யரசி" பதக்கமும், மகாத்மாஜி ஸேவா சங்கத்தினரின் அன்பளிப்பாகிய "கலாஸேவகி" பதக்கமும் ஆசிரியைக்குக் கொடுக்கப்படும்.

சிறிய பொருள்தான்; அந்தரங்க அன்புகொண்ட அன்பர்களால் அளிக்கப்பட்ட தொகையினால் செய்த பொருள் என்னும்பொழுது அது விலைமதிப்புக்கு அப்பாற்பட்ட உன்னத பொருள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காலையில் நடக்கும் கூட்டத்திற்கு ஸ்ரீமான் திவான் பகதூர் கே.எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் தலைமை வகிப்பார். மாலையில் நடக்கும் கூட்டத்திற்கு சகோதரி சுபலக்ஷ்மி அம்மாள் அவர்கள் தலைமைவகிப்பார். இருவேளையும் ஆரம்பவிழா தகுந்த பிரமுகர்களால் நடத்தப்படும். ஒலி பெருக்கி முதலிய சகல ஏற்பாடுகளும் செய்யப்படும்.

ஸ்ரீ. ப்ர. ப. அண்ணங்கராசாரியர், திவான்பகதூர் V. பாஷ்யமய்யங்கார், பி. ஸ்ரீ. ஆசார்யா, வரகவி. திரு. அ. சுப்ரமணிய பாரதியார், ராவ் பகதூர் டாக்டர் T. S. திருமூர்த்தி, இராம சடகோபன், அ. சீனிவாஸ ராகவன், ஜனாப் ஷாபிமுகம்மது, ஸ்ரீரங்கம் சடகோபாசாரியர், திருவாலி ராமானுஜாசாரியர் முதலியோரும், ஸ்ரீமதிகள் காயனபடு வி. ஸரஸ்வதிபாய், ருக்மிணி லக்ஷ்மிபதி, குகப்ரியை, வசுமதி, காமாக்ஷியம்மாள், எஸ். அம்புஜம்மாள், வி. ஸரஸ்வதி அம்மாள், எம். எஸ். கமலா முதலியோரும், மற்றும் பல ப்ரமுகர்களும் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

இந்த மங்களகரமான "வெள்ளிவிழா"விற்கு வெளியூரிலும் உள்ளூரிலுமுள்ள சகோதர சகோதரிகள் அனைவரும் வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். வர இயலாதவர் தத்தம் ஊர்களில் கொண்டாடும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

'ஜகன்மோகினி' முறையே பொன்விழா, வைரவிழா எல்லாம் நடத்திக்கொண்டு நீடூழி வாழ்ந்தால்மட்டும் போதாது. வம்ச தனமாக மோகினி கலைமகளுடனும், திருமகளுடனும், சக்தியுடனும் தோழமைபூண்டு சிரஞ்சீவியாகவும், அமரத்துவமாகவும் இருக்க வேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம். அவ்விதமே அன்பர்கள் அனைவரும் ஆசி அளிக்குமாறு வேண்டுகிறோம். வாழ்க ஜகன்மோகினி! வாழ்க பெண்ணுலகம்!

வெள்ளிவிழாக் கமிட்டி சார்பாக

வசுமதி ராமஸ்வாமி

# வெள்ளி விழா நிதி

| | | |
|---|---|---|
| 1—10—'48 இதழ் வரை | | ரூ. 578. |
| V. பாஷ்யமய்யங்கார், சேத்துப்பட்டு. | | 5. |
| V. துரைசாமிப் பண்டாரம், சங்கரிதுர்க்கம். | | 5. |
| மதுக்கா D. கோவிந்தராவ்மூலம் K. N. ராவ், S. B. ராவ், அக்ஷயம், C. N. G. நாயர், C, D. சாரி, ஐவரும் ரூ. 2 வீதம் கொடுத்தது, | | 10. |
| R. ஜக்மோகன், பெல்காம். | | 1. |
| S. ஷண்பகவல்லி, திருச்சி. | | 3. |
| ஸோனாபாய், திருச்சி. | | 2. |
| குப்பம்மாள், கிளையாம்புத்தூர். | | 1. |
| P. S. அலமேலு, ,, | | 1. |
| A. ராஜம்மாள், மயிலை. | | 20. |
| B. V. சாரதாம்பாள், ஈரோடு, | | 2. |
| கண்ணம்மாள் ராஜகோபாலன், திருவல்லிக்கேணி, | | 10. |
| "ஹனுமான்" காரியாலயம், தியாகராயநகர். | | 15. |
| V. P. சுப்ரமண்யம், திருப்பூர். | | 9/8. |
| K. S. அனந்தகிருஷ்ணய்யர், எர்ணாகுளம். | | 2. |
| N. நாராயணன், பம்பாய். | | 5. |
| ஸ்ரீமதி வசுமதி ராமஸ்வாமி மூலம்:— | | 168. |
| M. S. கமலா கிருஷ்ணஸ்வாமி, மாம்பலம். | ரூ. 50. | |
| காமாக்ஷியம்மாள் (சேலம்) | 10. | |
| ருக்மிணி அம்மாள்., ராயப்பேட்டை. | 1. | |
| அம்புஜம்மாள், ,, | 1. | |
| பிச்சம்மாள், லக்ஷ்மீபுரம். | 2. | |
| V. V. சடகோபன், மாம்பலம் | 5. | |
| ஸ்ரீமதி கிருஷ்ணய்யர், ,, | 15. | |
| ரங்கநாயகி | 5. | |
| ஸ்ரீமதி ஸீதாபதி ஐயர், மயிலை | 5. | |
| E. R. பத்மாவதி அம்மாள், ,, | 5. | |
| S. K. கண்ணம்மாள், எழும்பூர். | 10. | |
| ஸி. சரஸ்வதி, திருவல்லிக்கேணி. | 10. | |
| சம்பகலக்ஷ்மி, | 2. | |
| பட்டம்மாள் | ?. | |
| V. R. சந்திரா, மயிலை. | 10. | |
| D. K. பட்டம்மாள், மாம்பலம். | 25. | |
| ஜானகி கிருஷ்ணன், | 10. | |
| | 168 | |
| ஆகமொத்தம் | | ரூ. 837/8. |

## வெள்ளி விழா ஞாபகார்த்த அன்பளிப்புகள்:—

1. டாக்டர் V. C. அங்குளி, மாம்பலம் — வெள்ளி எலக்ட்ரிக் விளக்கு செட், பேனா ஸெட் உள்பட. ரூ. 80. மதிப்புள்ளது.
2. லக்ஷம்மாள், மாம்பலம். —வெள்ளி குங்குமச் சிமிழ்.
3. ஸ்ரீ. K. S. சீதாராமன், பம்பாய்.—எவர்ஸில்வர் ஸெட் (எட்டு அடுக்குகள். ரூ. 70. மதிப்புள்ளது.)

30—12—'48

வை. மு. ஸ்ரீ.

காரியதரிசி, வெள்ளி விழா கமிட்டி.

# க்ஷேம லாபங்கள்.

## பொங்கலோ பொங்கல் !!

ஸ்ரீ கீதாசாரியனின் திருவருளால் நம்மெல்லோர் வீட்டிலும் பால் பொங்கவேண்டும். மோகினி தனது 25 வயதை இன்பகரமாகக் கடந்து, 26-வது வயதை ஆனந்தமாய், வெள்ளி விழா குலுங்க, வைபோகத்துடன் ஆரம்பித்துவிட்டாள்.

எம்பெருமானின் துணைகொண்டு நம்பிக்கை என்கிற பாலத்தின்மீது உறுதியாக, அவள் கொண்ட லக்ஷியத்தை நிறைவேற்ற அல்லும்பகலும் உழைத்துவருவதில் கால் நூற்றாண்டைக் கனவு போல் களிப்புடன் கடத்திய மகிழ்ச்சியில், ஒருதரம் கடந்த நாட்களைத் திரும்பிப் பார்க்கும்போது "ஆஹா! எத்தனை எதிர்ப்புகள்! எத்தனை த்வேஷ ப்ரசாரங்கள்? எத்தனை அறிவிலிகளின் வசைபாண ப்ரயோகங்கள், எத்தனை அதபாதாளமான பயங்கரச் சுழல்கள்!... இத்தனையையும் கடவுளினருளால் நாம் —ஒரு சிறிய ஸேவகி— எப்படித் தாண்டி, விடாமுயற்சியுடன் பணிபுரிந்து வந்திருக்கிறோம் என்று மோகினியின் சின்னஞ்சிறு உள்ளத்தில் உவகை பூத்துக் குலுங்கி ஆனந்தமாகப் பரிணமித்து மலரச்செய்கின்றது.

யுத்த பூதத்தின் பயங்கரத்தைச் சிறிதும் லக்ஷ்யம் செய்யாது, ஏற்பட்ட கஷ்டம் நஷ்டம் சகலத்தையும் நீந்தியடித்துக்கொண்டு ஒரு கிராமத்தில் அடைக்கலம் புகுந்து, அங்கும் சிறந்த ஸேவைகளைப் புரிந்து பெருமையடைந்து, மீண்டும் ஸ்வஸ்தானம் வந்து, அன்பர்கள் ஆர்வத்துடன் திட்டமிடும் தனது வெள்ளிவிழாவைக் காணும்போது, அவ்வணங்கின் பெருமிதம் கரை புரளுகின்றது.

இத்தனை ஜெயத்திற்கும் காரணம் கீதாசாரியனின் பரிபூர்ண கடாக்ஷமும், பெரியோரின் ஆசீர்வாதமும், பொதுமக்களின் இதய பூர்வமான அன்பும் ஆதரவும், எதற்கும் சளைக்காத உறுதியுடன் உழைக்கும் ஆழ்ந்த நோக்கமும், நம்பிக்கையுமேயாகும் என்பதை மோகினி எண்ணிஎண்ணிப் பூரித்து, தன்னை உருவாக்குவதற்கு உதவிபுரிந்த சகலரையும் சாஷ்டாங்கமாய் இதய பூரிப்புடனும் நன்றி விசுவாசத்துடனும் பணிந்து, தனது அன்பைத் தெரிவிக்கின்றாள்.

காட்டு வெள்ளமாயினும் கடல் வெள்ளமாயினும் பகவானிடம் பக்தி கொண்டு நம்பிக்கையுடன் அவனைத் துதித்தால், கருணை என்கிற மரக்கலத்தைக் கொடுத்து சகல வெள்ளத்தையும் தாண்டச் செய்வான் என்பதை மோகினி தன் வாழ்க்கையில் பல துறைகளில் கண்டு தேறியிருக்கிறாள்.

அவள் வாசகமகனீயர்களுக்குச் சமர்ப்பித்துவரும் கதைமலரில் பெரும்பாகம் உண்மையும் கண்டதும் கேட்டதும் வைத்துக் கற்பனை என்கிற கவசமிட்டு உருவாக்கியதேயாகும். இந்த முறையில் மோகினி பெருமிதமான மகிழ்ச்சியையடைந்து அதன் பலனையும் கண்டு பூரித்திருக்கிறாள்.

இப்போது மோகினி உங்களுக்குச் சமர்ப்பித்துள்ள காலக் கண்ணாடியும் ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பனை ஆபரணங்களைப் பூட்டி அலங்கரித்த சித்திரமே

யாகும். சிங்கப்பெருமாள்கோயிலில் நாங்கள் வஸித்தகாலத்தில், ப்ரதிதினமும் கோயில் மலைமீது உட்காருவது வழக்கம். அப்போது அனேகர் அங்கு கூடுவார்கள்...ஒருசமயம், உடல் நலத்திற்காகத் தெலுங்குபேசும் ஜாதியினர் சிலர் வந்திருந்தார்கள். அவர்களில் ஒரு பெரியபாட்டியம்மாள் என்னுடன் பேசுகையில் "நீங்கள் எழுதும் கதைகளை நாங்கள் படித்துக்கேட்டு மகிழ்கிறோம். நேராக நடந்த ஒரு விஷயத்தைக் கூறுகிறேன். அதையப்படியே ஒழுங்குபடுத்தி எழுதுங்களேன். பாழாய்ப்போன சினிமா, உலகத்தை அழித்து விட்டுத்தான் போகும்போலிருக்கிறது" என்று தனது உள்ளத்தில் கொந்தளித்துக்கொண்டிருந்த சகலத்தையும் எடுத்துக் கொட்டினார்கள். அதைக் கேட்டபோது எனக்கு வியப்பாகவிருந்தது. ஏற்கெனவே இந்த சினிமாவின் விபரீதங்களை எத்தனையோ விதம் எழுதியிருக்கிறோமே...இதிலும் முக்யமான விஷயம் இருக்கிறது இதை எப்படிச் சித்திரிக்கலாம் என்று ஆழமாக யோசனைசெய்தேன். ஒரே அரிசி, ரவை, மாவு, சர்க்கரை, நெய் முதலியவற்றைக் கொண்டும் எத்தனை விதவிதமான பண்டங்கள் செய்கிறோம், அப்படித்தானே இதுவும்—என்று அதை உருவாக்கி உங்களிடம் சமர்ப்பிக்க மோகினி பேராவலுடன் வந்திருக்கிறாள்.

நமது சொந்தக்குழந்தை—செல்வக்குழந்தைகளுக்கு வயது எத்தனை ஆனபோதிலும் அவர்களை நாம் குழந்தை என்றேதான் சொல்கிறோம். அதேபோல் உங்கள் அன்பையும் அபிமானத்தையும் விலைமதிப்பற்ற ஆசியையும் பெற்றுள்ள மோகினிச் செல்வி, கீதாசார்யன் கருணை கலந்த பால்பொங்கி சர்வமங்களமும் பொங்கிச் செழிக்கவேண்டி அவனடி தொழுது ப்ரார்த்திக்கிறாள். என்றும் போல் நீங்கள் உங்கள் அன்பு மழையைப் பொழியுங்கள் என வேண்டுகிறாள்.

இந்தப் புத்தப் புதிய ஆண்டில் மோகினி சில புதிய அம்சங்களைத் தாங்கிவருவாள். முக்யமாக,வெள்ளிவிழாசிறுகதைப்போட்டியில் பஞ்சாயத்தார் முடிவுசெய்து பரிசுபெற்ற கதைகள் வெள்ளி விழாப் பொங்கல் மலரில் முறையே வெளியாகின்றன; ப்ரசுரத்திற்குரியவை என்று பஞ்சாயத்தார் கூறியுள்ள கதைகள் பிப்ரவரி மாதம் முதல், தொடர்ச்சியாக மோகினியில் வரும். சிறுகதைப்போட்டி பரிசளிப்பு விழா நடக்கும் தேதியை பிப்ரவரி மோகினியில் அறிவிக்கப்படும்.

*"சிற்ப விசித்திரங்கள்"* என்ற ரஸமான புது அம்சத்தை —போட்டோ படத்துடன்— மோகினி அன்பர்களுக்கு விருந்தளிக்க ஸ்ரீ வை. மு. நரஸிம்ஹன், B. A., B. E., A. M. I. E., M. R. S. I., அன்புடன் முன்வந்துள்ளார். அடுத்த இதழ்முதல் இந்த அம்சம் தொடர்ந்து வெளிவரும், இம்மாதம் விசேஷ மலரில் 5 போட்டோக்களுடன் மூன்று அபூர்வ விக்ரகங்களைப்பற்றி எழுதியுள்ளார். கலாரஸிகர்களுக்கு இது பெருவிருந்தாகும்.

ஆஸ்திகர்களுக்கு ஏற்கனவே வெளிவரும் 'இந்த மாதம்' முதலிய ஸத்விஷயங்கள் தவிர, வைத்தமாநிதிக் குடும்பத்தின் மாணிக்கங்களுள் ஒருவரான ஸத்வைஷ்ணவமணி ஸ்ரீமதி வை. மு. வேதம்

மங்கார் இயற்றிய நூற்றெட்டுத் திருப்பதி விஷயமான விருத்தங்கள், கீர்த்தனங்களிலிருந்து சில மணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளியிடப்படும் என்று மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாரத மாதா நமக்கொரு காளமேகம் போன்ற சிறந்த கவி யோகி ஸ்ரீசுத்தானந்தபாரதியாரை அளித்திருக்கிறாள். அத்தகைய அத்புத கர்மவீரரின் சரிதையை பிற்காலத்தில் தோன்றியவாறு பிறர் சொல்லவும், எழுதவும் இடம் வைக்காமல், யோகியாரே மோகினி மூலம் தொடர்ச்சியாய் எழுதிவரும் பாக்யத்தை மோகினி அடைந்திருக்கிறாள். ஏற்கெனவே ஒரு சன்யாசினியின் (சுபலக்ஷ்மி அம்மாள்) சுயசரிதை வருகிறதோடு, ஒருயோகியின் சரிதையும் வருவது வாசகர்களுக்கு நல்விருந்தாகுமென்பது திண்ணம்.

பல காரணங்களினால் வெள்ளிவிழாவை ஜனவரிமாதம் 23ந்தேதி வைத்துக்கொண்டிருப்பதால் வெள்ளிவிழாப் பொங்கல்மலர் அவ்விழாவன்றுதான் வெளியிடவேண்டியது முறைமை. ஆகையால் பொங்கலன்று மலர் வராது. அன்பர்கள் பொங்கலுக்குப் பிறகு 10 தினங்கள் பொறுத்திருக்கவும். வெளியூர் அன்பர்களுக்கு விழாவன்று அவர்கள் கரங்களில்சேரும்படியாகமுதல் நாள்தபாலில் அனுப்பிவிடுவோம். உள்ளூர் அன்பர்களுக்கு விழாவன்று கிடைக்கும். இதை கவனித்துக் கடிதம் எழுதாதிருக்கும்படிக் கோருகிறோம். மலரின் உயர்வைப்பற்றி நீங்கள் பார்த்தபிறகு நீங்களே சொல்லவேண்டுமேயன்றி குறிப்பிட்டு எழுதமுடியாது.

அமரத்யாகி—84வது நவீனம்—தனிப்புத்தகமாகவும் அச்சாகி வருகிறது விலை ரூ. 2. நமது வெள்ளிவிழா பொங்கல்மலர் ஷை நவீனம் உள்பட, பலபல விசேஷ இலக்கிய, கலை, ஓவிய, போட்டோ......அம்சங்களுடன் ரூ. 2-8-0 தான். அதாவது 8 அணாவே அதிகம். அதுவும், முன்பணமனுப்புகிறவர்களுக்குத் தபாற் செலவும் இனாம். அதாவது, வெள்ளிவிழா மலர் என்ற சிறப்பினால் அடக்க விலையிலேயே அன்பர்களுக்கு அளிப்பதாக ஆகிறது. இதை உணர்ந்து உடனே முந்துங்கள். தாமதித்து (2-8-0) அனுப்பி மலர்கிடைக்காதவர்களுக்கு ஷை நவீனம் ரூ. 2-க்கு அனுப்பப்பட்டு, மீதி சந்தா கணக்கில் வைக்கப்படும்.

---

## வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)

ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
தெய்விக ஒளி
வானக் குயில்
வெளுத்த வானம்
மனத்தாமரை
மதுர கீதம்
அமரத்யாகி

ரூ. 1-12
இதய ஒலி
புகழ்மாலை
கலாநிலயம்
அனாதைப்பெண்
சிலாசாசனம்

ரூ. 1-8
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்

ரூ. 1-4
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமந்திர்
கோபால ரத்னம்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி


ரூ. 1.
வீரவஸந்தா
மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்

அணா. 12.
சுடர் விளக்கு
பக்ஷமாலிகா

அணா. 6.
உளுத்த இதயம்

# ஆத்ம சோதனை

### யோகி சுத்தானந்தரின் அனுபவ மாலை



★

'ஆத்மசோதனை'யில், கவியோகி தன் யோக வாழ்க்கையின் சாதன அனுபவங்களைத் தொடர்ந்து வெளியிடுகிறார். ஆத்மீக விஷயங்களை விரும்பும் மோகினி அன்பர்களுக்கு இது மிக்க சுவையாகவிருக்கும்.

★

## 1. காலப் புரட்சி

ஆறு அமைதியாக ஓடுகிறது; உயிரையும் பயிரையும் ஊட்டி, ஓங்காரநாதத்துடன் கடலிற் கலக்கிறது. இந்த அமைதியருவி இன்று ஊழிவெள்ளமாகக் கிளம்புகிறது. இடியும் புயலும் மழையும் கொட்டி, அதன் உக்கிர வேகத்தைப் பெருக்குகின்றன. அந்த வேகத்தில் வெள்ளம் புரண்டு, அமைதியான கிராமங்களை அடித்துச் செல்லுகிறது. வெள்ளத்திற்குத் தப்பிச் சிலர் வேறிடம் வசிக்க வேண்டி வருகிறது. இயற்கையில் நடக்கும் இந்தப் புரட்சி போலவே மக்கள் வாழ்விலும் ஊழிப்புரட்சி நடக்கிறது.

நேற்றுவரையில் வேதம் சிவசங்கரர் குடும்பம் சீரும் சிறப்பும் செல்வமும் கல்வியுமாக வாழ்ந்தது. ஐதாராபாது நவாபுகூட சங்கரையாவின் கீதா உபந்யாசங்களைக் கேட்டுச் சன்மானம் அளித்தார். ஸ்ரீமத் பாகவதம், அதயாத்ம ராமாயணம், கீதை, உபநிஷத்து, மகாபாரதம் இவற்றில் அவர் கரைகண்ட புலவர். தெலுங்கு, உருது,

வடமொழி தென்மொழி ஆகிய நான்கிலும் பண்டிதர். கல்வியை உள்ளமாகவும், ஒழுக்கத்தை உயிராகவும், சுதந்தரத்தை உடலாகவுங் கொண்டு அவர் வம்சபரம்பரையாக ஐதராபாதில் வாழ்ந்தார். சங்கரையா வெறும் புத்தகப்பூச்சியில்லை; உலகறிந்த கலைஞர்; காலமறிந்த சீலர்; சமர்த்தகுரு ராமதாஸின் தாஸபோதத்தில் மோகங் கொண்ட கர்மயோகி. இந்தியாவிடமும் இந்து தருமத்திடமும் பற்று மிக்க தேசபக்தர். அன்னியரும் பிறமதங்களும் நாட்டிற் புகுந்து அடிக்கும் கொட்டத்தைத் தடுக்க மனம் துடித்தவர். அவர் நினைத்திருந்தால் பெரிய சர்க்கார் உத்தியோகம் கிடைத்திருக்கும். அவருக்குத் தாசில்தார்உத்யோகம் பெரிதன்று, தர்மோபதேசமே பெரிது. அவர் மழைகாலங்களில் ஐதராபாதிலேயிருந்து கீதாப்பிரசாரம் நடத்தினர். வேனிற்காலங்களில் கிராமம் கிராமமாகச் சென்று தர்மோபதேசம் செய்தார். நாளைக்கவலை அவருக்கு இருந்ததில்லை. ஆஸ்திக ஜனங்கள் தாமாகவே அவருக்கு வேண்டிய பொருளாதாரத்தைத் தட்டில்லாமல் உதவினர்கள்.

வந்ததைக்கொண்டு அவர் சிந்தை மகிழ்ந்து வாழ்வை தார்மீக சேவையிலேயே நிவேதித்தார். அமைதி....அகமகிழ்வு...

ஆனல், இந்த உலகில் அமைதியும் மகிழ்வும் நிலையா? திடீரென்று கிளம்பியது காலப் புரட்சி. அந்தக்காலம் இந்தியாமுழுதும் ஏகக் குழப்பமாயிருந்தது. மராடியர் எழுந்து முகல் அரியணையை உலுக்கிவிட்டனர். நாதிர்ஷாவின் தாக்குதலால் ஆட்டம்கொடுத்த அந்த அரியணை மராடியரின் பூகம்பப்புரட்சியால் நிலைகுலைந்தது. அதைச்சார்ந்த சுபாக்களும், நவாபிகளும் கட்டுமீறித் தனிக்காட்டு தர்பார்களாயின. முகம்மதுஷா முகல்கொடியைப் பிடித்து நின்ருன். ஆனல் புயல் கொடிமரத்தையே தள்ளிவிட்டது. ஆற்காட்டு நவாபிடம் கப்பம் வாங்கி, ஐதராபாது நைஜாம் டில்லிக்குக் கப்பம் செலுத்தவேண்டும். ஆற்காட்டில் ஏகக் குழப்பம், குளறுபடி. தெற்கே மறவரும் நாயக்கரும் ஆட்சி செய்தனர்.

நாயக்கர் ஆட்சி அணைந்துகொண்டிருந்தது. மதுரையிலும் திருச்சியிலும் ஆண்ட மங்கம்மாள் பேரன் விஜயரங்க சோக்கநாதன், பாசறையில் மனம் உடைந்து இறந்தான். மராடியரும் துருக்கரும் ஊரை வளைத்துக்கொண்டனர். இந்தச் சமயம் அவன் மனைவி மீனாட்சி ராணியானள். இவளுக்குப் போட்டியாக பங்காரு திருமலை கிளம்பினன். உட்போர் வலுத்தது. ஊடே சந்தாசாகெபு புகுந்து, இரண்டுபக்கமும் கொள்ளையடித்து ஊரைப்பிடித்து ராணியைச் சிறையில் போட்டான். நாயக்கர் ஆட்சி அவளுடன் முடிந்தது. சந்தாசாகெபு ஆர்க்காட்டு நவாபு தோஸ்தாலியின் மாப்பிள்ளை. மாப்பிள்ளை அத்துமீறி, தெற்கே தன் கொடியை நாட்டத் தலைப்பட்டான். சிவகங்கையில் மட்டும் அவன் பாய்ச்சல் பலிக்கவில்லை. திருச்சி மதுரை தஞ்சை ஜில்லாக்களைக் கொஞ்சகாலம் ஆட்டிவைத்தான். மாமனருக்குப் பொறுமை கொதித்தது. தெற்கிருந்து கப்பம் வரவில்லையாதலால், ஆற்காட்டு நவாபு நைஜாமுக்குப் பணம் அனுப்பவில்லை. நைஜாம் குமுறினன். மராடியரைத் தூண்டிவிட்டான். பாஜிராவ் சேனை புயல்போல வந்து ஆற்

காட்டு நவாபை ஒழித்தது. அவன்மகன் ஸப்தராலி கப்பம் கட்டிப் பிழைத்தான். மராடியர் திருச்சிராப்பள்ளியைத் தாக்கி, சந்தா சாகெபைச் சிறைபிடித்துக் கொண்டுபோய் சதாராவில் வைத்தனர். இங்கே ஸப்தராலியை ஒரு விருந்தில் கொலைசெய்து, முர்தாஸா நவாபானான். அவனையும் சதிகாரர் கொல்லமுயன்றனர்; பேர்வழி பெண்வேஷம்போட்டுக்கொண்டு தப்பினான். 1744ல், நைஜா முல்மல்க் தெற்கேவந்து, தனக்கு இணங்கிய அன்வாருதீனை ஆற்காட்டு நவாபாக்கிச் சென்றான். அப்போது புதுச்சேரி பிரெஞ்சுக்காரர் அரசியல் சதுரங்கத்தில் பகடை யுருட்டினர். ஆங்கிலேயர் இவர்களுக்கு எதிராகப் போட்டிபோட்டனர்.

1748-ல், நைஜாம் உல்மல்க் இறந்தான். நாஜிர் ஜங், முஜ்பர் ஜங்—ஆகிய இருவரும் அரியணைக்குப் போட்டிபோட்டுப் பெரும் போர் செய்தனர், சதாராவில் சிறையுண்ட சந்தாசாகெபு மீண்டான். பிரெஞ்சுக்காரர் உதவியால் அவன் ஐதராபாத் குழப்பத்தில் நுழைந்து, முஜபர் ஜங்கை நவாபாக்கினான். முஜபர்ஜங் இதற்காக சந்தாசாகெபையே ஆற்காட்டு நவாபாக்கினான். சந்தா தெற்கே சூறுவளிபோல் வந்து, அன்வாருதீனை ஆம்பூரில் கொன்று. தானே நவாபாகி ஆர்க்காட்டில் அரசாண்டான். அன்வாருடன் மகன் முகம்மதலி திருச்சிக்கு ஓடிச்சென்று ஆங்கிலேயரைச் சரண் புகுந்தான். அப்போதுதான் கிளைவ் கிளம்பி ஆற்காட்டை முற்றுகையிட்டு, கம்மவர் கருணைத்துணையால் சந்தாசாகெபையும் பிரெஞ்சுக்காரரையும் முறியடித்து, யூனியன் ஜாக்கைப்பலமாக இந்திய மண்ணில் ஊன்றினான். இந்த அன்னியக்கொடியை அசைக்க சிவகங்கை மறவரும் திருநெல்வேலி நாயக்கரும் புரட்சி செய்தனர். வடக்கிலும் அமைதியில்லை, தெற்கிலும் சண்டமாருதப் புயல்.

* * * * *

## 2. குதிரைக்காரர் வீடு

இந்தச்சமயம் ஐதராபாதில் இரத்தச் சூறுவளி வீசியது. பல இந்துக்கள் சொத்துசுகங்களை இழந்தனர். பலாத்கார மதமாற்றம், கற்பழிவு, கொள்ளை, சூறை, அடிதடி, குத்து வெட்டு கொலை எல்லாம் பயங்கரமாகக் கிளம்பின. இந்த அதிர்ச்சியில் வேதம்சங்கரய்யா வீடு தீக்கிரையானது. உற்றார் பெற்றார் மடிந்தனர். அவருக்கும் இதோ ஆபத்து வருகிறது. சங்கரையா பைராகிகளுடன் தப்பிச் சென்று காசி நகரை யடைந்தார். அங்கே சிலகாலம் தங்கி மகான்களிடம் ஞானசாதனம் செய்து, பிறகு தெற்கே திரும்பினார். நெல்லூரில் வைதிகர் வீட்டில் தங்கியிருந்தபோது, அவர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அந்த மறுமலர்ச்சி அந்த வீட்டுக் கன்னிகையின் புன்னகையில் அரும்பியது. வேதம் சங்கரின் அறிவு ஒழுக்கம் கல்வி அழகு இவற்றைக்கண்ட கன்னிகை, அவர்மேல் காதலுற்றார். பெற்றோர் மனமும் பொருந்தியது. தசப்பொருத்தமும் சரியாயிருந்தது; கலியாணமானது. இந்த வைதிகருக்கு மைசூரில் செல்வாக்கு உண்டு. அவரிடம் சிபார்சுச்சீட்டுப்பெற்று வேதம்,மனைவியுடன் மைசூரை அடைந்தார். ஸ்ரீரங்கப்பட்டணத்தில்

அவருக்கு வீடுசௌகரியங்களும் நல்ல ஆதரவும் கிடைத்தன. அங்கே ரங்கநாதர் சந்நிதியில் பாகவத ராமாயண பாரதாதி கிரந்தங்கள் படித்து, தர்மப்பிரசாரம் செய்தார் வேதம். இவருக்கு ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்கு ரங்கநாதன் என்று பெயரிட்டுக் கல்வியும் செல்வமும் நிரம்பத்தந்து சென்றார் சங்கரையா.

வேதம் ரங்கநாதர் வடமொழி, தென்மொழி, தெலுங்கு, கன்னடம், உருது, பார்ஸி முதலிய பலமொழிப் புலவர். அரசியல் நிபுணர். சோதிடப்புலி. அவர் திப்புசுல்தானின் மந்திரி பூர்ணையாவின் அன்பையும் ஆதரவையும் பெற்றார். அவரே ரங்கநாதனுக்குக் கலியாணமும் செய்துவைத்துத் தக்க உத்தியோகமும் தந்தார். முதன்மையாக திருவாங்கூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, புதுச்சேரி முதலிய இடங்களுக்குத் தூது செல்லும் வேலை இவருடையதாயிருந்தது. சிறந்த தேசபக்தராதலால், ஆங்கிலேயரை எப்படியாவது நாட்டைவிட்டு ஓட்டவேண்டுமென்று போர்புரிந்த திப்பு சுல்தானுக்கு மனமார ஊழியம் செய்தார். சமஸ்கிருத வித்வான்போல் பல சமஸ்தானங்களுக்குச் சென்று உளவறிந்தும் வந்தார். இவரை பூர்ணையா ஒரு நாள் முக்கியமான காரியத்திற்காக திண்டுக்கல்லுக்கு அனுப்பினார். செல்லுமுன் நாட்டுநிலையை அறிந்து, ரங்கநாதர் ஏராளமான பொருளையும் தமது மனைவிமக்களையும் குதிரைமேல் கொண்டு சென்றார். 1799ம் ஆண்டு ஸ்ரீரங்கப்பட்டணத்தில் திப்பு சுல்தான் வீழ்ச்சி யடைந்தான். கோட்டை வாசலில் அவன் உடல் உருண்டது. ஆங்கிலேயர் ஐயபேரி கொட்டி மைசூரில் புகுந்து, பழைய கிருஷ்ணராஜ உடையாரை அரியணையேற்றி, அமுல் செலுத்தினர். திப்பு வென்ற நாடெல்லாம் வெள்ளையர்வசப்பட்டன. திப்புவுக்கு உதவி செய்தவர் பாடு திண்டாட்டமானது. ஒற்றர் தொல்லை வலுத்தது. இந்தத் தொல்லையினின்று தப்பவே திண்டுக்கல்லிலிருந்து குதிரைமேல் ஏறி, ரங்கநாதர் குடும்பத்துடன் சிவகங்கை ஜமீனுக்கு வந்து, பனையூர் என்ற கிராமத்தில் தங்கினார். ஏனெனில், சிவகங்கையிலேதான் கடைசி சுதந்தரப்போர் நடந்துகொண்டிருந்தது. அரங்கநாதர் குதிரைமேல் ஏறி வந்ததால் அவர் வீட்டுக்கே குதிரைக்காரர் வீடு என்று பெயரானது—துர்ரம் ரங்கநாதுடு தாம் கொண்டுவந்த செல்வத்தால் பனையூரில் பெரிய நிலம் வாங்கி, வீடுகட்டி அந்தஸ்தாக வாழ்ந்தார்.

அவருக்கு ஒரே பெண்—அரங்கம்மாள். அவளுக்கு பங்காரு ஜோடுல ரங்கம்மா என்று பெயர் வந்தது—அவள் தங்கம்போலப் பளபளக்கும் ஜோடுபோட்டுத்தான் நடப்பது. இந்தப் பெண்ணை நல்ல இடத்தில் விவாகம் செய்து, தந்தை காலஞ்சென்றார். இவளுக்கு அழகிரிசாஸ்திரி என்ற ஒரு மேதாவி மைந்தன் உதித்தான். அவர் சகலாகம பண்டிதர், இசைப்புலவர், யோகி, பரோபகாரி. தமது பிதுரார்ஜிதத்தை அவர் தாராளமாகத் தானதருமங்களுக்கு வாரிவிட்டார். விருந்தினரில்லாமல் அவர் உண்பதில்லை. மூன்று காலமும் அவர் சிவபூஜை செய்தார். மூன்றுமுறை காசியாத்திரை

செய்தார். அங்கே பல மகான்களைத் தரிசித்து யோகரகசியங்களை அறிந்தார்.

அழகிரி சாஸ்திரி ஒரு நாள் நாசிகா க்ஷேத்திரத்தில் ஜபம் செய்துகொண்டிருந்தபோது, அவருடைய பக்திசிரத்தையை வியந்த ஒரு முனிவர், தம்மிடம்இருந்த பெரிய பார்த்திபலிங்கத்தைத்தந்து 'இந்த சாம்பமூர்த்தியைப்பரம்பரையாக வீட்டில் வைத்து வணங்கு; சிவபக்தியால் உனக்கு எல்லா நன்மையும் உண்டாகும்' என்று ஓம் நமச்சிவாய மந்திரமும் உபதேசித்துச் சென்றார். அந்தச் சாம்பமூர்த்தியை பக்தியுடன் கொண்டுவந்து குலதெய்வமாக வைத்து, இந்திராக்ஷி சிவகவசத்துடன் மந்திரார்ச்சனை செய்தார் அழகிரி. சாம்பமூர்த்தியுடன் வேங்கடேசப் பெருமாளையும் அவர் வழிபட்டார்.

சிவாய விஷ்ணுரூபாய சிவரூபாய விஷ்ணவே
சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு விஷ்ணுஸ்ச ஹ்ருதயம் சிவ:

என்பது அவர் மந்திரம். அவர் மகன் சாம்பமூர்த்தி பரமசாது, தருமசீலர், பக்தியும் பாராயணமும் பரோபகாரமுமாக வாழ்ந்தார். நிலத்தில் வருவதே குடும்பத்திற்குப் போதுமானதாகையால், இந்தக் குலத்தினர் பிறரிடம் உத்யோகம் பார்க்கவில்லை. ஆனால், தாராளமான செலவுகளால் பிதுரார்ஜிதமெல்லாம் கரைந்துபோனது. என் பாட்டனார் அரங்கசாமி காலத்தில் உத்யோகம் பார்த்தே குடும்பம் பிழைக்கவேண்டியிருந்தது...

என் பாட்டனார் அழகர், பலசாலி, கிரந்தம்—தமிழ்—தெலுங்குப் புலவர். இராமாயண பாராயணவிரதர். அவர் கையால் கிரந்தத்திலும் தெலுங்கிலும் எழுதிய ராமாயணஏட்டை நான் பார்த்திருக்கிறேன். அந்த ஏடுகளுடன் இருந்த பழைய ஏடுகளிலிருந்துதான் மேற்சொன்ன முன்னோர் வரலாறும் கிடைத்தது. திப்புசுல்தான் காலத்து அரசாங்க ஏடுகள் சில வீட்டில் இருந்தன.

அரங்கர் திருப்பூவனத்தில் பேஷ்கார் வேலைபார்த்துவந்தார். அவர் மனைவி மீனாக்ஷியம்மாள் ஓர் அபூர்வப்பிறவி—நல்லஅழகி, களைசொட்டும் முகம், வேலையில்கப்பல், நிர்வாகத்திறமையில் இணையற்றவள்; பாட்டு, பாட்டு அப்படிப் பாட்டு; சதா பாடுவாள், இனிமையான கதைகள் சொல்லுவாள். என் கதைச் செல்வத்திற்கு அவளே சுரங்கமாயிருந்தாள்.

இந்தப் புனித தம்பதிகளுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. முதல்வன் சுந்தரராஜன், அடுத்தவன் எந்தை ஜடாதரர், அடுத்தது ரங்கம் என்ற செல்வி, கடைக்குட்டி புஷ்பவனம். இவர்களில் எந்தையின் குடும்பமே நல்ல வளர்ச்சிபெற்று இன்று பரம்பரையான ஆத்மீகச் செல்வத்தைக் காக்கிறது. (தொடரும்)

---


## வெள்ளிமா வெளியீடுகள்

1. தபால் விநோதம் 2. இனியமுரசு
3. ஆண்டவனின் அருள்

மூன்றும் ஒரேசமயத்தில் வாங்குவோர்க்கு ரூ. 3-தான். (ரிஜிஸ்தர் தபாற்செலவு இனாம்.) தனித்தனியே வாங்குவோர் ரூ. 1—4—0 வீதம் அனுப்பினால் ரிஜிஸ்தர் போஸ்ட்மூலம் அனுப்புவோம்.



# பாரதி போற்றும் உலக மகாகவி

## பி. ஸ்ரீ

'மகாகவி ஸர். ரவீந்திர நாத தாகூர் அருளிய பஞ்ச வியாஸங்கள்' என்ற தலைப்பெயருடன் கவி பாரதியார் ரவீந்திர நாத தாகுரின் ஐந்து வியாசங்களை 'மாடர்ன் ரேவ்யூ' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழாக்கியுள்ளார் என்பதை இந்நாளில் பலரும் அறியார் என்று நினைக்கிறேன். அட்டையில், மகா கவி தாகுர் அடிகளின் புகைப்படத்திற்குக் கீழ் 'ஸ்ரீமான். சி. சுப்பிரமணிய பாரதியால் தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றது' என்ற குறிப்புடன் இம்மொழிபெயர்ப்பு நூல் வெளியிடப்பெற்றிருக்கிறது.

பதிப்பாசிரியர் தமது முகவுரையில், 'இவ் வைந்து வியாசங்களிலும் ஆழ்ந்துகிடக்கும் அருங் கருத்துக்களை ஸ்ரீமான். பாரதி மிக்க சாதுரியமாக நம் தாய்பாஷையில் விளக்கியிருப்பதை இங்கே குறிப்பிடுவோம்' என்று பாரதியாரின் மொழிபெயர்ப்புத் திறனைப் பாராட்டியிருக்கிறார். இந்நாளிலும் இம்மொழிபெயர்ப்பு நூல் பல அம்சங்களிலும் ஒரு சிறந்த முன்மாதிரியாக மதிக்கத்தக்கது என்பது என் அபிப்பிராயம். இத்தகைய மொழிபெயர்ப்புகளால் தாய்மொழி வளம்பெறும் என்று பாரதியார் நம்பினார். பொதுவாக மகாகவி ரவீந்திரரின் வாக்குப் பிரவாகத்திலும் சிந்தனைவெள்ளத்திலும் மூங்கி முழுகிப் பாரதியார் தமது வசனத்தையும் கவிதையையும்கூட வளமுறச்செய்துகொண்டு, தமிழ்வசனத்திற்கு ஒரு புது வழிகாட்டியாக இம் மொழிபெயர்ப்பையும் உதவியிருக்கிறார்.

மொழிபெயர்க்கப் பெற்றிருக்கும் ஐந்து வியாசங்களாவன:

(1) சிறிதும் பெரிதும்—எழுதி வாசித்த உபன்யாஸம்;(2) அடங்கி நட; (3) ஜாதி; (4) ஜப்பானுடைய ஆவி—இது தாகுர் அடிகள் ஜப்பானில் நிகழ்த்திய உபந்யாஸம்; (5) கல்வி கற்பிக்கும் பாஷை.

இந்த ஐந்தும் முதன்முதல் வங்கமொழியில் ரவீந்திரரால் எழுதப் பெற்றுப் பிறகு அவரது சகோதரரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டு, 'மாடர்ன் ரெவ்யூ' வில் வெளிவந்தன. அந்த இங்கிலீஷ் மொழிபெயர்ப்பின் தமிழ் மொழிபெயர்ப்பை 'மாடர்ன் ரெவ்யூ' பத்திராசிரியர் 'தமிழ்மக்களின் மேம்பாட்டைக் கோரி' அனுமதித்ததாகக் கூறிப் 'பதிப்பிப்பவர்' என்று வாசகர்களைச் சிறிது சிரமப்படுத்தும் முறையில் கையெழுத்திட்டிருக்கிறார் பதிப்பாசிரியர்.

பாரதியாரின் இம் மொழிபெயர்ப்பில் வடசொற்றொடர்கள் மிகுதியாயிருந்தாலும் ஒழுங்கீனமான, அபக்குவமான, சொல்வடிவங்களைப் பார்க்கமுடியாது. பாரதியாருக்குத்தான் 'தூய தமிழ்' என்ற விநோத நடை நடக்கத்தெரியாதே! 'தமிழ்க் காதல் என்றால் வடமொழிப்பகை!' என்ற பொருளைப் பாரதி அகராதியில் காணவே முடியாது. தாகுர் அடி-

களின் கவியுள்ளம் பிரதிபலிக்கும் கட்டுரைகளில் ஐந்து, பாரதியாரின் கவியுள்ளத்தில் ஊறி, வளரும் தமிழில் நேர்மையான மொழிபெயர்ப்பு நெறியில், ஆங்கிலம் பயிலாத் தமிழர்களும் புது விருந்தாக நுகருமாறு, தமிழாக்கம் பெற்றிருக்கின்றன. சுருக்கச் சொன்னால், தமிழின் மேம்பாட்டையும், தமிழ்மக்களின் மேம்பாட்டையும் கோரி நம் தமிழ்க் கவிஞர் மொழிபெயர்த்திருக்கும் வங்க மகாகவியின் இக்கட்டுரைத் தொகுதி, தமிழ் வசன வளர்ச்சியில்—முக்கியமாக மொழிபெயர்ப்பு வளர்ச்சியில்—ஒரு மைல்கல்லாகக் கருதத்தக்கது.

பாரதியாரின் மொழிபெயர்ப்பு நடைக்கு ஓர் உதாரணமாக முதலாவது வியாசத்தின் முதலாவது 'பாரா'-வைக் காட்டலாம்.

"ராஜரீகப் பஞ்சத்தில் நெடுங்காலம் கஷ்டப்பட்டு பாரததேவி வானத்தை நோக்கிக்கொண்டிருந்தாள். ராஜாங்கச் சோதிடர், ஒரு பலமான ஸ்வராஜ்ய மழைக்காற்று அராபிக் கடலைக் கடந்து வந்துவிட்டதென்றும், பெரிய மழை பெய்யுமென்றும் சோதிடங் கூறினர். அப்போது பார்த்தாலோ, பேஹாரில் மஹமதியர் மேலே ஹிந்துக்கள் கலகமழை தொடுத்தார்கள்— கனத்த மழை!

தமிழின் சொற்சாதுரியத்தைப் பிரமாதப்படுத்தாமல் தாகுர் அடிகளின் கருத்துவளத்தை வாசகருள்ளத்தில் நேரடியாகப் பதிவு செய்யும் ரீதியில் எழுதிச்செல்வது இம்மொழிபெயர்ப்பு நடையின் சிறப்பியல்பு.

இக்கட்டுரைகளில் தாகுர்அடிகள் வெளியிட்டிருக்கும் அரும் பெருங் கருத்துக்களெல்லாம் பாரதியாருக்கும் உடன்பாடானவை. இவற்றுள் சில, பாரதி கவிதையின் ஜீவநாதமாகவும் ஒலிசெய்வதைக் கேட்கிறோம். தாகுர் அமைதியாய் நிதானமாய்க் கூறுவதைப் பாரதியார் ஆவேசமாய்த் தீவிரமாய்க் கர்ஜிப்பார்:மேலைநாடுகளின் ஆவேசக் கவிகளையும் எழுத்தாளர்களையும் அதிக அளவில் பின்பற்றியவர் நம் பாரதியார். ஆனால், இது ஸ்தூல ஒற்றுமைதான். பாரதியாருக்கும் தாகுருக்குமோ சூட்சும ஒற்றுமை அதிகம்

இக்கட்டுரைத் தொகுதியிலுள்ள முதலாவது கட்டுரையில், பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தைக் கண்டு அஞ்சிக்கிடந்த நம்மக்களின் மனநிலையை நெஞ்சு பொறுக்காமல் தாகுரும் வெளியிட்டிருக்கிறார்: 'நாம் வெளிவானத்தில் இடம் பெற நாடி முயற்சி செய்தால், மேற்படி வர்க்கத்தின் கிளைகளில் சூறுவளி அடித்ததுபோல் இலைகளின் நுனி வரை சலசலப்புண்டாகிறது. அதனால் நமக்கும் அசாந்தியுண்டாய் மேற்படி கிளைகளின் புடைப்பில் உடைந்துபோவதைக் காட்டிலும் காற்றடிக்கும் வழியைத் தேடாதிருத்தலே நல்லதென்று கருதுகிறோம். இக் கருத்தைப் பாரதியார் எப்படி வெளியிடுகிறார் பாருங்கள்:

தந்த பொருளைக் கொண்டே—ஜனம்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்;
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர்வார்!
நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்!

நமது சாதிப்பிரிவுகளையும், அவற்றுக்கு அரணாக அடுக்கிக்கொண்ட சாத்திரமூட்டைகளையும் தாகுரும் புண்பட்ட நெஞ்சுடன் சுட்டிக் காட்டுகிறார்: 'மனிதர்கள் ஒன்றுசேர்ந்து யோசனை பண்ணித் தாம் என்றைக்கும் பிரிவுபட்டு நிற்க வழிகள் தேடியதை நமது நாட்டிலும் கண்டோம். நமக்கு மிகவும் இனிமையாகத் தோன்றிய ஸ்வதந்தரங்களைப் பிறர் அனுபவியாமல்

தடுக்க நாமும் முயன்றோம். ஸர்வஸாதாரணமாக வழங்கத்தக்க உரிமைகளுக்குச் சிறப்புரிமைகள் என்று பெயர்சூட்டி மானுஷிகத்தை அவமானப்படுத்தினோம். ஆனால், எத்தனையோ பலமான சாஸ்திர மூட்டைகளை வைத்துக் காத்தும் இந்த அஸம்பாவிதத்தை நம்மால் ஸ்திரமாகக் காப்பாற்ற முடியவில்லை. நமக்குப் பலமென்று கருதிய முறைமை நமக்குத் துர்ப்பலமாக மூண்டது. நம்மை நாமே புண்படுத்திக்கொண்டு பல நூற்றாண்டுகளாக மடிகிறோம்.' இக்கருத்தைப் பாரதியார்,

கோஞ்சமோ பிரிவினைகள்?—ஒரு
கோடியென்றால் அது பெரிதாமோ?
……………………………
சாத்திரங்கள் ஒன்றும் காணார்—போய்ச்
சாத்திரப் பேய்கள்சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்றாய் இருந்தாலும்-ஒரு
கொள்கையில் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்!

என்றும்,

சாத்திரங்கள் பல தேடினேன்—அங்கு
சங்கையில் லாதன சங்கையாம்—பழங்
கோத்திரங்கள் சொல்லும் மூடர்தம்—பொய்ம்மைக்
கூடையில் உண்மை கிடைக்குமோ?

என்றும் பாடியிருக்கிறார்.

ரவீந்திரநாத தாகுர் அமைதியாய் 'உனக்கு இங்கே நோவு, அங்கே குறை' என்று காட்டிக்கொண்டுபோகும் நமது சமுதாயக் குறைகள் பலவற்றையும் பாரதியார் ஆத்திரம் பொங்க, நெஞ்சு கொதிக்க மேலைநாட்டுப் புரட்சி மனப்பான்மையுடன் வெளியிடுவதைக் காண்கிறோம். தாகுர் அடிகளின் மனப்பான்மையோ நமது நாட்டு மகாகவிகளின் பரம்பரையிலே பழுத்துவந்த மனப்பான்மை. வால்மீகி, காளிதாஸர் ஆகிய மகாகவிகளின் போக்கைத் தழுவியது ரவீந்திரரின் கவிதைப் போக்கு என்று இம் மும்மணிகளையும் ரஸித்த ஒரு நண்பர் கூறுவதுண்டு. இத்தகைய கவியுள்ளம் குறைபாடுகளையும் உண்மைகளையும் அழகுகளையும் வாழ்க்கையின் பரம ரகசியங்களையும் சுட்டிக் காட்டும் போது, கோபத்திற்காவது சாபத்திற்காவது இடமேது?

ஆடம்பரமற்ற உங்கள் வெள்ளை ஆடை அணிந்து,
அதிகாரத்திலும் ஆணவத்திலும் நிகரற்றிருப்போர் முன்
வெட்கமுறாது நில்லுங்கள், என்சகோதரர்களே!
பணிவை மகுடமாய் அணிந்து,
ஆன்ம சுதந்திரத்தை உங்கள் சுதந்திரமாய்க்
கொள்ளுங்கள்;
உங்கள் வறுமைஎன்ற வெறுந்தரையில்
பரம்பொருளின் சிங்காதனத்தை
நாள்தோறும், நிர்மாணஞ் செய்யுங்கள்;
பெரிது படாடோபத்தில் இல்லை,
வீண்பெருமை வீழ்ச்சிபெறும்—
என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

என்ற தாகுர் கவிதை உலகமகா கவியான தாகுர் அடிகளின் ஜீவநாதம். உலகம் போற்றும் இம் மகா கவியைப் போற்றும் பாரதியார் இத்தகைய கொள்கைகளைத் தேசபக்த ஆவேச நெறியில் நின்று வெளியிட்டிருப்பது வெளிப்படை.

ஸ்ரீ. ப்ர. ப. அண்ணங்கராசாரியர்.

# கம்பர் காட்டிய மாமுனிவேள்வி காத்தல்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

முனிவரால் நியமிக்கப்பட்ட தாசரதிகள் கண்ணுங் கருத்துமாய் அந்த ஷட் ராத்ர யாகத்தைக் காப்பதில் இசைவு கொண்டனர். அரக்கரோடு பொருவதில் மிக உத்ஸஹமுடைய இராமபிரான் ராக்ஷஸர்கள் எப்போது வருவார்களென்று பார்த்துக்கொண்டிருக்கையில் அரக்கர்கள் ஆகாசத்தில் தோன்றிப் பேராரவாரஞ் செய்தார்கள்; கணைமாரி பொழிந்தார்கள்; நீரும் நெருப்பும் ரத்தமுமாகச் சொரிந்தார்கள்; பெரிய மலைகளைப் பெயர்த்தெடுத்து எறிந்தார்கள்; வாய்வந்தபடி வைதார்கள்; பல பல கொடிய மாயைகளைச் செய்தார்கள். அப்போது அவை யாகபூமியில் சிறிதும் விழாதபடி இராமன் தனது அம்புகளைக்கொண்டே சரகூடம் கட்டினன். ஆயினும்அங்குள்ள முனிவர்கள் அரக்கர்களின் கொடுந்தொழில்களுக்கு அஞ்சி நடுங்கி இராகவனைச் சரணமடைந்து அபயம் வேண்டி நிற்க, பெருமான் அவர்கட்கு அபயமளித்து, வில்வளைத்து நாணியைக் காதளவு மிழுத்து அம்பெய்து மாரீசனைக் கடலில் தள்ளிச் சுபாகுவைக் கொன்று எஞ்சிய அரக்கர்களையும் தொலைத்திட, வானவர் மலர் மழைபொழிந்து துந்துபி முழங்கி வணங்கி வாழ்த்தினர்.

வேள்வியை இனிது முடித்த முனிவன் இராமனை நோக்கி 'உலகங்களில் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை அவலீலையாக நடத்துமாற்றல் பெற்ற நீ இந்தச் சிறு யாகத்தைக் காத்தது அரும்பெருந் தொழிலாக நினைக்கத் தகுமோ? எனது முற் பிறவிகளின் நல்வினைப்பயனுகவே நீ இங்ஙனம் வந்து அருள் புரிந்தாயென்றே நினைக்கத்தக்கது' எனமொழிந்தனன்.

இனி எமக்குக் கைங்கரியம் யாதோவென்று இராமன் வினவ, முனிவன் 'மிதிலா புரியில் ஜனக சக்ரவர்த்தி நடத்தும் யாகத்தையும் நாம் போய்ப் பார்ப்போம், புறப்படுக என்று சொல்ல மூவருமாய் மிதிலா புரிக்குப் புறப்படலானர்கள்.

## கதை வேற்றுமைக் குறிப்பு

விச்வாமித்ர யாகஸம்ரக்ஷண மென்னுமிந்த கட்டத்தில் வால்மீகி ராமாயணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் கதையில் வேற்றுமை காணுமிடங்கள் சிலவேயாம். அவை எளிதினுணரத்தக்கன, சிலவே ஈண்டெடுத்துக் காட்டப்படுகின்றன.

1. மாரீசன் ஸுந்தனுக்கு மகனுகவும் ஸுபாஹு உபஸுந்தனுக்கு மகனுகவும் தாடகையினிடத்துத் தோன்றியதாக வான்மீகி கூறியுள்ளார். ஸுபாஹு மாரீசர்களிருவரும் ஸுந்தனுடைய புத்திரர்களாகவே தாடகையினிடத்துத் தோன்றியதாகக் கம்பர் கூறியுள்ளார்.

2. விச்வாமித்திரமுனிவர் ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களோடு வாமநாச்ரமத்தையடைந்தது தாடகாவதமான பின்பு என்றும், கௌசிகிநதியையடைந்து அதன் வரலாறு கூறுவது யாகம் செய்து முடித்து மிதிலைக்குப் புறப்படும் வழியடைவில் என்றும் வான்மீகம் காட்டுகின்றது.

இவ்விஷயங்களைக் கம்பர் வேறுபடக் கூறியுள்ளார். கதையின் அமைப்பிலும் வேற்றுமையுள்ளது ஸ்பஷ்டமாக அறியக் கூடியதே.

வாமநாவதார த்ரிவிக்ரமாவதார விருத்தாந்தங்களை வான்மீகி மிகச் சுருக்கமாகக் கூறியுள்ளார்; கம்பர் மிக விரிவாகக் கூறியுள்ளார்,

ஸ்ரீ. N. V. துரைசாமி — ஒருபக்கக் கதை

# தங்கத்தின் மாமியார்

தங்கம் கலியாணமாகிக் கணவன் வீட்டுக்கு வந்த புதிது. புக்ககத்திலுள்ளவர்கள் முற்றிலும் புதியமுகம். பெண்ணினம் என்று சொல்லுவதற்கோ மாமியார் சீதம்மாள் ஒருத்திதான்.

சீதம்மாளுக்குத் தன் நாட்டுப்பெண் தங்கத்தின்மீது உயிர் என்றுதான் வெளியே எல்லாம் பேச்சு. ஆனாலும், மருமகளிடம் கடினமாக வேலை வாங்குவதில் அவளுக்கு இணை அவள்தான்; வேறு இல்லை. இது தங்கத்தின் அந்தரங்க விமர்சனம்.

அன்றிரவு ஏதோ காரியமாக மாடிக்குச் சென்று திரும்பி இறங்கிவந்துகொண்டிருந்த தங்கம் கால்தடுக்கி விழுந்துவிட்டாள். மாடிப்படிகளின் மேலிருந்து தடதடவென்று உருண்டு கீழே விழுந்தவள் அப்படியே மூர்ச்சையாகிவிட்டாள். அந்த அதிர்ச்சியின் பயனாக சற்றுநேரத்திற்கெல்லாம் அவளுக்கு ஜுரமும் வந்தது. மறுநாள் காலை படுக்கையை விட்டெழுந்த சீதம்மாள் நேராக தங்கத்தின் கட்டிலண்டைக்கு வந்தாள். "தங்கம்! தங்கம்!" என்று அன்பாக அழைத்தாள்.

தங்கம் மெல்ல கண் விழித்துப் பார்த்தாள். சீதம்மாள் மருமகளின் தலைமயிரைக் கோதிவிட்டுக் கொண்டே "தங்கம்! உடம்பு எப்படியம்மா இருக்கு?" என்றாள் பரிவு நிறைந்த குரலில்.

தங்கத்திற்குத் தன் செவிகளையே நம்பமுடியவில்லை. "என்ன! வேலைவாங்கும் விஷயத்தில் கடுமையான குரலுடைய அந்த மாமியாரின் வாயிலிருந்துதானா இந்தத் தேன் ததும்பும் சொற்களும் வெளிவருகின்றன?" என்று ஆச்சரியம் கொண்டாள்.

மாமியாரின் எதிர்பாராத இந்த அன்புமொழிகளைக் கேட்டதும் தங்கத்திற்கு அப்பொழுதிருந்த உடம்பு வலி கொஞ்சம் குறைந்ததுபோன்ற உணர்ச்சி உண்டாகியது. அத்துடன் மரியாதைக்காக இன்னும் கொஞ்சம் வணக்கத்தைக் காட்டிக்கொண்டு "ஓ! உடம்புக்கு இப்போது ஒன்றுமில்லை!" என்றாள்.

"மயக்கம் முழுதும் தெளிந்துவிட்டதாம்மா?"

"அது அப்பொழுதே சரியாகிவிட்டது. விழுந்த சமயத்தில் சற்று கண்ணை இருட்டுவதுபோலிருந்தது. அவ்வளவுதான்!"

சீதம்மாள் மருமகளின் நெற்றியில் கையை வைத்துப்பார்த்தாள். "ஏம்மா தங்கம்! சுரமும் கொஞ்சம் விட்டிருக்கிறது இல்லையா, இப்போது?" என்றாள் மேலும்.

தங்கத்தின் ஆச்சரியம் இன்னும் அதிகமாகியது. பெற்றெடுத்த தாய்கூட இத்தனை அன்புடன் கேள்விமேல் கேள்வி போட்டு விசாரிக்கமாட்டாளே!" என்று எண்ணினாள்.

"ஜுரமா! அது இராத்திரியே நின்றுவிட்டதே!" என்று பதிலளித்தாள் சற்றும் கபடமறியாத பேதைத் தங்கம்.

சீதம்மாள் மேற்கொண்டு எதுவும் கேள்விபோடவில்லை. ஒரு நிமிஷம் பேசாமலிருந்துவிட்டு "உம். சரி. அப்படியானால் எழுந்து போய் பல் சுத்திசெய்து, விழுப்பை அவிழ்த்துப்போட்டு உங்க

ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்

# ஸ்ரீ பகவத் கீதா ஸாரம்

## பதினைந்தாவது அத்தியாயம்

### புருஷோத்தமனின் இலக்கணம்

மூவெட்டிலும் அதில் மோஹ மடைந்த உயிர்களிலும்
நாவெட் டெழுத்தோடு நல்வீடு நண்ணின நம்பரிலும்
மேவெட் டு வண்குண விண்ணோர் களிலும் விசயனுக்குத்
தாவிட்டு உலகளந்தான் தன்னை வேறென்று சாற்றினனே.

[தாவிட்டு உலகளந்தான் - தாண்டுதலைச்செய்து உலகத்தை அளந்தவனாகிய ஸ்ரீ கிருஷ்ணன், மூவெட்டிலும்-இருபத்திநான்கு தத்துவங்களாகிய பிரக்ருதியிலும், அதில் - அவைகளின் நடுவே, மோஹம் - மயக்கத்தை, அடைந்த உயிர்களிலும்-அடைந்த ஜீவாத்மாக்களைக் காட்டிலும், நாவெட்டெழுத்தொடு - நாக்கிலிருக்கும் அஷ்டாக்ஷரத்துடன், நல்வீடு - நல்லதான முக்தியை, நண்ணின நம்பரிலும்-அடைந்த பக்தர்களைக் காட்டிலும், வண் குண-சிறப்பான குணங்களையுடைய, விண்ணோர்களிலும்-நித்தியஸூரிகளைக்காட்டிலும், தன்னை-புருஷோத்தமனான தன்னை, வேறு என்று-வேறுபட்டவன் என, விசயனுக்கு-அர்ச்சுனனுக்கு, சாற்றினன்-சொன்னான்.]

ஸ்ரீ கிருஷ்ணன் பின்வருமாறு கூறினார்:—

### விசித்திர அரசமரம்

மேலே வேரை உடையதாயும் கீழே கிளைகளை உடையதாயும் அழிவற்றதுமான ஒரு அரசமரமுள்ளது. ஸம்ஸாரபந்தமாகப் பரவியுள்ள அசேதன வஸ்துவின் மாறுதலே அம்மரம். இதை அறிந்தவன் வேதத்தை அறிந்தவனாவன். தேவர் மனுஷ்யன் மிருகம் முதலிய அம்மரத்தின் கிளைகள் குணங்களால் வளர்க்கப்பட்டு மேலும் கீழும் பரவியிருக்கின்றன. சப்தம் ரூபம் ரஸம் முதலிய உலக விஷயங்களே அதன் துளிர்கள். மனுஷ்ய உலகத்தில் ஜீவாத்மாக்களைக் கட்டுப்படுத்தும் புண்ணிய பாபங்களாகிற வேர்கள் பரவியுள்ளன. இவ்வதிசய மரத்தின் உருவமும் ஆதியும் அந்தமும் ஒருவருக்கும் புலப்படுவதில்லை.

### மறுபிறப்பு இல்லாமலிருப்பதற்கு உபாயம்

மேற்சொல்லிய அரசமரத்தை போகங்களில் பற்றின்மை என்கிற உறுதியான கத்தியினால் வெட்டவேண்டும். அதன் பிறகு மறுபடியும்

---

மாமனாருக்குச் சுருக்கக் காப்பி போட்டுக்கொடு; அந்த அடுப்பிலேயே உழக்குப் பருப்பையும் கழுவிப்போட்டுவிட்டுத் துணிமணிகளை எடுத்துக்கொண்டு ஆற்றுக்குப்போய்த் துவைத்துக் குளித்துவிட்டுச் சுருக்க வந்துவிடு. நேற்று இராத்திரி முழுவதும் கண்ணே முழிக்காமெ கிடந்தஉடம்பு. தண்ணியில் அதிகம் ஊறுதே. ஸ்னானம் செய்துவிட்டுவந்து கத்திரிக்காயும் வெண்டைக்காயுமா ஒரு சாம்பார், சேப்பங்கிழங்கு பொறியல், டொமேடோ ரஸம், ஆக சுருக்கமாக சமையலை முடித்துவிடு. சமையல்முடித்ததும்..." என்று மூச்சுவிடாமல் சொல்லிக்கொண்டேபோன சீதம்மாள் வாக்கியத்தை முடிக்கவில்லை.

அதற்குள் மீண்டும் மூர்ச்சையாகி விழுந்துவிட்டாள் தங்கம்!

திரும்பாமல் எவ்விடத்தில் வாழலாமோ அப்படிப்பட்ட அழிவற்ற உயர் பதவியைத் தேடவேண்டும்.

## பற்றை அறுக்க உபாயம்

எந்த பரமபுருஷனிடமிருந்து ஆசைமூலமான காரியம் அநாதியாக உண்டாயிற்றோ அந்த பரமாத்மாவையே அடைக்கலமாக அடைந்தால் உலகப்பற்றை அறுக்கலாம். அப்படிப்பட்டவர்கள் தேஹம் ஆத்மா இவைகளின் வேறுபாட்டை அறிந்தவர்களாயும், சுகதுக்கங்களில் ஆசையை ஜயித்தவர்களாயும், ஆத்ம ஞானத்திலேயே நிலைத்தவர்களாயும், வேறு விஷயங்களில் ஆசையற்றவர்களாயும், ஞானிகளாயும் இருப்பவர்கள் அழிவற்ற பதவியைப் பெறுகிறார்கள்.

## ஜீவாத்மாவின் சொரூபம்

ஒருவன் முதலில் அறியும் ஜீவாத்ம சொரூபம் பகவானுக்குச் சேஷபூதமாயும், ஜோதிரூபமாயும், சூரியன் சந்திரன் நெருப்பு இவர்களால் பிரகாசம் செய்யப்படாததாயும் இருக்கும். பகவதம்சமாகிய ஜீவாத்மாக்களில் சிலர் முக்திபெறுகின்றனர். சிலர் அநாதி கருமங்களினால் பத்தர்களாகின்றனர். இந்த பத்த ஜீவர்கள் ஒவ்வொரு பிறப்பிலும் தாம் அனுபவிக்கும் விஷயங்களின் வாஸனைகளைச் சேர்த்துக்கொண்டே போகிறார்கள். என்னை அடைக்கலமாக அடைந்தவர்கள் ஜீவாத்மாவின் சொரூபத்தை அறிகிறார்கள்.

## பகவானுடைய விபூதிகள்

உலகங்களை விளக்கும் சூரியன் சந்திரன் நெருப்பு இவைகளிலுள்ள ஒளி என்னுடையதே. பூமிக்கு அந்தர்யாமியாக இருந்துகொண்டு பிராணிகளைத் தாங்குகிறேன். அமுதரஸம் நிறைந்த சந்திரனாக இருந்துகொண்டு செடிகளைப் போஷிக்கிறேன். நானே ஜாடராக்கினியாக இருந்துகொண்டு பிராணிகளின் ஆஹாரத்தைப் பக்குவம் செய்கிறேன்.

சுருங்கக்கூறின், எல்லோருடைய ஹிருதயத்திலும் நானே இருக்கிறேன். என்னிடமிருந்தே அறிவும் மறைவும் (ஊஹமும்) ஏற்படுகிறது. வேதங்கள் எல்லாவற்றாலும் நானே அறியப்படுகிறேன். வேதத்தைச் செய்தவனும் அறிந்தவனும் நான்தான்.

## க்ஷரமும் அக்ஷரமும்

பிரம்மாமுதல் புழுவரையில் உள்ள பிராணிகள் புருஷர்கள் எனப்படுகின்றனர். அக்ஷரம் என்கிற பதத்தால் சொல்லப்படுகிறவர்கள் அசேதன சம்பந்தம் அற்றவர்களாயும் தன் சொரூபத்தை அறிந்தவர்களுமான முக்தியடைந்த ஜீவர்கள் ஆவார்கள். க்ஷரம் என்ற பதத்தினால் பத்த ஜீவர்கள் எல்லோரும் சொல்லப்படுகின்றனர்.

## பரமாத்மாவின் இலக்கணம்

க்ஷரம் அக்ஷரம் என்கிற ஆத்மாக்களைக் காட்டிலும் வேறுபட்ட உயர்ந்த புருஷனேவெனில், மாறுதலற்றவனாயும், எல்லாவற்றையும் நியமிப்பவனாயும், மூன்று உலகங்களையும் (அசேதனம் பத்தன் முக்தன் இம்மூன்று வஸ்துக்களையும்) நுழைந்து தாங்குகிறவனாயும், பரமாத்மா என்றும் சொல்லப்படுகிறான்.

பத்த ஜீவர்கள் முக்த ஜீவர்கள் இவர்களைவிட உயர்ந்தவனாகையால் நான் ஸ்மிருதிகளிலும் வேதத்திலும் புருஷோத்தமன் என்று பிரஸித்தி அடைந்துள்ளேன். இவ்விதம் அறிந்த ஞானி எல்லாவற்றையும் அறிந்தவனாய் என்னை எல்லாவிதத்தாலும் அடைகிறான். இது மிகவும் ரகஸ்யமான சாஸ்திரம். இதைவிட வேறு உயர்ந்த உண்மை கிடையாது.

இந்த அத்தியாயத்தின் கருத்து:—புருஷோத்தமனே உயர்ந்த தத்துவம்.

# என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

## பிரஸிடென்ஸி காலேஜில் பி. ஏ. படிப்பில் முதல்வருஷம் 1908.

1908ஆம் வருஷம் ராஜதானிக் கல்லூரியில்சேர்ந்து நான் பீ. ஏ, முடிக்கவேண்டுமென்று தீர்மானமாயிற்று. புருஷர்கள் படிக்கும் இடம்: ஏழெட்டுப்பெண்கள் மாத்திரமே அங்கு அப்போது படித்துக்கொண்டிருந்தனர். என் சிறிய தகப்பனார்பிள்ளை வெங்கடராமனும் அந்தவருஷம் பி. ஏ.க்குச் சேர்ந்தான். ஆகவே எப்படியோ மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு என்னைக் கல்லூரியில் சேர்த்துவிட்டனர். ரிக்ஷா ஒன்று ஏற்பாடுசெய்து எங்கள்வீட்டுக்கு அருகாமையிலேயே இருந்த மேரி ராஜம்மாள் என்பவளும் நானும் சேர்ந்துபோக ஆரம்பித்தோம். ஆங்கிலமும் தமிழும் கட்டாயப்பாடங்கள். நான் முதல்வருஷம் கணிதப்பாடத்தை பிரத்தியேகப் பாடமாக எடுத்துக்கொண்டேன்.

நான் போய்ச்சேர்ந்த முதல்நாளே இடைவேளையில் என்னுடைய தமிழ் குரு மகாமகோபாத்தியாய ஸ்வாமிநாதய்யர் மேலேவந்து "உன்பெரிய தகப்பனார், தகப்பனார், மற்ற உன் குடும்பத்தினரை எனக்குத்தெரியும். நீங்கள் படிக்கவந்திருப்பதைப்பற்றிக் கேள்விப்பட்டேன். நிரம்ப சந்தோஷம். ஏதேனும் வேண்டுமானால் என்னைக்கேட்கலாம்." என்று என் முகத்தைப் பார்க்காமலே மிகுந்த அன்பு மரியாதையுடன் சொல்லிவிட்டுப் போனார். அது எனக்குச் சற்று தைரியமாக இருந்தது. ஆயினும், அந்தக் கல்லூரி வாழ்க்கையின் முதல்வருஷம் எனக்குக் கொஞ்சமேனும் சந்தோஷமேயில்லை. பயந்துகொண்டே யிருந்தேன்.

### உபாத்திமார்களின் வெட்கம்

அந்தக்காலத்தில் மாணவர்களும் மாணவிகளும் ஒருவரோடு ஒருவர் பேசுவது கிடையாது. ஆங்கிலோ - இந்தியப் பெண்கள், கிறிஸ்துவப் பெண்கள் இரண்டு மூன்றுபேர் தங்களுக்குப் பழக்கமானவர்களிடம் பேசுவார்கள். 3. மாதங்களுக்கு ஒருமுறை ஆபீஸில் சம்பளம் கட்ட வேண்டும். அதற்கு என் சிறியதகப்பனார் புதல்வன் வெங்கடராமன் நேரில் என்னிடம்வந்து பணத்தை வாங்கிக்கொண்டு போகமாட்டான். வெட்கம். கொஞ்ச தூரத்தில் நின்றுகொண்டு பியூனை யனுப்புவான்—அவனிடம் நான் பணத்தைக்கொடுத்து அதை அவன் வெங்கட்ராமனிடம் கொடுக்கும்வரைக்கும் அறை வாயிற்படியில் நின்று பார்த்துக்கொண்டிருந்துவிட்டு உள்ளே போவேன். என்னுடன் பாக்கிய சுந்தரி என்னும் கிறிஸ்தவப்பெண் கணிதம் எடுத்துக்கொண்டிருந்தாள்—அவள் முன்னால் போக, அவள் பின்னால் தலையைக் குனிந்துகொண்டே வகுப்பறைக்குக் போவேன். உபாத்தியாயர் வருகிறவரைக்கும் அறைவாயிற்படியில் காத்திருப்போம். உபாத்தியார் உள்ளே போகவிட்டுத்தான் நாங்களும்போய் எங்களுக்காகத் தனியாகப் போடப்பட்டுள்ள மேஜை நாற்காலிகளில் அமருவோம். எங்களைவிட எங்கள் உபாத்திமார்கள் சிலருக்கு அதிக

வெட்கம். மாணவிகள் இருக்கும் பக்கமே திரும்பிக்கூட பார்க்கமாட்டார்கள்— மாணவர்களுக்குத் தெரியாத கணக்குகளை மேடைமேல் உபாத்தியாயருக்கு அருகில்சென்று கேட்டுக்கொள்வார்கள். அதிகப்பேருக்குத் தெரியாததை மாத்திரம் கரும்பலகையில் செய்து காட்டுவார். எங்களுக்குத் தெரியாததை யாரிடமும் கேட்கமுடியாது.

## மாணவர்களின் விஷமம்

இங்கிலீஷ் வகுப்புக்கு நாங்கள் 6 பேர் போவோம். மாணவர்கள் வேண்டுமென்றே சிலசமயங்களில் 3 கால் நாற்காலி, ஒடிந்தமேஜை, இவற்றை யாராவது ஒரு மாணவிக்குப் போட்டுவைப்பார்கள். அல்லது இவர்களுக்கெதிரில் நாங்கள் தூக்கிக்கொண்டு வரவேண்டுமென்று ஒன்றிரண்டு நாற்காலிகளை சற்று தூரத்தில் போட்டுவைப்பார்கள். இதற்காக நாங்கள் பியூன்களுக்கு லஞ்சம்கொடுத்து எங்கள் நாற்காலி மேஜைகள் யாவும் சரியாயிருக்கிறதா என்று பார்த்துவரச் சொல்லி பிறகு வகுப்பறைக்குள் போவது வழக்கம். வகுப்பறைகளுக்கு நாங்கள் போகும்போது வேண்டுமென்றே சில போக்கிரித்தனமான மாணவர்கள் வழியில் நின்றுகொண்டு பேசிக்கொண்டு எங்களுக்கு வழிவிடாமலிருப்பது, சுவர்களில் டெஸ்குகளில் மேஜைகளில் எங்கள் சிலருடைய பெயரை எழுதிவைப்பது, கத்தியால் செதுக்கிவைப்பது, இப்படி சில விஷமங்கள் எல்லாம் உண்டு.

ஒருதடவை ஒரு மாணவியின் கைக்குட்டை தவறி வழியில் விழுந்துவிட்டது. அதை ஒரு மாணவன் எடுத்துவைத்துக்கொண்டு இங்கிலீஷ் வகுப்பறையில் அவளுக்கெதிரில் உட்கார்ந்து அதை அவள்பார்க்கும்படி உதறி தன் முகத்தைத் துடைத்துக்கொள்வது. இரண்டு மூன்றுநாள் இப்படியே நடந்தது. மற்ற மாணவர்களெல்லாம் இதைப்பார்த்து பரிகசிப்பது, சிரிப்பது இத்தியாதி. அந்த மாணவியால் பொறுக்கமுடியவில்லை. பிரன்ஸிபாலிடம் சொல்ல, அவர் அந்த மாணவனைக் கூப்பிட்டு கண்டித்த பிறகு அவன் அடங்கினான்.

## சரியான படிப்பினை

ஒரு முறை வடஇந்தியாவிலிருந்து ஒரு பெரிய செல்வக் குடும்பத்துப் பெண்ணும் அவள் சகோதரனும் படித்துக்கொண்டிருந்தனர். ஒரு மாணவன் அந்தப் பெண்ணுக்கு விஷமமாக ஒன்றிரண்டு கடிதம் எழுதினான். உடனே அவள் சகோதரன் அவள் எழுதுவதுபோல எழுதி அவனை ஒரு இடத்தில் வருவித்து 2 பேரை கூடவைத்துக்கொண்டு நன்றாக அடித்துவிட்டனர். இப்படியாக எத்தனையோ விஷமங்கள்.

## பெருமைப் பார்வையும் விஷமப் பார்வையும்

இதெல்லாம் எனக்கு அந்த முதல் வருஷத்தில் மிகுந்த வேதனையையும் கஷ்டத்தையும் உண்டாக்கிற்று—கல்லூரிக்குப் போவதிலும் படிப்பதிலும்கூட உத்சாகமேயில்லை. ரிக்ஷாவில் ஏறி தலைமுதல் கால்வரைக்கும் குடையினால் மூடிக்கொண்டுதான் போய்வருவது. அப்படியும் சில மாணவர்கள் ஆங்காங்கு நின்றுகொண்டு என் தரிசனத்துக்குக் காத்திருப்பார்கள். அந்தக்காலத்தில் கிறிஸ்தியன் கல்லூரியில் படித்த ஒருவர்—இப்போது பெரிய அட்வகேட்டாயிருப்பவர்—10 வருஷங்களுக்கு முன்பு என்னுடன் அந்தப் பழையகாலத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவர் சொன்னதாவது "ஒரு பிராம்மணப்பெண் ராஜதானிக் கல்லூரியில் படிக்கிறாளாம், அது எத்தனை அதிசயமானது. அவளைப் பார்க்கவேண்டும் என்று நாங்கள் நாலைந்துபேர் திருவல்லிக்கேணிக்கு வந்து நீங்கள் ரிக்ஷாவில் ஏறும்போது பார்த்துவிட்டுப் பெருமையுடன் போனோம்— ஆகவே

எல்லாரும் விஷமபுத்தியுடன் பார்க்கவில்லை. நாங்கள் அநேகர், நீங்கள் படிப்பதை ஒரு அதிசய சம்பவமாகவும்பெருமையுடனுமே கருதினோம்." என்று சொன்னார். 'ரிக்ஷாவில் குடைக்குக்கீழ் என் புடவைக்கரையைப் பார்த்தால்கூட போதும் என்று சந்துகளில் காத்துக்கொண்டு நாங்கள் சிலர் நின்றிருக்கிறோம்' என்று மற்றொருவர் சொன்னார். அவர்கள் எந்த எண்ணத்துடன் பார்த்திருந்தாலும் இதனால் எல்லாம் எனக்கு இன்னமும் அதிக பயமும், வெட்கமும், நடுக்கமும் உண்டாயிற்று.

## வெட்கத்தின் பலன்

அந்த வருஷம் என் தகப்பனாரும் என் பாட விஷயத்தில் எனக்கு உதவி செய்வதற்கில்லாமல் கோவைக்கு மாற்றிப் போய்விட்டார். கல்லூரியில் எங்களைவிட வெட்கப்பட்ட உபாத்திமார் சிலரிடமிருந்து எந்த வித உதவியும் கிடைப்பதற்கில்லை. ஆகவே, இவற்றின் பலன் முதன்முதலாக, அந்த வருஷக்கடைசியில் நான் இங்கிலீஷ், கணிதம் இரண்டிலும் தவறி மேல்வகுப்புக்கு பிரமோஷன் இல்லாமற் போயிற்று—என் கூட்டாளி பாக்கியத்துக்கும் தவறிவிட்டது. கணிதத்தில். மறுவருஷம் அந்தக் காலத்து ரூல்பிரகாரம் மற்ற இரண்டு பாடங்களுக்கும் மாத்திரம் அவள் ஸீனியர் வகுப்புக்குப் போய்விட்டாள். எனக்கு வேறு யாரும் கணிதம் எடுத்துக்கொண்டு துணையாக இருப்பவர்கள் இல்லை. ஆகவே, என்பரிக்ஷை ரிஸல்ட் தெரிந்த அன்று வீட்டுக்குத் திரும்பிவந்து என் அறைக்குள் சென்று ஒரு மூச்சு அழுதுவிட்டு" எனக்கு படிப்பு போதும், இனி மறுபடி அந்தக் காலேஜுக்குப் போகமாட்டேன்," என்று என் பெற்றோர்களுக்குக் கடிதம் எழுதினேன்.

## பாட மாற்றம்

ஜயமும் தோல்வியும் கலந்துதான் வருமென்றும், மனதைத் தளரவிடக்கூடாதென்றும், எதுவும் ஒரு நன்மைக்கே யென்றும் சமாதானம் எழுதினார் தகப்பனார். பிறகு கிறிஸ்துமஸ் விடுமுறையில் வந்து எனக்கு தைரியத்தை உண்டாக்கி இன்னும் ஒருமுறை வேறு ஒரு பாடம் எடுத்துக்கொண்டு ஜூனியர் வகுப்பிலேயே படிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. வகுப்பு மாணவிகளும் தைரியம் சொன்னார்கள். ஆக, வேறு எந்தப்பாடம் எடுத்துக்கொள்ளலாம் என்று ஆலோசித்தோம். எனக்கு மிகவும் விருப்பமான பாடம் கணிதம். ஆனால், தனியாக நான்மாத்திரம் அந்தப் பாடவகுப்புகளுக்குச் சென்று படிக்கவேண்டும்—அதை நினைத்தாலே எனக்கு அசாத்திய பயம் உண்டாயிற்று. 'எந்தப்பாடத்தை அதிக மாணவிகள் எடுத்துக்கொள்கின்றார்களோ அதை நானும் எடுத்துக்கொள்வது, அந்தப்பாடம் எனக்கு இஷ்டமானாலும் இல்லாவிட்டாலும்' என்று தீர்மானித்தேன்—எப்படி தீர்மானம்!! கௌசல்யா, ஹில்டா லாஸாஸ், ரத்னம் அப்பாசாமி மூன்றுபேர் தாவரவர்க்கம் (Botany) வகுப்பில் சேர்ந்தார்கள். அந்தப் பாடத்தின் பெயரையே நான் அதுவரைக்கும் கேட்டிருந்ததில்லை. என்னைத் தவிர 3 பேர் சேர்கின்றார்கள் என்னும் ஒரே காரணத்துக்காக நானும் அந்தப் பாடத்தை எடுத்துக்கொண்டு மறுபடியும் 1909-ஆம் வருஷம் ஜூனியர் வகுப்பில் சேர்ந்தேன்.

## 1908-ஆம் வருஷ கோடைவிடுமுறை

ஆயுளில் ஒருமுறையாவது கங்காஸ்நானம் செய்துவிடவேண்டுமென்று நம் பெரியோர் இஷ்டப்படுவது வழக்கம். அவ்விதமே என் தாயாரும் எப்படியாவது ஒரு நடை காசிக்குப் போய்வர வேண்டுமென்று தீர்மானித்து என் பெற்றோர்கள், நான்—நாங்கள் மூவர் மாத்திரம் கங்கா ஸ்நானத்துக்கு மே மாதம் ஒரு நல்ல நாள் பார்த்துக்கொண்டு, சமயத்துக்கு

வந்த ஒரு பிராம்மணருக்கு யாத்ராதானம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டோம். கல்கத்தா மெயிலேறி மறுநாள் அதிகாலே பெஜவாடாவில் இறங்கி, ஒரு சத்திரத்தில் தங்கி, கிருஷ்ணாநதியில் ஸ்நானம் செய்து சமையல் செய்து சாப்பிட்டோம். பெரிய சத்திரம் நடு முற்றத்தில் ஒரு கிணறு. சமீபத்தில் இருக்கும் அழகிய கிருஷ்ணா நதியில் அமிழ்ந்து குளிர்ச்சியாக ஸ்நானம் செய்யாமல் ஒரு ஆந்திர பிராம்மணர் கிணற்றிலிருந்து ஒரு சிறு செம்பில் 3, 4 செம்பு ஜலம் இழுத்து, உடம்பு பாதி நனைந்தும் நனையாமலும் ஸ்நானம் செய்துவிட்டு ஒரு மடிஸஞ்சியிலிருந்து ஜலத்தையே கண்டிராத ஒரு பழைய அழுக்குப் பட்டை "மடி" யாகக் கட்டிக்கொண்டு கூடத்திலுட்கார்ந்து சிறிது நேரம் ஜபம் செய்துவிட்டு வேறு உலர்ந்த வேஷ்டி கட்டிக்கொண்டு இந்த மடிப் பட்டை மடித்து மடிஸஞ்சியில் வைத்துவிட்டார். "ஆசாரம்" என்பதில் சுத்தத்தைப்பற்றிய உண்மையை எவ்வளவு தூரம் மறந்துவிட்டோம் என்பதை நினைக்காமலிருக்க முடியவில்லை. நிற்க,

## கோதாவரி

அன்று, ஒரு பகல் ரயிலில் ஏறி கோதாவரி ஸ்டேஷனில், ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டில் இறங்கினேம். அவர் ஒரு தமிழ்தேசத்து பிராம்மணர். மனைவியும் ஐந்தாறு குழந்தைகளும். அந்த அம்மாள் பழையகாலத்து அப்பாவி. அவள் என்னைக் கேட்ட வேடிக்கையான விஷயங்கள்—வெள்ளைக்காரர்கள் நம்மைப்போல் மனிதப் பிறவிதானு, அவர்கள் வெள்ளைத் தோல் கடினமாயிருக்குமா அல்லது ரொட்டிபோல மெதுவாயிருக்குமா? வெள்ளைக்கார ஸ்திரீகள் பிள்ளைப்பெறுவது உண்டா, அவர்கள் உடம்பில் நம்மைப்போல இரத்தம் இருக்குமா? அது சிவப்பா,வெள்ளையா? இத்தியாதி. 2 நாள் அங்கிருந்து கோதாவரி, கோடிலிங்கதீர்த்தம் ஸ்நானம் அந்த ஊரில் ஜயிலில் கைத்தொழில் பார்த்துவிட்டு 2 நல்ல சால்வைகள் வாங்கினேம். பிறகு கல்கத்தா போனேம்.

## காசியின் காட்சி

என் தங்கை பாலமும் அவள் கணவரும் அங்கிருந்தனர். என் குஞ்சியம்மாள் பெண் செல்லத்தின் மைத்துனர் வீட்டிலும் பாலத்தின் வீட்டிலுமாக நாலைந்து நாட்களிருந்து கல்கத்தாவிலுள்ள சில முக்யமான இடங்களைப் பார்த்துக்கொண்டு பிறகு காசிக்கு ஒரு நாள் பகல் 12 மணிக்குப் போய்ச் சேர்ந்து ஹனுமான் கட்டத்திலுள்ள சிவ மடத்தில் தங்கினேம்—நாலைந்து நாள் அலைச்சல் தாங்காமல், சாப்பிட்டுவிட்டு 1 மணி முதல் மாலை 6 மணி வரைக்கும் தூங்கினேன்; என் தாயார் எழுப்பினபோது தூக்கக் கலக்கத்துடனேயே எழுந்து சாப்பிட்டுவிட்டு உடனே படுத்து மறுபடி தூங்கிவிட்டேன். அத்தனை சிரமம். காசியில் ஒரு வாரம் இருந்தோம்.

நாங்கள் போனசமயம் கோடையாதலால் கங்கையில் அரை ஆறே ஜலம் இருந்தது. குறுகின தெருக்கள், ஜனநெருக்கம். கங்கைக்கரை ஓரமாக 60, 70 ஸ்நான கட்டங்கள். முக்கியமான சில கட்டங்களில் ஸ்நானம் செய்தோம். விச்வேச்வர கட்டம் ஒன்று. அங்கு 3 பக்கமும் ஜலம் சூழ்ந்து இருக்கும்படி நதிக்குள் கொஞ்ச தூரம் வரைக்கும் கட்டப்பட்டுள்ள ஒரு உயரமான, அகலம் நீளமுள்ள மேடை; அங்கு பிணங்களைக் கொண்டுவந்து எரிக்கின்றனர். அதிகமாக பிணங்களை எரிக்கவேண்டியிருந்தால், நதியில் பிரவாகமும் நிறைய இருந்தால் $\frac{3}{4}$ பாகம் எரிந்தவுடனேயே எலும்பும் தோலுமாயுள்ள சரீரத்தை கங்கையில் எறிந்துவிட்டு அடுத்த பிணத்தை எரிப்பதற்கு சிதையடுக்குவார்களாம். அந்தக்காட்சி எனக்கு சற்று பார்ப்பதற்குக் கஷ்டமாகவே யிருந்தது--புனிதமான கங்கை

யில் அரை குறையாக எரிந்த சரீரங்களை எடுத்துப் போட்டது அருவருப்பாயிருந்தது. இறந்துபோன ஒரு கைக்குழந்தையை மஞ்சள் துணியால் மூடி, ஒரு படகில் எடுத்துக்கொண்டு நடு ஆற்றுக்குச் சென்று, அதை ஜலத்தில் போட்டுவிட்டார்கள். இறந்துபோன பூனை நாய் எலி இவைகள், ஊரிலுள்ள சாக்கடை ஜலம் எல்லாம் கங்காமாதாவிடம் ஐக்யம். ஜனங்களுக்கும் அத்தனை சுத்தம் போதாது—காசியில் பெஸண்டு அம்மையாரின் கல்லூரி ஒன்று, (லைப்ரெரி) புத்தகசாலை, இன்னும் ஒன்றிரண்டு முக்யமான இடங்கள், கடைகள், (பாத்திரம் ஜவுளி) எல்லாம் சுற்றிப் பார்த்தோம்.

## திரிவேணி சங்கம்

அடுத்த இடம் நாங்கள் சென்றது அலகாபாத். அங்கும் நம் தென்னிந்திய வைதிகர் ஒருவருடைய வீட்டில் தங்கினேம். 3 நாள் இருந்தோம். ஸ்வேத கங்கையும் நீல யமுனையும் அந்தர்வாகினி ஸரஸ்வதியும் சேரும் திரிவேணிசங்கம். இரண்டு பெரிய நதிகள் சேரும்போது அந்த வேகத்தில் நடுவில் சுழல் கிளம்பும்; அது ஆழத்திலிருந்து ஊற்றெடுத்துப் பெருகும் அந்தர்வாகினியாகும். மிற்க,

அந்த ஊரில் ஒரு முக்கிய விசேஷம் திரிவேணி ஸங்க இடத்தில் வேணிதானம் செய்வது. தம்பதிகளாயிருப்பவர்கள், கணவன்-மனைவியின் கூந்தலைப்பின்னி அந்தப்பின்னல் நுனியிலிருந்து கொஞ்சம் கத்தரித்து குறைந்தது 15 ரூபாயாவது தக்ஷிணையுடன் ஒரு பிராமணனுக்குக் கொடுப்பது. என் தகப்பனருக்கு இதில் நம்பிக்கை கிடையாது. இதெல்லாம் வைதிகர்கள் தங்கள் வரும்படிக்காக ஏற்படுத்திய யுக்திகள் என்பார். என் தாயாரும் சிறந்த விவேகி, அஜ்ஞானம் கிடையாது, இருந்தாலும் நாலு பேர் செய்வதுபோல நாமும் செய்வதில் நஷ்டமொன்றுமில்லையே என்று நினைப்பார். நாங்கள் தங்கியிருந்த வீட்டு வைதிகர், என் தகப்பனரை வசப்படுத்த முடியாதென்று தெரிந்துகொண்டு, என் தாயாரிடம் தன் கதைகளை அளக்க ஆரம்பித்தார். அவர் சொன்னதாவது:

“திரிவேணிக்கு வருபவர்கள் வேணிதானம் செய்யாமல் போகக் கூடாது, அது மகத்தான பாவம்; இதற்குமுன் வந்த ஒருவர் நாஸ்திக புத்தியுடன் வேணிதானம் செய்யாமல் கயைக்குப் போனராம், போன இடத்தில் அவருக்கு அசௌக்கியம் ஏற்பட்டு நிரம்ப ஆபத்தான நிலைமைக்கு வந்துவிட்டாராம். உடனே சுற்றியிருந்தவர்கள் ‘இது கங்கா தேவிக்கு வேணிதானம் செய்யாத தெய்வகுற்றம்’ என்று சொன்னபிறகு இவர்திரும்பி பிரயாகைக்கு வந்து வேணிதானம் செய்தபிறகுதான் உடம்பு சௌக்கியமாகி ஊர் திரும்பினராம். இன்னும் ஒரு தம்பதிகள் வேணிதானம்செய்யமல் ஊருக்குத்திரும்பிப்போகும்போது ராஜமகேந்தரம் போவதற்குள் கணவர் ரயிலிலேயே இறந்துபோய்விட்டாராம். மனைவியின் சொப்பனத்தில் கோதாவரியம்மன் வந்து, “என் தங்கைக்கு உன் வேணியைக் கொடுக்காமல் வந்தாய், இப்போது அதை முழுவதும் நான் வாங்கிக் கொள்ளப் போகிறேன்” என்றாராம். பிறகு ராஜமகேந்திரத்தில் இறங்கி இறந்துபோன கணவருக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகள் யாவும் செய்து தன் முடி முழுவதையும் கோதாவரி யம்மனுக்குக் கொடுத்துவிட்டுப் போனளாம்...“இந்தமாதிரிக் கதைகளை சாமர்த்தியமாகச் சொல்லும்போது என் தாயாருக்கு சற்று சபலந்தான்—ஆயினும் கடைசியில் வேணிதானம் கொடுக்கவில்லை— “உங்கள் கணவர் பிடிவாதமாகயிருக்கிறர், ஆகவே உங்களுக்காகவேண்டி 5 ரூபாய் வாங்கிக்கொள்கிறேன். வேணிதானம் செய்துவிட்டே போங்கள்” என்று ஆனமட்டும் அந்த வைதிகர் சொல்லியும் அது நடக்கவில்லை,

பிரயாகையில் கங்கைக்கரையில் ஒரு கோட்டை; அதன் பக்கத்தில் பூமியடிக்குக் கிழ் படிக்கட்டின் வழியாக இறங்கிச்சென்றால் அங்கு பல விதமான வியாபாரங்கள். கரையிலிருக்கும் ஆல விருக்ஷத்தின் ஒரு விழுது வேர் என்று இலை, பூ ஒன்றுமில்லாத ஒரு மரக்கட்டையின் அருகில் ஒருவன் உட்கார்ந்து பிச்சைவாங்குபவன். எத்தனையோவித பிச்சைகள். கங்காமாஜிக்கு அபிஷேகம் அர்ச்சனை செய்ய பால், புஷ்பம் இவற்றின் வியாபாரம். தர்ப்பணம் சங்கல்பம் செய்துவைக்க வைதிகர்களின் கூட்டம். வேணிதானம் செய்பவர்கள் படகிலேறிக்கொண்டு திரிவேணி சங்கத்திற்கு நடு ஆற்றுக்குப் போகவேண்டும். கலியாணம் போல புருஷன் மனைவியும் ஆடை ஆபரணங்கள் அணிந்துகொண்டு பந்துக்கள் சிநேகிதர்களுடன் படகில் போகும்போது அதில் ஒரு பக்கத்தில் நாதசுரம் வாசித்துக்கொண்டு போகின்றவர்கள்.

அந்த ஊர்க்காரர்கள் அநேகர் கங்கையில் பிரதிதினம் ஸ்நானத்துக்கு வருபவர்கள். சிறுசிறு சட்டிகளில் கெட்டியாக உறைந்த தயிரை வாங்கி வந்து அதை தலையில் தேய்த்துக்கொண்டு, கடலைமா, பயத்தமாவைக் கரைத்து தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்வார்கள். ஏழைகள் கங்கையிலுள்ள சன்னமான வெள்ளைக் களிமண்ணைக் கரைத்து தலை தேய்த்து ஸ்நானம் செய்கின்றார்கள். புடவை, துணிகளை நம்மைப்போல கல்லில் தோய்ப்பதில்லை; கல்லில் துணியை நனைத்து வைத்து, ஒரு மரக்கட்டையால் தப்புத்திப்பென்று அடிக்கின்றார்கள். அதன்பிறகு அதை ஜலத்தில் அலசிப் பிழிகின்றார்கள். அங்கு அநேகம் பெண்கள் கோஷா. தலையையும் முகத்தையும் மூடிக்கொண்டிருக்க வேண்டும். உலர்ந்த புடவை கட்டிக்கொள்ளும்போது தலையையும் முகத்தையும் மூடிக்கொள்ளும் அவசரத்தில் உடம்பெல்லாம் தெரிந்தால்கூடப் பரவாயில்லை!...இதெல்லாம் கங்கைக்கரையில் உட்கார்ந்து பார்ப்பதற்கு நிரம்ப வேடிக்கையாயிருக்கும்

(அடுத்த இதழில் கயாக்ஷேத்ரம்.)

---

ஸ்ரீமதி K. மல்லிகைசுந்தரம் குட்டியாபிள்ளை

# வைரமே பாஷாணம்

அன்று வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. விடிந்தால் தீபாவளி. "விடிந்தால் தீபாவளியோ இல்லையோ சாஸ்திரத்திற்காவது மழை பெய்ய வேண்டாமா?" என்று பக்கத்து வீட்டுப் பாட்டி சொல்வது ரங்கநாதன் செவியில் ஸ்பஷ்டமாகக் கேட்டது. அன்றைய வானம்போலவே அவன் உள்ளமும் இருண்டு கிடந்தது. மறுநாள் வரப்போகும் தீபாவளிப் பண்டிகையை கொண்டாட உலகமே குதூகலத்தில் ஆழ்ந்திருக்கும்போது, ரங்கநாதன் சென்ற தீபாவளியின்போது, இதே நாளில் தன் வாழ்வில் இடித்த பேரிடியை எண்ணி, எண்ணி, ஒரே கவலைக்குன்றாய்ச் சமைந்து உட்கார்ந்திருந்தான். மனதிலே புதைந்துகிடந்த துயரம் பீறிட்டுக்கொண்டு வெளிக்கிளம்பியது. படுக்கையில் சாய்ந்த வண்ணம், சுவரில் மாட்டப்பட்டிருந்த மனைவியின் படத்தை கண்களில் நீர்சோர உற்று நோக்கினான். "வாசுகீ! உத்தமியே!" என்று அவன் வாய் முணுமுணுத்தது. அகத்திலும், புறத்திலும், எங்கும் சூன்யமே வாசஞ் செய்வதுபோலத் தோன்றிற்று.

பித்தன்போல எழுந்து சென்று தன் கைப்பெட்டியைத் திறந்து அதனடியில் இருந்த வெல்வெட் நகைப்பெட்டியை எடுத்துக்கொண்டு வந்து மீண்டும் படுக்கையில் சாய்ந்தான். 'டால்' அடித்துக்கொண்டிருந்த அந்த



183146.

பேஸரி —இரு கற்கள் பெயர்த்தெடுக்கப்பட்ட அது— அவனுக்கு எத்தகைய துயரத்தை விளைவித்ததோ! உடல் குலுங்கக்குலுங்கப் புலம்பினன்.

ரங்கநாதனும் வாசுகியும் மிகவும் அன்யோன்யமான தம்பதிகள். ஒருவரிடம் ஒருவர் உயிரையே வைத்திருந்தனர். இருவருடைய அன்பையும் எடைபோட்டு நிறுத்தாலும் ஒன்றுக்கொன்று தாழ்வுருது. ஆனல், எத்தனைக்கு எத்தனை அதிகம் அன்பு வைத்திருந்தானே அத்தனைக்கு அத்தனை அவளிடம் அதிகம் கடுமை காண்பிக்கவும் தயங்கமாட்டான்.

பெண்மையின் அழகெல்லாம் திரண்டு ஓர் உருவாகி வந்தவள் வாசுகி. கடைந்தெடுத்தது போன்ற அங்க அவயவங்களின் அமைப்பும், தங்க நிற மேனியும், சாந்தமும், புன்சிரிப்புத் தவழும் அந்தக் குழந்தை முகமும், பார்ப்பவர் கண்களை மீட்க முடியாதபடி செய்துவிடும். அந்த கவர்ச்சிதானே ரங்கநாதனை ஆட்கொண்டது. அந்தக் கவர்ச்சிதானே அவன் உள்ளத்திலும் ஒரு தீய விதை விதைத்தது.

'பெண்களுக்கு அழகுதான் சத்ரு', என்று சொல்கிருர்களே அது எத்தனை உண்மையானது? அந்த அழகுதானே அவள் வாழ்வை அஸ்தமிக்கச் செய்த விதிக்குக் கருவியாக அமைந்தது.

அழகுக்கும், அன்புக்கும் அடிமையான ரங்கநாதன், மனைவியின் அழகில் மகிழ்வதுபோக, அந்த அழகில் சந்தேகமும், 'பிறன் திருஷ்டியில் படக்கூடாது' என்ற விபரீத புத்தியும் வளர்த்துவந்தான். அதன் பயனுக அவனுடைய அடக்குமுறைச் சட்டங்கள் வேளைக்கொன்ருகத் தலைவிரித்தாடின. கண்ணுக்கு ரம்யமாகக் காட்சிதரும் அலங்காரங்கள், செய்யக்கூடாது,—ஆடாத கூத்து ஆடினுலும் தெருவாசல்படி எட்டிப் பார்க்கக்கூடாது. பிறன் திருஷ்டியில் படக்கூடாது, தன்னுடன் பிறந்த அண்ணன், தம்பி இவர்களுடன்கூட நெருங்கிப்பழகக்கூடாது, மொத்தத்தில் ஆண்வாடையே (தன்னைத்தவிர) கூடாது என்ருல் அதிகம் விஸ்தரிப்பானேன்.........
ஒரு சிறைக் கைதிக்கும் அவளுக்கும் வித்தியாசம் மிகச் சொற்பமே.

அவள் அழகாகயிருந்தாலும், இல்லாவிட்டாலும் தனக்கு அவள் மீதுள்ள அன்பு குறையப்போவதில்லை. அப்படியிருக்க அவள் எதுக்கு அலங்காரம் செய்துகொள்ளவேண்டுமென்பது அவன் கொள்கை. ஆனல் வாசுகி சின்னஞ் சிறுசு. ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்ட ஒரு முதிர்ச்சியைத் தவிர, அவளுடைய இளமை, அழகு எல்லாம் எங்கேபோய்விட்டன. அழகாகத் தலைவாரிப் பின்னி, அதிலே ஒரு பந்து புஷ்பத்தை வைத்துக்கொள்ள அவளுக்குக் கொள்ளை ஆசை. ஆனல், கணவனுடைய மனம்? "மஞ்சளும், குங்குமமும், புஷ்பமும் மாங்கல்ய விருத்திக்காகவும், சுமங்கலித்வத்துக்கடையாளமாகவும் வைத்துக்கொள்ளும் சின்னம். புஷ்பத்தை வெளியில் தெரியும்படியாக வைத்துக்கொண்டு, அலங்காரப் பொம்மையாகக் காட்சி அளிக்கவேண்டுமாக்கும்" என்று வெடுக்கென்று சொல்வான் ரங்கநாதன். அப்போது வாசுகியின் மனம் விண்டுபோய்விடும். ஆனல், மறுக்ஷணமே, அதற்கொரு சமாதானம் கற்பித்து மனதைச் சாந்தப்படுத்திக்கொள்வாள். அதனல் அவள்மீது அவனுக்கு அன்பு இல்லை என்று அர்த்தமா? இல்லை. அந்த அளவற்ற அன்புதானே அவனை இப்படியெல்லாம் ஆட்டிவைக்கிறது, தன்னொருவனுக்கே உரிமையான அப்பொருள் பிறன் திருஷ்டியைக் கவரக்கூடாதே என்ற விபரீதப் போக்கையும், மன நிம்மதியின்மையையும், அவநம்பிக்கையையும் அளித்துவந்தது. அதனல் குடும்பத்தில் சச்சரவுகளும் தோன்றவாரம்பித்தன.

வாசுகிக்கு இந்த கட்டு, காவல் எல்லாம் பிடிப்பதில்லை. "புருஷன், மனைவி இருவரும், பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பூரணமாக நம்பித்தான் வாழ்க்கை நடத்தவேண்டும். மனம் காவலா? மதில் காவலா?" என்று

அவன் சில சமயங்களில் கணவனுடைய அடக்குமுறைச் சட்டங்களுக் காற்ருது வாதம்செய்வது முண்டு. "மனக்காவலுக்கு மதில் காவலும் அவசியம். மிருகங்கள் பயிரை மேயாதிருப்பதற்கு வேலி போடுவது போல்", என்றெல்லாம் எதிர்வாதம்செய்து அவள் நாவைக் கட்டிவிடுவான்.

பெண்பேதை இந்த அழகைப்படைத்த பிரமனைத்தான் நொந்து கொள்வாள். ஒரு காலத்தில் தன் அழகைப்பற்றி கர்வங்கொண்டிருந்தது போக, இப்போது இந்த அநித்ய அழகே, அவள் வாழ்வைக் குலைக்கும் புல்லுருவியாக முளைத்திருப்பதை நினைக்க, அவள் நெஞ்சு புண்ணுகியது.

ஆனல், அடிக்கவந்த கை அணைக்க வந்தபோது, அக்னி ஜ்வாலையை அள்ளி வீசிய கண்கள், காதலையும், கருணையையும் பொழியும்போது, வசைமாரி பொழிந்த வாய் தேன்மாரி பொழியும்போது, பேதை தன்னையும் மறந்து, கணவனுடைய அன்பில், உயிரில், உணர்வில் இரண்டறக் கலந்து விடுவாள். "பெண்களுக்குக் கற்பே பூஷணம், கணவனுடைய அன்பே சகல பலமும்" என்ற தத்துவத்தை கடைப்பிடித் தொழுகும் உத்தம சதி.

அன்று என்ன பொல்லாத வேளையோ, மறுநாள் பண்டிகையாத லால், ஜாமத்திற்கேஎழுந்து வேலைசெய்யவேண்டுமே என்று மாலையிலேயே சில காரியங்களைச் செய்துகொண்டிருந்தாள். அப்பொழுது, பூக்காரி மல்லிகையும், கனகாம்பரமுமாகக் கொண்டுவந்தாள். பூவைப் பார்த்த தும், அவள் மனதிலே புதைந்து கிடந்த ஆசை மெல்லத் தலைதூக்கியதால் நான்கணுவிற்கு வாங்கிவிட்டாள். ஆயினும் அவள் மனம் 'அவர் மனசுக்கு விரோதமாக நடந்துகொண்டால்', என்றெண்ணும்போது, 'படபட,' வென்று அடித்துக்கொண்டது. அப்போது, அத்தி பூத்தாற்போல வந்தாள் அவள் நேசி சண்பகம். நான்கு குழந்தைகளுக்குத் தாயாகியும், நல்ல நவ நாகரீகமாக அலங்கரித்துக்கொண்டு, தனது நீண்ட கூந்தலை அழகாகப் பின்னிவிட்டு, அதிலே ஒரு பந்து புஷ்பத்தை தொங்கத்தொங்க வைத்திருந் தது எவ்வளவு ரம்யமாயிருந்தது! வாசுகியின் ஆசைக்கும் அணைபோட முடியவில்லை. சண்பகத்தின் வற்புறுத்தல் வேறே அவள் ஆசைக்குத் தூபம் போட்டது. சண்பகம் சற்றுநேரம் இருந்துவிட்டுப் போனுள்.

அவளை வழியனுப்பவந்த வாசுகி, அவள் போவதைப் பார்த்துக் கொண்டே வாயற்படியிலேயே நின்றுவிட்டாள். அழகு எங்கே யிருந் தாலும், எவருடையதாயிருந்தாலும், யாவரிடத்திலிருந்தாலும், பார்ப் பவர் கண்களுக்கு அது விருந்தாகத்தான் இருக்கும். பார்ப்பதில் என்ன தோஷம் இருக்கிறது! மனம் நிஷ்களங்கமாக இருக்கவேண்டும். எதிர்த்த வீட்டில் பண்டிகைக்காக வந்த அவாத்து மாப்பிள்ளை மாடி ஜன்னலில் நின்றிருந்ததை அவள் எங்ஙனம் அறிவாள் பாவம்! பொல்லாத வேளை வந்துவிட்டால், எல்லாமே அதற்கு அநுசரணையாகத்தான் வரும்போலும்.

அந்தச் சமயத்திலே, கடைவீதிக்குச் சென்றிருந்த ரங்கநாதனும் வந்து விட்டான். மனைவி, 'அப்ஸரஸ்' போல சிங்காரித்துக்கொண்டு, வீதியில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும், அவன் ரத்தம் கொதித்தது. கடுஞ் சினம் மண்டி எழுந்தது. நாலாபக்கமும் சுழன்ற அவன் கண்கள் எதிர்த்த வீட்டு மாடி ஜன்னலை நோக்கி நிலையாக நின்றன. "சீ! உள்ளே போடி தேவடியாளே!" என்று கர்ஜித்தான். இடியோசைகேட்ட நாகம் போல நடுங்கிவிட்டாள் வாசுகி. அதற்குள் அக்கம்பக்கம் கூட்டம் கூடி விட்டது. அவமானத்தால் அவள் உடம்பு சாணுகக் குன்றியது. எரிமலை வெடித்துக் கக்கியதுபோலிருந்தது அந்தமொழி. ஆத்திரம் அனர்த்தத்தைத் தானே விளைவிக்கும். ஆய்ந்தோய்ந்து பாராமல், கண்முடித்தனமான ஆத்திரத்தில், அவன் படுத்திய பாடும், மொழிந்த வசைமாரியும், எண்ணி லடங்கா: எழுதில் ஏட்டிலுமடங்கா.

அவள் பொன் நிறமேனியிலே, ஆங்காங்கே கருப்பாக கன்னிப் போய் இரத்தம் கட்டிக்கிடந்ததைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. ஆனால் கணவன், ஒரு பாபமு மறியாத தன்னை 'பதிதை', என்று பலதரம் சுட்டிக்காட்டிய அந்த கடுரச்சொல்லின் தகிப்பைப் பொறுக்கவொண்ணாது தவித்தாள். "ஓசை அலைகளாகிய இடியின் வேகத்தைவிட, வெளிச்ச அலைகளாகிய மின்னல் வேகமே, அதிக சக்தி வாய்ந்ததல்லவா!" அது போல அடித்த அடியின் வேகத்தைவிட அவன் சொல்லின் வேகமே அவளுக்கு தன் உயிர் மீதுள்ள ஆசையை அறவே ஒழித்தது. "மானம் போனபின் இனி இந்த வாழ்வு எதற்கு?" என்று தன் வாழ்வையே வெறுத்தாள். அப்போதும் அவள் கடமையில் தவறினாளில்லை. கணவனுக்குப் பிடித்தமான பதார்த்தங்களாகச் சமைத்தாள். பதார்த்தங்கள் ஆறி அவலாகப் போனதேதவிர, ரங்கநாதன் சாப்பிட மறுத்துவிட்டான்.

இரவு நடுநிசி. தொட்டிலில் கிடந்த பிள்ளையின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள் வாசுகி...தூக்கத்திலே கன்னங்குழியச் சிரித்த குழந்தையின் மோஹனபிம்பம் அவள் வைராக்ய உள்ளத்தைக் கூடச் சிறிது தளர்த்தியது. குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். "என் செல்வமே! உன்னை தாயில்லாக் குழந்தையாக ஆக்கிவிட்டுச் செல்கிறேனடா! என் ஸ்தானத்திலிருந்து அவர் வாழ்வை நிரப்ப உன் அப்பாவுக்கு ஒருத்தி வந்துவிடுவாள். ஆனால் உனக்கு! தாய் ...தாய்"...என்று அலற்றினாள். இதயம் வெடிக்கப் புலம்பினாள். ஆனால் முறிந்த பால் எங்கேயாவது நல்ல பாலாவது உண்டா? அதுபோல அவள் முறிந்த மனமும் மீண்டும் வைராக்ய எல்லையை அடைந்துவிட்டது.

விடியற்காலை மூன்று மணி இருக்கும். ஏதோ துர்ச்சொப்பனங் கண்டு விழித்துக் கொண்ட ரங்கநாதனுக்கு கீழ்க்கட்டிலே குழந்தை வீறிட்டலறுவது கேட்டது. விடுவிடென்று மாடியிலிருந்து இறங்கி ஓடி வந்தான். வாசுகி படுத்திருந்த மாதிரி அவனுக்கு திக்கென்றது. அவளை எழுப்புவதற்காக அவளுடலைத் தொட்டதும் "ஐயோ!" என்றலறினான். தலை மாட்டில் கழட்டி வைக்கப்பட்டிருந்த வைரபேஸரி, அவனுக்கு உண்மையை உணர்த்தி விட்டது. அவள் யாக்கையாகிய கூண்டிலிருந்த ஆத்மப்பறவைக்கு விடுதலை அளித்தது அந்த வைர பேஸரியே அன்றோ! விடுதலை அடைந்த பறவை வியனுலகை நோக்கிச் சென்றுவிட்டது.

ரங்கநாதன் கதறினான். முட்டிக்கொண்டான். மோதிக்கொண்டான் கண் கெட்டபிறகு சூர்ய நமஸ்காரம் செய்வதுபோல. ஆவி நீத்த அந்த வெற்று உடலைப்பார்த்தபிறகுதான் அவனுக்கு ஞானோதயம்உண்டாகியது. உயிரைக் கொண்டு போகும் யமனுக்கு, பிணி உதவுவதுபோல உதவி விட்டதா என் ஹீனச்சொல் உன் உயிரைத்திருணமாக விட!" என்று கதறிக்கதறி, இதயம் நைந்து மூர்ச்சித்து விழுந்தான்.......

'பொச, பொச,' வென்று தூறிக் கொண்டிருந்த மழை, படபட வென்று கொட்டியது. ரங்கநாதன் சுய உணர்வு அடைந்தான். குமுறிக் கொண்டிருந்த அவன் நெஞ்சிலே பதிந்து கிடந்த நகைப்பெட்டியை எடுத்து மீண்டும் பார்த்தான். "வைரமே பூஷணம்! வைரமே பாஷாணம்!" என்று அவன் வாய் முணுமுணுத்தது. கண்களில் மடைதிறந்த வெள்ளம்போல நீர் பெருக்கெடுத்தது. அவன் நிலைக்கு இரங்கி வானமும் கண்ணீர்விட்டதுபோல மழை தாரைதாரையாகப் பெய்யவாரம்பித்தது.

---


## ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்

ஸ்ரீ காஞ்சீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசாரியர்

உரையுடன் உயரிய பதிப்பு ரூ. 1




"உலகம் இப்போது எதன்மீது நிற்கிறதுதெரியுமா! பணத்தின் மீதும் பட்டம் பதவி முதலிய ஆடம்பரங்களின் மீதுந்தான் நிற்கிறது. அடாடாடா!...என்ன ஆச்சரியமான கலிகாலமப்பா... என் வயசு காலத்திலேயே நான் எத்தனை விசித்திரங்களை இக் கண்களால் பார்த்திருக்கிறேன்" என்று வயது முதிர்ந்த ஒருவர் தன் மனைவியுடன் சொல்லி, வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றார்.

அங்கு அவசர அவசரமாக வந்த ஒருவர் இங்குள்ள தடபுடலைப் பார்த்ததும் "இன்றென்ன விசேஷம் தாதா?...இத்தனை கும்பலாக இருக்கிறதே!" என்று வியப்புடன் கேட்டார்.

கிழவர்:—விசேஷம் இல்லாமலா கும்பல் கூடும்? பார்க்கும் ஜனங்களுக்காவது அறிவு இருக்கிறதா! பல்லைப் பிளந்துகொண்டு இடிபட்டவாறு நிற்கிறார்களே! யாரோ ஒரு சினிமாக்காரியாம், நாடகக்காரியாம். அவள் பக்திப்பரவசமுண்டாகிப் பகவானைச் சேவிக்க வரப்போகிறாளாம். தேவலோகத்திலிருந்து தேவமாது யாராவது வந்தால்கூட இத்தனை தடபுடல் நடக்காது. தினம் மாலை ஏழு மணிக்குத் திறக்கும் கோயில் இன்று 5–மணிக்கே திறந்தாகி விட்டது. தடபுடல் செய்வதையோ அளவிட்டுச் சொல்லமுடியாது.

வந்தவர்:—பூ!...நாடகக்காரிக்கும் சினிமாக்காரிக்குமா இத்தனை அமர்க்களம். இந்தக் கூட்டத்தையும் அலங்காரத்தையும் பார்த்தால் யாராவது மகா உத்தம பாகவத கோஷ்டிகளோ, பஜனை கோஷ்டியோ யார் வருகிறார்களோ என்று நினைத்துத்தான் கேட்டேன். சினிமாக்காரிக்கா இந்த வைபோகம்?...என்று வெகு அலக்ஷிய பாவத்துடன் கூறிவிட்டுப் போய்விட்டார்.

கூட்டத்தில் நெக்கியடித்துக்கொண்டு நிற்கும் ஒருவர் "ஆகா! பிறந்தாலும் இவளைப் போலல்லவா பிறக்கவேண்டும்? பேரைக் கேட்கும்போதே ஜனங்களின் ஆரவாரமும் உத்ஸாகமும் பொங்கி யல்லவா வழிகிறது. நேற்று ஒரு பஜனை கோஷ்டி வந்து சென்றதே, அது யாருக்காவது தெரியுமா?"...என்பதற்குள் மற்றொருவர்,

"ஏன் சார்! அதுமாதிரி விஷயங்களை தினப்பத்திரிகையில் போட்டால்தானே தெரியும்? இதோ! 'சினிமாராணி, நாடகநட்சத்திரம், கலிகாலக் குயில் ஸ்ரீமதி அம்சகுமாரி பகவானைஸேவிக்கக் கோயிலுக்கு வரப்போகிறாள்' என்பதைப் பத்திரிகையில் பார்த்துத் தானே நாங்கள்கூட வந்தோம். இதுபோன்ற முக்ய விஷயங்களைப் பொது ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டிய கடமை பத்திரிகைகளைச் சேர்ந்ததல்லவா...பழயகாலத்தைப்போல எந்த விஷயத்தையும் தண்டோராவின்மூலம் பறைசாற்றிவிட்டால் தேவலை" என்றார்.

முதலில் பேசிய கிழவர் சற்று வயதானவர், உலகானுபவத்தை நன்றாக உணர்ந்தவர். "பிறந்தாலும் இவளைப் போலல்லவா பிறக்க வேணும்" என்றதைக் கேட்டு அவர் முகத்தைச் சுளித்துக் கொண்டு "ஸார்! உங்களுக்குக் குழந்தைகள் இருக்கிறதா?"

திடீரென்று தன்னை இம்மாதிரி கேட்டதும் அந்த மனிதன் வியப்புடன் "எனக்குக் குழந்தைகள் இல்லை சார்!" என்று முடிப்பதற்குள் கிழவர் பேசத் தொடங்கி, "ஐயோ பாவம்!...ஆண்டவனுக்குக்கூட கண்ணில்லையா? இத்தகைய உங்களுக்குக் குறைந்தது 5 பெண்களாவது பிறந்து நாடக நட்சத்திரமாயும் சினிமா ராணியாயும் இருந்து உமது கண்ணால் அப் புகழைப் பார்த்துவிட்டால் போதும்! அதுதானே உங்களுக்கு ஆசை?....உண்மையில் நீர் உலகமறியாத மனிதர் என்றுதான் நினைக்கிறேன். மக்களைப் பெறுவ

தற்கு முன்னும் சரி, பின்னும் சரி, உலகத்தினர் உயர்ந்த முறையில் மதித்துப் போற்றும் நிலைமையில் தம் மக்கள் இருக்கவேண்டும் என்று ப்ரார்த்தனை செய்வார்கள். நீங்கள் என்னடா வென்றால் இந்தக் குப்பைக்கு ஆசைப்படுகிறீர்கள். கடவுள் கிருபையில் உங்களுக்குப் பெண்பிறந்தால் அதை நமது பாரததேசத்தின் புகழ்பெற்ற சிறந்த நாரீமணிகளைப்போலும், உதாரணப் பெண்மணிகளைப் போலும் இருக்கவேண்டுமென்று ப்ரார்த்தனை செய்யுமய்யா! நான் இவ்வுலகத்தின் ஜாம்பவான் தெரியுமா? எத்தனை விதமான அனுபவம் வேண்டுமானாலும் என்னைக் கேளும், நான் சொல்லுகிறேன்; 'எதடா இந்தக் கிழம் ஏதோ வலுவில் வந்து உளறுகிறது' என்று கூட நீங்கள் நினைக்கலாம். அந்த நினைப்புகூட உலகானுபவம் இல்லாமையினால் உண்டாகும் நினைப்பே தவிர வேறு ஒன்றுமில்லை... என்று சொல்லிக்கொண்டே நடந்தார்.

முதலில் சொல்லிய அப்பாஸாமி என்பவர் "தாதா! தாதா! இருங்கள்; போகலாம். இத்தனை கும்பலில் நெருக்கியடித்துக் கொண்டு நீங்கள் எப்படிப் போவீர்கள்; இத்தனை கும்பலும் காத்திருக்கும் ப்ரக்ருதி எப்படிதானிருக்கிறாள், என்னதான் ஸ்வாமிக்குக் கொடுக்கிறாள் என்று பார்க்கவேண்டாமா...தாதா! இருங்கள்..." என்று எத்தனை கத்தியும் கிழவர் நிற்கவேஇல்லை.

சரியாக மாலை ஆறுமணி அடித்ததும் ப்ரம்மாண்ட கார்கள், ஒன்றன்பின் ஒன்றாக பத்து கார்கள் வந்து நின்றதுதான் தாமதம் ஒரே கூச்சலும் ஆரவாரமும் 'உஸ்ஸ்' என்ற விசிலடிக்கும் கோர சப்தமும் ஒன்றுகூடி ஏதோ ப்ரளயந்தான் வந்துவிட்டதோ என்ற உணர்ச்சி இந்த விஷயத்தில் பற்றில்லாதவர்களுக்கு உண்டாகியது. "அதோ! அதோ! அவள்தான் அம்ஸாதேவி...அதோ அவள் தான் குயிலி...இதோ பாரு. இவன்தான் சுகுமாரன்" என்று தம் தமக்குத் தெரிந்த பேர்களை எல்லாம் சொல்வதில் ஒரு மகிழ்ச்சி; பார்ப்பதில் ஒரு ஆனந்தம்...இந்தத் திருவிளையாடல் புருஷர்களிடத்தில் மட்டுமா? பெண்களிடத்திலும் இருக்கிறதென்றால் சொல்லவா வேண்டும்?

பரமபதத்திற்குச் சென்று ஸ்ரீமகாலக்ஷ்மியையும் நாராயணனையும்...கைலாயத்தில் ஸ்ரீபார்வதி சங்கரரையும், ப்ரம்மலோகத்தில் ஸரஸ்வதி சதுர்முகனையும் நேரில் கண்டால் கூட அத்தனை ஆனந்தமும் பரவசமும் உண்டாகுமோ உண்டாகாதோ! இப்போது கரை புரளும் ஆனந்தத்தின் உச்சத்தை எழுதி முடியாது.

"எந்த விஷயத்திற்கும் புகழ்ச்சி இருப்பதுபோல் மகிழ்ச்சியும் இருப்பது சகஜமல்லவா? என்னதான் அழகாயிருக்கட்டும், பாட்டு பாடட்டும்...முக்யமாய்ப் பெண்களுக்குக்குரிய சிறந்த ஆபரணம் ஆகிய நெறியும் ஒழுக்கமும் இல்லாத அஸத்துப் பிண்டத்திற்குச் செய்யும் புகழ்ச்சியும் பிணத்திற்குச் செய்யும் அலங்காரமும் ஒன்றுபோலத்தா னிருக்கிறது. உதவாக்கரைப் பிண்டம்" என்று சிலர் விமர்சனம் செய்தார்கள்.

"சினிமாக் கலை என்னவோ மிகச் சிறந்த கலைதான். அந்த ஸ்தாபனத்தின்மீது பழிச்சொல் சொல்ல யாருக்கும் புத்திகெட்டு விடவில்லை. அந்தக் கலையை முறையில், அழகாய், நாணயமாய் அப் பழுக்கற்ற தூய முறையில் நாம் வளர்க்காமல் பாழாக்கிவிடுவதால் தான் ஸ்தாபனத்திற்கே பேர் கெட்டுவிடுகிறது. அதிலும் நல்ல முறையில் உழைப்பவர்கள் சிலர் இல்லாமலில்லை. அத்தனைபேரும் அப்படியே இருந்தால்தானே சுத்தமாய் நியாயமான முறையில் தொழில் முன்னுக்கு வரக்கூடும்" என்றார் இன்னொருவர்.

இதற்குள் கோயிலதிகாரிகள், பூர்ணகும்பம் ஒன்றுதான் பாக்கி, அதில்லாமல் பெரிய மகாராஜாதி ராஜாக்களையும் மடாதிபதி களையும் உத்தம த்யாகத்தலைவர்களையும் வரவேற்பது போல் வர வேற்று, தடபுடல் உபசாரம் செய்து அழைத்துச் செல்லும் காட்சியை முதலில் சொல்லிய கிழவர் தூரவிருந்து பார்த்துக் கொண்டே திகைப்பும் ப்ரமிப்பும் ஆத்திரமும் பொங்க நின்றி ருந்தார்.

"பணம் செய்யும் காரியம் சார் இது! பணம் கொடுக்காத பரம பக்தர்கள் யாராவது இம்மாதிரி பகவானை ஸேவிக்கவேணும் என்று வந்தால் அவர்களுக்கு முதலில் சேவையாவது செய்து வைப்பார்களா? அக்ரமம். ஒரு சினிமாக்காரக் கூட்டத்திற்கு இத் தனை தடபுடலா?...என்று சிலருடைய உள்ளம் கொதித்தது. இந்த விஷயத்தி லீடுபட்டுள்ளவர்களின் உள்ளம் பூரித்தது.

சன்னிதிக்குள் இவர்கள் செல்வதற்காக மற்றவர்களை கோயில் பாராக்காரர்கள் விரட்டிவிட்டு, வந்தவர்களைமட்டும் உள்ளேவிட்டு மற்றக் கூட்டத்தை வெளியிலேயே தேக்கிவிட்டார்கள். எப் படியோ ஒரு சிலர் அவர்களுடன் தொத்தியடித்துக்கொண்டு குஸ்தி செய்து உள்ளேபோய் இந்த அத்புத தரிசனத்திற்கு முந்திக் கொள்ளும் ஆத்மாக்களைக் கண்டு சிலர் வெறுப்புற்று, "இந்த பர பரப்பு தினம் இதே கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெரு மானைத் தரிசிப்பதற்காக உண்டாகியிருக்குமாயின் எத்தனை நன்மை உண்டு? இந்த அசேதன ப்ரக்ருதியைப் பார்ப்பதற்காக என்ன கூட்டம் என்ன ஆரவாரம்? எத்தனை இடிபடல்!" என்று சிலர் மூக்கின்மீது விரலைவைத்தபடியே, தாமும் இப்படிப் பார்க்கவந்த வர்கள் என்பதை மறந்து பேசினார்கள்.

ஒரு ரூபாயைக் கொடுத்து அர்ச்சனை செய்யும்படிக்குச் சொன்னாலுங்கூட அந்த பட்டாச்சாரியாரின் குரல் கம்பீரமாய் வராது. மந்திரங்களும் ஸ்பஷ்டமாக ஒலிக்காது. வழவழ, கொழ கொழ வென்ற உச்சரிப்புடன் நடக்கும்; ஆனால், இன்றோ ஒவ் வொரு பதமும் வெகு தெளிவான உச்சரிப்புடன் ப்ரமாதமான ராக ஆலாபனையுடன் ராகமாலிகையாக மாறிக் கொண்டே அர்ச்சனை நிதானமாய் நடந்தது.

இந்த பட்டாளத்தின் தலைவனான முதலாளி இத்தனை பெரிய ஆர்ப்பாட்டத்துடன் அர்ச்சனை செய்த பட்டருடைய தட்டில்

5-ரூபாய்தான் போட்டான். தலாதலா புஷ்பமும் ப்ரஸாதமும் ஏராளமாகக் கொடுத்து, ஆண்பிள்ளைகளுக்கு மாலையும்போட்ட பட்டாச்சாரி "அடாடாடா! தாங்கள் சமீபத்தில் எடுத்த தடபுடல் என்ற படத்தின் அருமையை அளவிட்டுச் சொல்லவே முடியாது. என்ன அத்புதம்! என்ன அத்புதம்! இந்த அம்மாள் அதில் நடித்திருக்கிற அழகு உண்டு பாருங்கள், ப்ரமாதம்...தேவலோக மாதாவாகவும், கந்தர்வ புருஷர்களாகவும்தான் நடித்திருக்கிறார்கள். சார்! எங்கள் குடும்பத்துடன் அந்த படத்தை குறைந்தது ஒரு டஜன் தரமாவது பார்த்திருக்கிறோம். எங்காத்து குழந்தைகள் சதா இதே பாட்டுக்களைப் பாடிண்டு விளையாடுகிறதுதான் வேலை என்றால், வேறு என்ன சொல்வதுபோங்கள்." என்று பல்லை இளித்தார்.

முதலாளியின் சந்தோஷம் கரைபுரண்டது; அதைவிட ஆனந்தம் நடிகர்களுக்குப் பொங்கிப் பூரித்தது. "சங்கர்! பட்டருக்கு நிரந்தரமான பாஸ் நாலுபேருக்கு கொடுத்துவிடு!" என்றபோது பட்டருடைய நிலைமை எப்படி இருந்ததென்றால், பகவானைக் குறித்து தவம்செய்த பக்தனுக்கு பகவான் ப்ரத்யக்ஷமாகி வரம்கொடுத்தால் எத்தனை சந்தோஷமும் தன்னை மறக்கும் தன்மையும் உண்டாகுமோ அத்தனை உச்சஸ்தாயியில் இருந்தது. ப்ரஸாதத்தை அவர்கள் கையில் கொடுக்கும்போது கல்யாணவீட்டில் பெரிய பஞ்சாதிசொல்லி ஓதியிடுவதுபோல் உரத்தகுரலில் நீட்டி மடக்கிப் பெரிய அனுக்ரகப் பஞ்சாதி சொல்லியவாறு "அடாடாடா!...பகவத்ஸன்னிதானத்தில் ஒரு சங்கீத கைங்கர்யம் நடந்தால் இன்னும் அமோகமான கீர்த்தி பெருகும், நம்ம கோயிலின் ஸ்வாமிக்குள்ள கருணை சொல்லி முடியாது" என்று கூழைக்கும்பிடு போட்டார்.

முதலாளியின் உத்தரவுடன் அம்ஸாதேவி இன்னிசை வர்ஷம் வர்ஷிக்கத் தொடங்கி அரும்பொன்னே மணியே என்கிற பாடலை அதி அதி அத்புதமாய் இராகமாலிகையாகப் பாடியபோது உண்மையில் ஸன்னிதி பூராவும் அந்த எதிரொலி அப்படியே கும்மென்று சூழ்ந்து ப்ரமிப்பைக் கொடுத்தது.

—o—

## 2

வெளியில் நிற்கும் நூற்றுக்கணக்கான கூட்டங்கள், தேவியின் தரிசனத்திற்காகக் காத்துக்கொண்டிருக்கும் குதூகலத்தில் அந்த சினிமா நக்ஷத்திரங்கள் பாடிய பாட்டுக்களையே விசிலடித்தும் வெறுமையும் பாடிக்கொண்டிருந்தார்கள்.

பட்டாச்சாரியின் அர்ச்சனையும் பஞ்சாதியும் வெளியில் கேட்டபோது, பலபேர் பலமாதிரி பேசிக்கொண்டார்கள். சற்றுநேரத்திற்கெல்லாம் அம்ஸாதேவி பாடும் தேவகானம் போன்ற குரலைக்கேட்டதும் பின்னும் சந்தோஷத்துடன் கேட்டு ஆவலாக அவளைக் காண எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெளி கோபுரவாசலில்

தினப்படி சாதாரணமாக சில பிச்சைக்காரர்கள் மட்டுந்தான் இருப்பார்கள். யாரோ ப்ரபு கோயிலுக்கு வந்திருக்கிறாராம் என்பதை ஒருவர் மூலம் ஒருவராக அறிந்துகொண்டு ஒவ்வொருவராக வந்து கோபுரவாசலில் நிரம்பவாரம்பித்தார்கள்.

அங்கஹீனர்களாகிய குருடு, நொண்டி, முடவன் முதலியவர்களும் பிறர் தயவுடன் பறக்கப் பறக்க வரும்போது, கோயிலில் ஸ்வாமி தரிசனம் செய்தவர்கள் வெளியில் வரும் சமயமும் சரியாக இருந்தது. முதலாளியும் நடிகர்களும் தாம் மகா தர்மதாதா என்று பிறர் எண்ணுவதற்காகப் பிச்சை வழங்கியும் பழம் கல்கண்டு இவைகளைக் கொடுத்துக்கொண்டும் போனார்கள். பொதுமக்களின் வியப்புக்குக் கேட்கவேண்டுமா!

"சில மூடர்கள் சினிமாக்காரர்களைப் பழிக்கிறார்களே அவர்களுடைய பக்தியையும் தானதர்மம் செய்யும் உதாரத்தையும் பாருங்கள். நல்ல சீமான்களாக இருந்தால்மட்டும் தாராள மனம் வேண்டாமா சார்!" என்று சிலர் ப்ரமாதமாகக் கொண்டாடிப் பேச வாரம்பித்தார்கள். ஏழ்மை நிலையினால் தவிக்கும் சிலர், இந்த முதலாளியின் நேசத்தை இப்போதே பெற்றுத் தம் குழந்தைகளை... ஏன் பெரிய பெண்களையும்கூடச் சேர்த்துவிடலாம் என்கிற உறுதி உண்டாகியதால் அதற்கும் துணிந்தார்கள்.

ஒரு சிலர் ஒன்றாகப்பேசி நிச்சயித்துக்கொண்டு முதலாளியை மடக்கி ப்ரமாதமாகப் புகழ்ந்து ஆகாயத்தில் தூக்கிவைத்துப் பேசிக்கொண்டிருக்கையில், நக்ஷத்திர நடிகை ஹம்ஸாதேவி பிச்சைக்காரர்களுக்குக் காசு போட்டுக்கொண்டேபோகையில், அங்கு உட்கார்ந்து பிச்சைவாங்கும் ஒரு குருடனுக்குக் காசு போடும்போது தற்செயலாகப் பார்த்ததும், அப்படியே தீயை மிதித்தவள் போல் துள்ளி நின்றாள். கையிலிருந்த காசுடன் கைகள் வெட வெடவென்று நடுங்குகின்றன. வெந்நீர்போன்ற உஷ்ணத்துடன் வெயர்வை வெள்ளம்போல் கால்முதல் தலைவரையில் பொங்கிப் பெருகியது. நிற்கமுடியாது தத்தளிக்கும் நிலைமையில் கையிலிருந்த 5 ரூபாய் நோட்டு நழுவி அந்தக் குருடனின் தட்டில் விழுந்தது.

வாய்திறப்பதற்கும் முடியவில்லை. தன்னுடைய நிலைமையைப் பிறர் அறியாதவாறு சமாளிக்கவும் முடியாததால் தடதடவென்று போய் தன் வண்டியில் உட்கார்ந்தாள். "நடிகையின் பச்சாத்தாப உள்ளத்தை என்னென்பது? குருடனுகையால் 5 ரூபாய் போட்டுவிட்டுப் போகிறாள் பாரு" என்று அதற்கும் விமர்சனம் செய்யக் கிளம்பிவிட்டார்கள். உண்மை ரகஸியத்தை யாரரலறிய முடியும்? இதற்குள் முதலாளியும் பொதுமக்களிடம் பேசிவிட்டு வந்ததும் வண்டிகள் கிளம்பின.

அல்ப சந்தோஷிகள் சிலர், சினிமா முதலாளி தம்மிடம் பேசிவிட்டதையே பேரின்பமாக எண்ணி உடனே த்ருப்தியடைந்து அதைப்பற்றியே பேசிக்கொள்ளத்தொடங்கினார்கள். சற்றுப் படித்தவர்களும், சிறிய உத்யோகத்திலிருப்பவர்களும், விவேகிகளுமே

இம்மாதிரி பேசிக்கொண்டார்கள் என்றால், பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளவர்களுக்கு ஒருநாள் பூராவும் "அம்மா! தாயே! ஐயா! தர்மபிரபுவே "என்று தொண்டை கிழியக் கத்தினால் ஒத்தை ரூபாயைக் காணமுடியாது பாவம்! அப்படிக்கிருக்க ஒத்தை ஒத்தை ரூபாயாகத் தம் தட்டில் கண்டதும் உண்மையில் அபாரமான சந்தோஷத்தையடைந்து பூரிக்கும் சமயம், எல்லோருக்கும் கடைசியில் வந்த குருடனின் தட்டில்மட்டும் 5 ரூபாய் நோட்டாகவே போட்டதைப் பார்த்த மற்றவர்கள் பின்னும் ஆரவாரத்துடன் "பொட்டையனுனும் அதிர்ஷ்டம் கொள்ளையா இருக்குதடா...நீ குருடன்னுபாத்து ஒனக்கு மனமிரங்கி 5 ரூபா நோட்டையே தட்டிலே போட்டிருக்கா தெரியுமா?" என்றான் ஒரு பிச்சைக்காரன்.

குருடன் சந்தோஷத்துடன் "அப்படியா? மவராஜி அவகுடும்பம் மலேபோல வளரணும். அவள் மாங்கல்யம் மலேபோல வளரணும் என்று முடிப்பதற்குள் மற்றொரு பிச்சைக்காரன் "அண்ணேண்ணே! நீஎன்னென்னு நெனச்சிக்கிட்டு இப்படி வாயார வாழ்த்தறே? அவளுக்கு ஒரு மாங்கல்யமாயிருந்தாதானே அண்ணே! தினம் ஒரு சினிமாவிலே தினம் ஒரு மாங்கல்யம் கட்டிகினி நடிக்கிற சினிமாராணியாச்சே! அவளுக்கு எத்தினி மலே வளரணும் தெரியுமா?"...என்ற உடனே குருடன் ஏற்கெனவே அந்தகாரத்தில் தவிக்கும்போதும், உலகமே தட்டாமாலே சுற்றி வானமே அவன் தலேயில் இடிந்துவிட்டதுபோன்ற அதிர்ச்சி உண்டாகி அவனே வதைத்தது. அந்த விபரீத உணர்ச்சியின் வேகத்தில் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து துள்ளிக்குதித்தான். "என்ன!.... சினிமாக்காரியா எனக்கு 5-ரூபாய்போட்டாள்? சினிமாக்காரிக்காகவா இத்தனே ஆரவாரமும், பேச்சும் கூட்டமும் கும்மாளமும்?" என்று எரிய எரியக் கூறியவாறு தட்டைத் தடவி அதிலிருந்த 5-ரூபாய் நோட்டை எடுத்துச் சுக்கல்சுக்கலாகக் கிழித்தெறிந்துவிட்டுத் தன் கால்போனவாறு வேகமாய் விறுவிறென்று கைத்தடியைத் தட்டியவாறு நடந்துசென்றான்.

சினிமாராணியின் அழகு, அவள் பாடிய இனிமை, அவள் தர்மம் செய்த பெருமை இவைகளேக் கண்டு பொதுமக்கள் ப்ரமாதமாய்ப் பேசி வியப்புறும் சமயம் குருட்டுப்பிச்சைக்காரனின் செய்கை பின்னும் பதினயிரம் மடங்காக ஆச்சரியத்தைக் கொடுத்தது. "பிச்சைக்காரப்பயல், அதிலும் குருடன், அவனுக்கிருக்கும் திமிரைப் பார்த்தாயா? தரித்திர மூதேவி பிடித்தவனுக்கு மகாலட்சிமியைப்போல் 5-ரூபாய் கொடுத்ததைக் கிழித்தெறிகிறனே! விடியாதமூஞ்சி தரித்திரம், இவனுக்குக் கண்ணுதான் இல்லே என்றால், கண்ணியமும் இல்லேயே! இந்தப் பிச்சைக்காரனேப் பார்த்து அவள் தர்மம் செய்தாளே! நன்றிகெட்ட குருடனுக்குச் சினிமாக்காரிமேல் இளப்பமாமே"...என்று அதற்கும் விமர்சனம் ஆரம்பித்தார்கள் பொதுமக்கள்.

பிச்சைக்காரக் கூட்டத்தினரோ, "அடப்பாவி குருடா! கிழிச்சுப் போட்றத்தெ எங்ககிட்டே குடுக்கக்கூடாதா!....என்று கத்தினர்கள். குருடனே கொதித்துத் துள்ளும் உள்ளத்துடன் தடியால் தடவியவாறு விடுவிடென்று நடந்தான். அவனுடைய இதயத் துடிப்பின் மர்மத்தை யாரறியக்கூடும்? அவனுடைய உள்ளத்துடிப்பை அவனுடைய நடையே எடுத்துக் காட்டியது.

—o—

## 3

அனேக சினிமாக்கம்பெனிகளில் இரவு நேரத்தில் நிம்மதியாகச் சில காட்சிகளை எடுப்பது வழக்கம். அதுபோல் அன்று இரவு ஒரு முக்யமான ஸீனை எடுப்பதற்கான ஏற்பாடுகள் நடந்திருந்தன. அன்று கோயிலுக்குச் சென்றதற்குக் காரணம் முதலாளியின் 50-ஆவது பிறந்ததினமாம். அரைநூற்றுண்டைக் கழித்ததற்கும் அதிலும், கால்நூற்றுண்டுக்குமேல் இத்தகைய உத்க்ருஷ்டமான தொழிலை நடத்தியதற்காகவும் பகவானுக்கு ஒரு கும்பிடுபோட்டு விட்டு வருவதற்காகவே வந்தார்கள்.

எந்தெந்த படத்தில் எந்தெந்த நடிகை முதல்முதல் ப்ரதம ஸ்தானம் வகித்து நடித்துப் பெரும்புகழுக்குப் பாத்திரமாகிருளோ, அவள் முதலாளியின் சொத்தாக விளங்குவாள். இன்றைய நிலைமையில் அம்ஸாதேவி, அரவிந்த ராணி, இந்துமுகி மூவருமேயாகும். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பங்களாவும் இதர சகல சவுகர்யங்களும் ப்ரத்யேகமாகச் செய்துகொடுத்திருந்தான்.

மூன்று ராணிகளில் அம்ஸா மட்டுந்தான் இன்று வந்தாள். அவளுக்கு கோயிலில் உண்டாகிய அதிர்ச்சியின் தாக்குதலை யார் தான் அறியக்கூடும்? "பிச்சைக்காரன்...பிச்சைக்காரனு...அதிலும் குருட்டுப் பிச்சைக்காரனு...ஐயோ!...என் பிதாவா குருடாகிப் பிச்சைக்காரனுமாகிவிட்டார்! பகிரங்கமாகப் பிச்சை எடுக்கவா அவர் தலைவிதி அமைந்தது...உண்மையில் நான் பார்த்தது என் பிதாவின் உருவந்தானு அல்லது ப்ரமையா...இல்லை இல்லை. ப்ரமையே இல்லை. என் பிதாவேதான்...அவருடைய முகத்தை நன்ருகப் பார்த்தேனே. அவருடைய வலது கன்னத்தில் ஆபரேஷன் செய்திருக்கும் வடுவு நன்ருகத் தெரிந்ததே! அவர் அன்பை அள்ளிவீசிய குரலில்....ஸுசீலா என்று என்னைக் கூப்பிடும் அதே குரலில்—நாராயணு..தர்மத்தாயே!.."என்று சொல்லியதைக் காதாரக்கேட்டேனே!

ஐயையோ! இதென்ன விபரீதக் கோலத்தில் என் பிதாவைக் காணும்படி விதியமைந்ததே! அவர்கள் என்னை விரோதித்துக் கொண்டபோதிலும் எப்படியோ துக்கவாழ்க்கை நடத்திக் கொண்டு ஊரோடு இருப்பதாகவன்றே எண்ணி இருந்தேன். கண் எப்படி அந்தகமாயிற்று?...அம்மா எங்கே இருப்பாள்! நான் என் இன்று கோயிலுக்குப் போனேன்?....என்னை ஏதோ சித்திரவதை செய்கிறதே! என் பிதாதானு அவர்?...அப்பா...அப்பா"...

என்று அவள் உள்ளத்திற்குள் இதய வீணையில் சோகம் நிறைந்த புலம்பலின் நாதம் உச்சஸ்தாயியிலும் மந்தர ஸ்தாயியிலும் கணீர் கணீர் என்று எழுந்து அவளைத் திக்குமுக்காடவைக்கிறது. இந்த மின்ஸாரத் தாக்குதலின் உணர்ச்சி அவள் நினைவைப் பின்னோக்கி வெகு வேகமாக இழுத்துச்சென்றது.

அந்த உணர்ச்சியில், அவள் பிதாவின் ஆதியிலிருந்த பழய தோற்றமும் இப்போது கண்ட பரிதாபக் கோலமும் மாறி மாறி அவ்வறை பூராவும் தெரிந்து அவளைப் பின்னும் குழப்பிவிட்டது.

தனக்கு ஆறுவயதாக இருந்தபோது வீதியில் விளையாடிக் கொண்டிருக்கையில் ஒரு மாடு வேகமாக ஓடி வருவதைக் கண்ட அவள் பிதா, குழந்தையை முட்டிவிடப்போகிறதே என்கிற வாத்ஸல்யத்துடன் ஒரே பாய்ச்சலாக ஓடிவந்து குழந்தையைத் தாவி எடுத்துக்கொண்டு திரும்புகையில் அந்த மாட்டின் கொம்பு கன்னத்தில் பட்டு ரத்தம் பீறிக்கொண்டு வழிந்தபோது அந்தவீதியில் இருப்போர் அத்தனை பேர்களும் சுற்றிக்கொண்டு அவருக்கு சிகிச்சை செய்து டாக்டரிடம் அழைத்துச் சென்றதும், அப்போது 'அப்பா! அப்பா!' என்று தான் கண்ணீர் விட்டுக் கதறியதும், அடுத்தவீட்டு அத்தை தன்னை அன்புடன் அணைத்துத் தேற்றியதும் அந்த காயத்தினால் 15 தினங்கள் ஆஸ்பத்ரியில் படுத்திருந்து பின் வீட்டிற்கு வந்ததும், ஆஸ்பத்ரியிலிருக்கும்போது தினம்போய்ப் பார்க்கையில் தனக்காகக் கொடுத்திருந்த பழத்தையும் ரொட்டியையும் தான் தின்னாமல் இவளுக்கே கொடுத்து மகிழ்ந்ததும் ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்கு வந்துவிட்டன.

அவளையறியாது 'அப்பா!'...என்று வாய்விட்டும் கத்திவிட்டாள். அத்தகைய அருமைப் பிதாவா இன்று பிச்சைக்காரனாய்—அதிலும் கண்களைப் பறிகொடுத்த குருடனாய்—உட்கார்ந்திருக்க நான் பார்த்தேன்!'...என்று தேம்பித் தேம்பி அழுகிறாள். அவளால் அடக்கவே முடியவில்லை. குருடனைப் பார்க்கும் வரையில் இந்த எண்ணமே, உணர்ச்சியே அணுவளவுகூட உண்டாகவே இல்லை. எப்போதாவது சில சமயங்களில் சில சம்பவங்களின் மூலம் பெற்றோர்களின் நினைவு வரும். ஆனால், அது அடுத்த நிமிஷம் மறந்தேபோய்விடும்.

தனக்கு மிஞ்சிய பெரிய நக்ஷத்திரம் இல்லை, தனக்கு மிஞ்சிய பாக்யசாலிகள் இல்லை என்கிற இறுமாப்புடன்தான் கோயிலிலும் நடந்துகொண்டாளேயன்றித் தான், ஒரு பெண்ணினத்தைச் சேர்ந்தவள், அதற்கான சில உரிமைக் குணங்கள் இருக்கின்றன என்ற நினைப்பே அடியோடு மறந்தே இருந்தது. தன்னு

டைய தற்போதைய நிலைமையை ஒரு தரம் பார்த்தாள்; கண் தெரியாத அந்தக நிலைமையில் பிச்சைக்காரர்களுடன் பிச்சை எடுக்கும் தன் பிதாவின் நிலைமையை ஒருதரம் பார்த்தாள். காலக்கண்ணுடியில் விதி என்கிற நாடகமேடையில் இரண்டு பிம்பங்களும் அவள் அகக் கண்ணுக்குத் தெரிந்து ஒரு துள்ளுதுள்ளச் செய்தன.

அதே சமயம் வேலைக்காரி "அம்மணீ! சாப்பாட்டிற்கு வாருங்கள்" என்றாள். அதே சமயம் வீதியிலுள்ள சந்திப் பிச்சைக்காரர்கள் "தாயே! பசி உசிர் போவுதே...ஒரு கவளம் அன்னம் போடுங்க அம்மா!" என்று மிகவும் ஹீனகுரலில் கத்துவது இவள் காதில் விழுந்ததும், தன் பிதாவின் கதியும் இப்படித்தானே இருக்கும் என்ற எண்ணம் மின்னல்போல் தோன்றி கல்நெஞ்சையும் கரையும்படிக்குச் செய்ததால் தடதடவென்று மொட்டை மாடிக்குச் சென்று அந்தப் பிச்சைக்காரர்களைப் பார்த்தாள்.

கணவன், மனைவி, ஒரு குழந்தை ஆக மூவரும் எலும்புக் கூடுகள். கந்தல் உடையினால் ஒப்புக்குச் சரீரத்தை மூடிஇருந்த தெனினும் தன்னருமைக் குழந்தையை அந்தச் சிறிய கந்தையின் பெரும்பாகத்தால் மூடிப்போர்த்தித் தாயார் கையில் அணைத்திருந்தாள். தகப்பன் பிச்சை எடுக்கும் குவளையைத் தாங்கிவந்தான்.

நிலவு பட்டுப்போல் காய்கிறது. எதிர்ப் பங்களாவில் இச்சந்தி பிச்சைக்கு ஒருவாய் சாதம் போட்டதும், தெருவிலுள்ள மரத்தடியில் உட்கார்ந்து முதல்முதல் அந்த சாப்பாட்டை அந்தக் குழந்தைக்கு அன்புடன் ஊட்டியவாறு தகப்பனும் தாயும் கொஞ்சுவதைக் கண்டு, இவளுக்கு இவளையறியாது ஏதோ செய்தது. "என்னைக்கூட என் பெற்றோர்கள் இத்தகைய உயர்ந்த ப்ரேமையை அள்ளிவிட்டுத்தானே வளர்த்திருப்பார்கள்......அடாடா! என்ன விசித்ரமாக என் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது!" என்று ஏதேதோ எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் ஷூட்டிங்கிற்கு அழைத்துச் செல்லும் கார் வந்துவிட்ட ஓசையைக் கேட்டபிறகே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

இத்தனை நாட்கள் ஸ்வப்பனத்தில்கூட நினைக்காத எண்ணம் இன்று பெரும்புயல்போல்தோன்றி இதயத்தில் கோரத்தாண்டவம் செய்வதைச் சமாளிக்கமுடியாது, பதுமைபோல் மறுபடியும் படுக்கையில் தடார் என்று விழுந்தாள். எத்தனைதான் தான் கண்ட குருட்டுப்பிச்சைக்காரனை மறக்க எண்ணியும், அதே நினைவுதான் அலைபோல் மோதிமோதி உடைந்து இதயத்தைக் கரைக்கின்றது. "எப்படிக் குருடனாகிவிட்டார்!......என் தாயார் எப்படியிருக்கிறாள்?" என்ற எண்ணங்கள் திரும்பத்திரும்ப சுற்றுவதால் ஆதி

யில் நடந்த சம்பவங்கள் ஒன்றன்பின்னொன்றாக பளிச் பளிச் சென்று நினைவுக்குவந்து தாண்டவமாடுகின்றன.

இவளுக்கு சுமார் பத்துவயது இருக்கும்போது இவளுடைய தாயார் டைபாயிடு ஜுரம் வந்து மிகவும் தடபுடலாகப் படுத்து விட்டபோது இனி பிழைக்கமாட்டாள் என்று அதைரியம் உண் டாகிவிட்ட சமயம் "ஐயோ! டாக்டர்! நான் பிழைப்பேனா?...என் கண்மணி ஸுசிலாவுக்காக நான் பிழைத்து வெகு காலம் இருக்க வேண்டும் டாக்டர்! என் கண்மணியை சகலகலாவல்லியாகச் செய்து கண்குளிரப் பார்க்கவேண்டும் டாக்டர்! என் செல்வத் தைத் தாயற்ற பெண் என்று பிறர் இளப்பமாகப் பேசவோ இளையதாயாரிடம் சிறுமைப்படவோ செய்துவிடக்கூடாது. என் இன்ப ராணி அவள்தான். அவளுக்குச் சிறந்த அறிவாளியைக் கல் யாணம் செய்துவைத்து எங்கள் இதயம் களிக்கப் பார்க்கவேணும் டாக்டர்!" என்று பேசமாட்டாது தத்தித்திணறி அன்பின் சக்தி கொண்டு பேசிய மொழிகள் திடீரென்று செவியில் ஒலிப்பதோடு காலக்கண்ணாடியில் அக்காட்சிகள் அப்படியே தெரிந்தன.

பத்துவயது நிரம்பாத தான் தாயாரின் கைகளைப் பிடித்துக் கொண்டு "அம்மா!...அம்மா!"...என்று அழுத அக்காட்சியும் சேர்ந்து தெரிந்தபோது, தன் தந்தை சேர்த்து அணைத்துக்கொண்டு "ஸுசிலா! கண்மணீ! அழாதேம்மா....நாம் வீணாக அழுவதைவிட பகவானை வேண்டி ப்ரார்த்தனை செய்தால் உன் தாயார் பிழைத்து விடுவாள் பயப்படாதே. அப்படி ஒருவேளை இறந்துவிட்டாலும் உனக்காக நான் எந்தவிதமான த்யாகத்தையும் செய்து உன்னைக் காப்பாற்றத் தயாராயிருக்கிறேன். கண்மணீ! நான் மறுவிவாகமே செய்துகொள்ளமாட்டேன். நீயே என் கண்மணி. நீயே என் வாழ்க்கையின் விளக்கு! நீயே என் ஜீவநாடி! நீயே எனக்குச் சகலமும்" என்று கூறிய அந்த தோற்றமும் அப்படியே தெரிந்ததும், இத்தகைய த்யாக உணர்ச்சியும், அளவிட முடி யாத ஆழமான உயிரையும் வைத்திருந்த பிதாவையா நான் உதாசீன மாக விட்டுவிட்டு மானங்கெட்டு ஓடிவிட்டேன்?... அத்தகைய பிதா வையா நான் குருட்டுப் பிச்சைக்காரனாகக் கண்டேன்?...ஐயோ!.... என்னால் இந்த சங்கடத்தைப் பொறுக்கமுடியவில்லையே! இப்போதே அக்கோபுர வாசலுக்குப்போய் அவருடைய காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடி எப்படியாவது அழைத்துவந்துவிடலாமா?...

ஹா!......இந்தத் துறையில் நான் இறங்கக்கூடாதென்று என்னையும் அந்த உபாத்தியாயர் சுந்தரத்தையும் எவ்வளவு தடுத்தார்? எத்தனை நீதிகளைப் போதித்தார்! எத்தனை உபமானங்களை எடுத்துக் கூறினார்? அவைகளெல்லாம் எனக்குச் செவிடன் காதில் ஊதிய சங்குபோலாகிவிட்டதே! இப்போது அவர் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? இச்சமயம் எனக்கு உதவி புரிகிறவர்களும் கிடை யாதே. பாழும் ஷூட்டிங்கு வேறு இப்போது வைத்திருப்பதால் நான் கட்டுப்பட்டு நடித்துத் தீரவேணுமே! நன்றாக இருந்து நடிக்

கும்போதே ஏதாவதொரு பாகத்தில் சிறிது தவறினும் அந்த டைரக்டர் முகத்தாலடிப்பானே! இன்று என் நிலைமையில் நான் என்ன நடிக்கப்போகிறேன்...என் கண்கள் திறந்திருக்கையிலும், மூடி இருக்கையிலும் அதில் முக்யமாக அந்தக் குருட்டுப் பிச்சைக் காரனின் உருவமல்லவா தெரிகிறது!....

என்று ஏதேதோ எண்ணிக் குழம்பித் தவிக்கையில் "அம்மா! இன்னும் சாப்பிடவரவில்லை? ஷூட்டிங்கிற்குக் கார் வந்துவிட் டதே" என்றாள். இதற்குள் காரில்வந்த ஆள் மேலே வந்து "நேர மாகிறது. அங்கு சகலமும் தயாராகிவிட்டது. முதலாளி சீக்கிரம் வரச்சொன்னார்" என்று சற்று தடித்த குரலிலேயே கூறினான்.

அந்த நிமிஷந்தான் தன்னுடைய நிலைமையின் பந்தமும் சிறை வாஸத்தைவிட மோசமான வாழ்க்கை தன்னுடைய வாழ்வு என்ற எண்ணமும் உண்டாகியது. இதற்குள் டெலிபோன் மணி கண கணவென்று அடித்ததும் ரிஸீவ் செய்தாள். "நேரமாகிவிட்டது. ஏன் தாமதம்?" என்று முதலாளி கடுமையான குரலில் பேசுவதைக் கேட்டதும் மனமுடைந்த நிலைமையில் "எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்று காரில் உட்கார்ந்தாள். காரும் கிளம்பியது.

## 4

அன்று நடிக்கவேண்டிய பாகத்தில் வெகு நாட்கள் தவம் செய்து பிறந்த குழந்தைக்குத் தாயார் அன்பு நிறைந்த உள்ளத் துடன் தொட்டிலிடும் கல்யாணத்தை நடத்துகிறாள். பலர் அந்த வைபவத்திற்கு வந்திருக்கிறார்கள். முதலாளி "என்ன அம்லாதேவி இத்தனைநேரம்? முகம் ஏன் வாட்டமாக இருக்கிறது? கண்கள்கூட சிவந்திருக்கிறதே! என்ன?"....என்று பதைபதைப்புடன்கேட்டான்.

பலவந்தமாகச் சிரிப்பை வரவழைத்துக்கொண்ட அம்லா, பாபபிண்டமாகையால் மறுபடியும் பாபகரமான வார்த்தைகளைக் கூசாமல்சொல்ல நாக்குத் தயங்கவே இல்லை. "ஒரு நாளும் இல்லாது இன்று கோயிலுக்குப்போய் அந்த அடசலான இடத்தில் காற்றும் இல்லாது, நின்றதனுலும் பாடியதனுலும் உடனே தலைவலி ஜுனுப்பு தும்பல் இருமல் சகலமும்வந்து மயக்கம்போடுவதுபோலாகிவிட் டது. அதனுல்தான் படுத்திருந்தேன். சிறிது தாமதமாகிவிட்டது" என்று துணிந்து கூறினாள்.

ஒரு மணி நேரத்திற்கெல்லாம் மேக்கப்புடன் தயாராகிவிட் டாள். ப்ரஸன்னமாகவிருக்கவேண்டிய முகத்தில் சோகமும் கலக்கமும் பொங்கிவழிவதால் முகத்தின் பாவத்தையே எடுத்துக் காட்டுவதுபோல் த்வனியும் அமைந்துவருவதால் டைரெக்டரின் முகம் சுளித்தது. குழந்தையைப் போன்ற ஒரு பொம்மையை மடியில் வைத்துக்கொண்டு இவள் மணையில் உட்கார்ந்திருக்கிறாள்.

"ஆகா! என் செல்வக்களஞ்சியமே!.........நீயே என் கண்மணி. நீயே என் வாழ்க்கையின் விளக்கு! நீயே என் ஜீவநாடி! நீயே எனக்குச் சகலமும்"

என்று தன் தாயார் படுக்கையில்கிடக்கையில் பிதா சொல்லிய அதே வாக்யங்களை இவள் பாடமாகச் சொல்லிய இத்தனைநாளும் அதைப்பற்றி எத்தகைய உணர்ச்சியும் இல்லாதிருந்தது. இன்று அதே வாக்யங்களைச் சொல்லும்போது துக்கம் நெஞ்சையடைத்துக் கொண்டு வருகிறதேயன்றி அந்த உணர்ச்சி வரவில்லை. தான் இன்று நடிக்கும்மூலம் தாயின் அன்பைக் காட்டவேண்டிய பாகத்தைத் தன் தாய் உண்மையிலேயே காட்டி என்னிடம் எதிர்பார்த்த எதை யாவது அடைந்தார்களா! 'தாயின் அன்பை நசுக்கி அவள் உள்ளத் தைச் சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்த பாதகியாகிய நான் இன்று தாயின் அன்பை நடிக்கவேண்டுமா?...ஐயோ! என்ன செய்வேன்?' என்று உள்ளுக்குள் குமுறுகிறாள்.

எத்தனை தரம் அந்த பாகத்தை நடித்தும் இதுகாறும் ஒத்திகை யில் இருந்த அத்தனை உணர்ச்சிமிக்க பாவத்துடன் அமையவே இல்லை. அவள் எத்தனைதான் முயற்சி செய்தும் குருட்டுப் பிச்சைக்காரனுடைய முகந்தான் அந்த இடம்பூராவும் தெரிந்து திடும்திடும் என்று கலக்குகிறது.

"இதென்ன அம்ஸாதேவி! அபாரமான இன்ப உணர்ச்சியுடன் நடிக்கவேண்டிய பாகத்தை இப்படிக்கொலைசெய்கிறாய்? இதென்ன புதிய அபிவ்ருத்தியா! லக்ஷக்கணக்கில் பணத்தைக் கொட்டி யிருக்கும் நிலைமையில் பெருநஷ்டத்தைத்தான் காணவைப்பாய் போலிருக்கிறதே...முதலாளி சார்! இந்தமாதிரி உணர்ச்சியற்ற அழு மூஞ்சி பாவத்தில் நடிக்கும்வரையில் நான் இந்த ஸீனை எடுக்கப் போவதில்லை. பிறகு என்மீது பழிவருவதை நான் விரும்ப மாட் டேன்." என்று டைரெக்டர் கடுமையாகக் கூறினான்.

முதலாளியும் வெகு முடுக்காயும் கோபமாயும் அம்ஸாவைக் கடிந்து பேசியதில் ஏற்கெனவே கொந்தளிக்கும் இதயம் பின்னும் அளிந்து புண்ணுவதுபோல் துடித்தது. இத்தனைக்கும்காரணம், தான் தான் என்ற உணர்ச்சி இந்த நிமிடத்தில்தான் தோன்றியதாகை யால் ஒரு விதமான வீராவேசமும் கோபமும் தன் பிதாவின்மீது ஆத்திரமும் பொங்கிவிட்டதால் ஏதோ ஒருவாறு அந்த ஸீனில் நடித்துமுடித்து பின்மாலை நாலுமணிக்குத் தன் வீட்டிற்கு வந்தாள்.

எத்தனையோ தரம் இதே கண்ணாடியில் முகத்தை வெகு ஒய்யாரமாய் மந்தகாஸத்துடன் பார்த்திருக்கிறாள். அப்போ தெல்லாம் வெகு சந்தோஷமாயும், அப்படி பார்ப்பதே பரமஸார்த்தக மாயும் எண்ணிய அதே தனக்கு, இன்று கண்ணாடியில் முகத்தைப் பார்க்கும்போது பயங்கரமான உருவமாய்த் தனக்குத்தானே தெரி வதுபோலும் பின்னால் ஏதோ பயங்கர விபத்து தன்னை உறுமிக் கொண்டு நிற்பதுபோலும் விபரீதமான எண்ணமும் அதிர்ச்சியும் உண்டாக்கித் தாக்கியது.

உடனே மறுபடியும் கட்டிலில் விழுந்தாள். அவ்வறை முழு தும் "தாயே! தர்மதேவதை!...என்ற தீனக்குரலில் குருடன் பிச்சை எடுக்கும் காட்சிதான் தோன்றி கதிகலங்கச் செய்தது. மணியோ

5 அடித்துவிட்டது. பின்மாலை வழக்கம்போல் விதியுடன் பக்த கோஷ்டிகள் பஜனை செய்துகொண்டு போவதை இத்தனை நாட்கள் ஆனந்தமாகத் தூங்கிக்கொண்டிருந்ததால் பார்த்ததே இல்லை. இன்று அந்த இன்பகரமான வேளையில்,

பாவம் செய்யாதிரு மனமே !—நாளை
கோபம் செய்தால் எமன் கொண்டோடிப் போவான் !
வாழ்க்கையை நம்பாதே மனமே!—மாய
மயக்குகள் நிறைந்திடும் பாழ்க்கிணறன்றோ....
பெற்றோரை தெய்வமென்றெண்ணு—நெஞ்சில்
வற்றாத அன்புடன் சேவைகள் பண்ணு ;
அன்புள்ள நெஞ்சுக்கு சாந்தி—என்றும்
அழியாது கிடைத்திடும் அத்புத காந்தி,

என்ற அடிகளை அவர்கள் பாடிக்கொண்டே தெருக்கோடிவரையில் போய்விட்டார்கள். மறுபடியும் எழுந்து உட்கார்ந்து விளக்கைப் போட்டாள். கதைப்புத்தகம் ஒன்று மேஜைமீது பளிச்சென்று தெரிந்தது.

"பெற்றோரின் அன்பு" என்ற அப்புத்தகத்தின் பெயர் கொட்டை கொட்டையாகத் தெரிந்ததும், பஜனை கோஷ்டியினர் பாடியதும் ஒன்று சேர்ந்து ஏதோ மகத்தான அதிர்ச்சியை உண்டாக்கிவிட்டது. அப்புத்தகத்தை எடுத்து ஏதோ ஒரு பக்கத்தைப் பிரித்தாள். அதில்..."அப்பா! அம்மா! இந்த அல்ப விஷயத்திற்காக நீங்கள் ஏன் பயந்து வருந்தவேண்டும்? உங்களைவிட எனக்கு இந்த ஆபரணங்களா முக்யமானவை? என்னுயிரைக்கூட அடகுவைத்தோ, விற்றோ உங்கள் கஷ்டத்தை நான் போக்குவேன். இந்தாருங்கள். சஞ்சலம் வேண்டாம். வாழ்க்கைப்படகு பயங்கரமான சமுத்திரத்தில் மிதக்கும்போது எத்தனையோ கஷ்டங்கள் நேரிட்டு மோதியடிப்பது சர்வ சகஜமல்லவா ?...இந்தாருங்கள் நகைகள்...

இதற்குமேல் படிக்க முடியவில்லை. தன் சரீரத்தில் மின்னும் நகைகளை ஒருமுறை பார்த்தாள். தன் தந்தையின் பிச்சைக்காரக் கோலத்தை காலக்கண்ணாடியில் பார்த்தாள். "சுமார் இரண்டு டஜன் வளையல்களும் வைரநெக்லெஸும் மற்ற இதர நகைகளும் எது இருந்து என்ன லாபம்? என்னைப் பெற்ற பிதா கிண்ணிப்பிச்சை எடுக்கும் குருடனாகவிருக்கும் வயிற்றெரிச்சல் ஆறுமா! தீருமா!" என்கிற கலக்கத்துடன் மறுபடியும் படுக்கையில் படுத்தாள். "நாளை எப்படியாவது அதே கோயிலுக்குப்போய் என் பிதாவை நேராகப் பார்த்துக் கூட அழைத்துவருவதே சரி. இனி என்னால் பொறுக்க முடியவில்லை" என்று தனக்குள் முடிவு கட்டிக்கொண்டாள்.

அடுத்த நிமிஷமே தன்னுடைய நிலைமை தனக்கு நினைவுக்கு வந்தது. தான் சிறையில் வசிக்கும் கைதியைவிடப் பந்தப்பட்டவளாயிற்றே. வெளியில் முதலாளிக்குத்தெரியாமல் எப்படிப்போவது? தான் வெளிக்கிளம்பினால் தெருவில் கூட்டமல்லவா கூடிவிடும்? இந்த தர்மசங்கடத்திற்கு என்ன செய்வது?...என்று எண்ணமிட்ட

வண்ணமிருக்கையில் காலைக்காப்பியும் ஆகாரமும் வழக்கம்போல் வேலைக்காரி கொண்டுவைத்தாள்.

அந்த ஆகாரத்தைப் பார்த்ததும் இவள் நினைவு சடக்கென்று குருட்டுப்பிச்சைக்காரன்மீது தாவியது. "இரவு பகல் கத்தி பிச்சை எடுத்தாலும் அதைப் பிறர் தானே ஆகாரமாக்கி அவருக்குக் கொடுக்க வேண்டும்? என் தாயார் உயிருடன் இருப்பாளே யானல் இவரிடம் இருந்த அளவற்ற அன்பை மறந்து குருடனைத் தனித்துப் பிச்சை எடுக்கும்படி விடுவாளோ? தான் உழைத்து அவருக்குக் கஞ்சி வார்ப்பாள் அல்லது தானே கையைப் பிடித்து அழைத்துவந்திருப்பாள். என் சிறிய வயதில் எதிர் வீட்டு தாதாவுக்கு இரண்டு கண்ணும் தெரியாதிருக்கையில் என்னைத் தடி பிடித்துக்கொண்டு அவரை அழைத்துப்போய் விடச்சொல்வார்களே! அத்தகைய இள மனதுடைய என் தாயார் தன் பதியை இப்படி விடுவாளா? அவள் இறந்துதானிருக்கவேண்டும்" என்று தோன்றியது.

இதற்குள் வேலைக்காரி "அம்மணீ! ஏன் இப்படி கண்கள் அழுததுபோல் சிவந்திருக்கிறதே!" என்று அன்பொழுகக் கேட்டாள். அம்ஸாதேவிக்கு இந்த வேலைக்காரியிடம் சற்று ப்ரத்யேக அன்பு உண்டு. இவள் ஒரு படத்தில் எக்ஸ்ட்ராவாக நடிக்க வந்தாள். பெண் சுறுசுறுப்பாயிருந்ததால் அடிக்கடி எக்ஸ்ட்ரா பார்ட்டுகள் கொடுப்பதாகக் கூறி தன்னிடத்திலேயே வேலைக்கு வைத்துக் கொண்டாள். விளக்கில் விழுந்து இறந்துபோகும் விட்டில் பூச்சிகளுக்கும் இத்தகைய ஆசைப்பிசாசு பிடித்த சில அல்ப நடிகைகளுக்கும் எந்த விதத்திலும் வித்யாஸமே இல்லை. அம்ஸாதேவி உயர்ந்த பதவியில் தன்னை வைத்துவிடுவாள்...ஏன்? தன் பதவியிலேயே இடங்கொடுத்தாலும் கொடுப்பாள் என்கிற ஒரு ஆழமான நம்பிக்கை உறுதியாகத் தோன்றி வேரூன்றிவிட்டதால் அவளுடைய பெண்தர்மம், கடமை முதலிய சகலத்தையும் துறந்து கட்டிய கணவனையும் நிராகரித்துவிட்டு ஓடிவந்த கழுதையாகையால் அம்ஸாதேவியே தனக்குப் பேசுந்தெய்வம் என்ற உறுதியில் இருப்பதால் அவள் மனங்கோணாமல் நடந்துவந்தாள்.

அலைமோதும் துயரத்தில் தத்தளிக்கும், அம்ஸாதேவிக்கு இந்த வேலைக்கார வள்ளியம்மாளைப் பார்த்ததும் பளிச்சென்று ஒரு எண்ணம் தோன்றியது. வள்ளியைக் கூப்பிட்டு..."இன்று நடக்கப் போகும் ஷூட்டிங்கில் உனக்கு ஏதாவது பாகம் உண்டா?" என்றாள்.

வள்ளி:—ஒன்றுமில்லையம்மா! வெளியிலிருந்து எக்ஸ்ட்ராக்கள் வரப்போவதாக ஸ்டுடியோவில் பேசிக்கொண்டார்கள். எனக்குக் கொஞ்சம் தயவு செய்யக்கூடாதா?—என்றாள்.

இந்த சமயத்தையே எதிர்பார்த்துக்கொண்டிருந்த அம்ஸாதேவி, "வள்ளீ! நான் மறந்துவிட்டேன் என்று எண்ணுகிறாய்! இந்த நாடகத்திலேயே உனக்கு முதல்தாமான வேஷம் கொடுக்கப்

போகிறேன். அது கிடக்கட்டும். நீ எனக்கு ஒரு காரியம் வெகு ரகஸியமாய்ச் செய்து தரவேண்டும்...

வள்ளி:—தாயே! உங்களிடம் அடிமையாகக் கிடக்கும் நான் எந்த சமயம் எத்தகைய வேலையாயினும் செய்யக் காத்துக் கிடக்கிறேன். சொல்லுங்கள்...

அம்ஸா:—நேற்று நாங்கள் போயிருந்த கோயில் உனக்குத் தெரியுமா!

வள்ளி:—நன்ருகத் தெரியும். நான் இங்குவந்து சேருவதற்கு முன்பு, தினம் அந்த கோயிலுக்குத்தான் போய் வருவேன். அங்கிருந்து ஏதாவது ப்ரஸாதம் வேணுமா? அங்குள்ள பட்டர், பரிசாரகர் இருவரும் எனக்கு மிகவும் வேண்டியவர்கள்...

அம்ஸா:—ப்ரஸாதமும் வேண்டாம் ஒன்றும்வேண்டாம். அதற்கெல்லாம் வீணுக அலையவேண்டாம். அந்த கோபுர வாசலில் நிறைய பிச்சைக்காரர்கள் இருக்கிருர்கள் பாரு. அவர்களில் குருடர்களும் சிலர் இருக்கிருர்கள். அவர்களில் ஒரு குருடன் கன்னத்தில் காயம் ஆபரேஷன் செய்து தையல் போட்டதுபோன்ற வடுவு இருக்கும்......

வள்ளி:—அந்த குருடனு! அடராமா! அவனைப் படத்தில் எடுப்பதற்காகவா நீங்கள் கேட்கிறீர்கள்! அவன் மகா கர்வம் பிடித்தவனுயிற்றே. அவனுக்குச் சினிமா என்ற பெயரை எடுத்தாலே பிடிக்காது. பக்கத்திலிருக்கிற பிச்சைக்காரர்கள் சினிமாப் பாட்டுகள் பாடிப் பிச்சைகேட்பார்கள். அவர்களை அந்தக் குருடன் கன்னுபின்னு வென்று திட்டுவதோடு சினிமாவையே சபித்துக் கொட்டுவான். சினிமாவையே கொளுத்திவிடவேண்டும் என்றும் அந்தக் கலையே அழிந்து நாசமாய் விடவேண்டும் என்றும் வயிறெரிந்துத் திட்டுவானே.......

அம்ஸா:—வள்ளி! சொல்வதைக் காதில்கேட்காமல் இதென்ன குறுக்கேவிழுந்து பேசுகிருய்? ஸினிமாக்கலையைத் திட்டவும் சபிக்கவும் அவனுக்கு ஏதாவது அநுபவம் கிடைத்திருக்கலாம். வாழ்க்கையில் மனம் வெதும்பிப் புண்ணுகிவிட்டவர்கள் இப்படிச் சொல்வது சகஜந்தானே; அதைப்பற்றி பேச்சே எடுக்கவேண்டாம். பின்மாலை நான் தூங்கும்போது சொப்பனத்தில் பகவான் தோன்றி 'அந்த கிழவனுக்கு நீ ஆதரவு கொடுத்தால் உன்னுடைய காரியம் ஜெயமாகும்' என்று கூறினர். ஆகையால் அந்தக் கிழவனைப் பார்த்து அவனுக்குப் பணம், உடைகள் முதலியன கொடுத்து சினிமா என்கிற பெயரே சொல்லாமல் இங்கு அழைத்துக்கொண்டு வந்து விடுகிருயா?...

வள்ளி:—அழைத்துக்கொண்டுவருவதா? பிச்சைக்காரக் குருடனையா?...

அம்ஸ:—அதெல்லாம் உனக்கெதற்கு? நீ முதலில்போய் நான் சொல்கிறபடி செய். இது நம்மிருவரைத் தவிர பிறருக்குத் தெரியவே கூடாது. ஒருவேளை அவன் கோயிலுக்கு [illegible]வதற்குச்

சற்று நேரமானாலும் நீ இருந்து பார்த்துக்கொண்டுவா— என்று கூறி நூறுரூபாய் பணமும் இரண்டு ஜதை வேஷ்டி உத்தரியமும் ஒருபோர்வையும் பழவகைகளில் சிறிதும் கொடுத்து "இதை ஜாக்ரதை யாகக்கொண்டுபோ; பிறர் அறியக்கூடாது; கிழவருடன் மற்ற எந்த விஷயமும் சொல்லாதே" என்று ரகசியமாக அனுப்பி விட்டாள். அதன்பிறகே அவள் நெஞ்சை யழுத்திக்கொண்டிருந்த பாரம் சிறிது குறைந்ததுபோல் தோன்றியது.

---

## 5

உள்ளத்தின் உணர்ச்சியை அப்படியே கண்ணாடிபோல் காட்டுவது முகம். உள்ளத்தில் அபரிமிதமான சந்தோஷமோ, துக்கமோ, ஏமாற்றமோ, சீற்றமோ, ரகஸியமான கலக்கமோ, எது வாயினும் பளிச்சென எடுத்துக்காட்டும் அதியத்புத சக்திவாய்ந்தது முகமாகிய காலக்கண்ணாடிதான். நேற்று குருடனைப் பார்க்கும் வரையில் சந்தோஷ சாகரத்தில் மிதந்துகொண்டிருந்த முகம் இன்று சுருக்கம்விழுந்து சுண்டிப்போய் வாடிவதங்கிய மலர்போல் காணப்படுவதைக் கண்ட முதலாளிக்கு ஒன்றும் தோன்றவில்லை.

இன்று எடுத்த காட்சியில் சற்றும் உணர்ச்சியோ, விறு விறுப்போ, பாவமோ இல்லாது நடித்திருப்பதால் படத்திற்கே நஷ்டம் வந்துவிடும் என்கிற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டதால் அவ னிடம் கடுமையான கோபம் உண்டாகியது. அந்த ஆத்திரத்துடன் அம்ஸாவிடம் வந்தான். மணி 10 அடிக்கும் சமயமாகிறது. அப் போதும் அவள் ஏதோ காயலில் அடிபட்டவள்போல் படுத்துக் கிடப்பதைக் கண்டு, "என்ன அம்ஸா! இன்னும் உடம்பு சரியாக வில்லையா! இதுவரையில் நீ நடித்த படங்களுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோன்று இப்படம் அமையவேண்டும் என்று நான் லக்ஷ லக்ஷமாகப் பணத்தைக் கொட்டியிருக்கையில் இந்த முக்யமான காட்சியில் காலைவாரிவிட்டாயே! டைரெக்டருக்கு உன்மீது மிகவும் கோபம். அதே காட்சியை மறுபடியும் எடுத்துதான் தீர வேண்டும் என்கிறார். அதிலும் சரியாகாவிட்டால் இப்படத்திற்கே குயிலியை வைத்து முற்றிலும் பிடித்துவிடுவது என்று தீர்மானித்து விட்டோம். இப்போது ஷூட்டிங் ஆரம்பமாகப் போகிறது ஜாக்ரதை. சீக்கிரமாக வா"...

என்று அலக்ஷியமாகவும் அதிகாரத்துடன் ஆத்திரமாகவும் சொல்லிவிட்டுப்போனான். மெல்லவும் மாட்டாது விழுங்கவும் மாட் டாது தவிக்கும் அம்ஸாதேவிக்கு அந்த நிமிஷந்தான் தன் பெற்றோர்கள் ஆதியில் சொல்லிய ஒவ்வொரு வார்த்தையின் உண் மையும் நன்ருகத் தெரிந்து இதயத்தில் உணர்ச்சியுடன் உறைத்தது.

அம்ஸாதேவியின் அன்னை இட்டபெயர் ஸுசீலா. அவளது பெற்றோருக்குப் பல வருஷங்கள் குழந்தைகள் இல்லாதிருந்து,

அவள் பிறந்ததால் அளவுகடந்த வாத்ஸல்யத்துடன் அவளை ஒரு ஆண்பிள்ளையை வளர்ப்பதுபோன்றும் இளவரசியை வளர்ப்பது போன்றும் செல்லங்கொடுத்து வந்தார்கள்.

சிறியவயதிலேயே சங்கீதம் வெகு அழகாகப் பாடுவாள். ஆகையால் அதை வ்ருத்திசெய்வதற்காக வாத்தியாரை வைத்துச் சொல்லிக்கொடுத்தார்கள். ரொம்ப சொத்து உள்ளவர்களாகையால் தம் செல்வ மகளுக்கு மனம்போனபடி எல்லா சுதந்தரமும் செல்ல மும் கொடுத்து வளர்த்தார்கள்,

'இன்றைய தினம் 50 சிறுவர்களுடன் நான் உல்லாஸயாத் திரை செய்யவேண்டும். அதற்கான சாப்பாடுகள் தயாராக வேண்டும்' என்று பிடிவாதம் செய்தால் அப்படியே நடக்கும். பெற்றோர்கள் செல்லம் கொடுப்பதிலும் ஒரு அளவு வரம்புடன் இருக்கவேண்டும் என்பதையே அவர்கள் அடியோடு மறந்தார்கள்.

பாட்டு வாத்தியார் வயதானவர்தான். வாத்தியாரின் ஒழுக் கமும் சீலமும் உலகறிந்த ப்ரஸித்தமாகையால்தான் அவரை பாட்டுச் சொல்வதற்காக ஏற்படுத்தினார்கள். அவர் வீட்டிற்கு அடிக்கடிபோவதும், அவருடைய வீட்டுக்காரர்கள் இங்கு வரு வதுமான தொடர்பு உண்டாகியது. அவருடைய மூத்த மகன் சுந்தரம் இளங்காளை. தந்தை தொண்டை கிழியப் பாடி சம்பாதிப் பதை மகன் கண்டபடி செலவு செய்யத் தொடங்கினான். அவனு டைய நேசம் ஸுசீலாவுக்குச் சினிமா பார்க்கச் செல்லும்மூலம் பற்றிக்கொண்டது.

ஸுசீலாவை சினிமாவுக்கு அழைத்துச் செல்வதை முதலில் ஏதோ குழந்தை என்கிற முறையில் அனுமதித்துவிட்ட குற்றத்தின் விபரீதத்தை உணர்ந்த பெற்றோர்கள் நல்ல நயமான வார்த்தையி லேயே கண்டித்து நிறுத்தப் பார்த்தார்கள். பெற்றோர்கள் தம் கடமையை மறந்து அதீதமான செல்லங் கொடுத்து வளர்க்கக் கூடாது, அன்புடன் கலந்த கண்டிப்பும் வேணும் என்பதைப் பிறகே உணர்ந்தார்கள்.

ஸுசீலாவுக்கு 14 வயதாகிவிட்டது. ஏற்கெனவே மிக்க எழில் வாய்ந்த வசீகரப் பதுமைபோன்றவளாகையால் பருவகாலத்தின் அத்புத ஸௌந்தர்யம் பரிபூர்ணமாக அவளைப் பதின்மடங்கு ப்ர காசிக்கச் செய்தது. ஸுந்தரமும் இயற்கையிலேயே கம்பீரம் வாய்ந்த கட்டுமத்தான சரீரமும் அழகும் பொருந்தியவன். அவனு டைய அழகைவிட அவன் ஸினிமாத்தொழிலைப் பற்றியும், படத்தின் பெருமையைப்பற்றியும், நடிகைகளின் ப்ரபாவத்தைக் குறித்தும் சொல்வதைக் கேட்டு இன்புறுவதில் அவள் மனது மிகவும் லயித்து விட்டதால் சதா அவன் வரவை எதிர்பார்க்கவும் சினிமா ப்ரபாவத் தைக் கேட்கவும், அது விஷயமாகவே பேசவுமாக அதிலேயே மட்டற்ற பேரின்பத்தைக் கண்டாள்.

சில மாதத்திற்குள் ஸுந்தரம் சினிமா நடிகனாகவே ஆய்விட் டான். அவன் பெற்றோர்கள் அவனை எவ்வளவு கண்டித்தும்

நீதிகளைச் சொல்லியும் அவன் கேளாது பெற்றோர்களை விரோதித்துக்கொண்டு சினிமாவிலேயே ஐக்யமாகிவிட்டான்.

ஸுசீலாவின் தாய்தந்தையர் இவளை எத்தனையோவிதம் கண்டித்ததோடு "இப்பாழும் சினிமாவில் சேர்ந்து எத்தனையோபேர்கள் கற்பழிந்து உலகத்திற்கு உதவாப் பிண்டமாய்க் குப்பைக்குச் சமானமாய்ப்போய்விட்டார்கள். வாழ்வே பாழாகிவிட்டது. இந்த விஷயத்தை நீ பேசவும்கூடாது" என்று சொல்லியும் அந்த விஷயத்திலேயே லயித்துவிட்ட மனத்தைத் திருப்பமுடியாது பெற்றோரையே எதிர்த்துச் சண்டைசெய்யத் தொடங்கியதோடு சுந்தரத்துடன் ஸ்டுடியோவுக்குத் திருட்டுத்தனமாகச் சென்று பார்க்கவும், தானும் அதில் எப்படியாவது தீவிரமாகச் சேர்ந்துவிடவேண்டும் என்று தீர்மானித்து அதைச் சுந்தரத்தினிடம் தெரிவித்து அதற்கான வழியைத்தேடவும் ஆரம்பித்தாள்.

பெண்ணின் விபரீதச் செய்கையையும் போக்கையும் ஊரார் பரிகஸித்து ஏளனமாக வம்புபேசத் தொடங்கினார்கள். கோவிந்தஸாமியும் பங்கஜமும் யோசனைசெய்து, ஆபீஸில் லீவுபோட்டுவிட்டுப் பெண்ணை அழைத்துக்கொண்டு க்ராமத்திற்குப்போய்விட்டார்கள். விதியை வெல்ல மதியாலாகுமா? என்கிற பழமொழியை இத்தகைய சந்தர்ப்பங்களில் உண்மையைக் கண்டுதான் பெரியார் அமைத்திருக்கவேண்டும். இல்லாமல் ஒரு நிதர்சன மொழி சாச்வதமாக உலகில் உலாவமுடியுமா!

விதிப்பழம் வீதியில்வந்து விலைகூவி விற்றது என்கிறதை நிதர்சனமாகப் பார்த்துவிட்டார்கள். பட்டிக்காடாகையினால் காலையும் மாலையும் ஸுசீலா ஆற்றங்கரைக்குச் செல்வாள். அவளுடன் அவ்வூரிலுள்ள க்ராமப் பெண்களும் சிலர் செல்வதால் பெற்றோர்கள் அதை வித்யாஸமாக எண்ணவில்லை.

அவ்வாற்றங் கரையோரத்தில் மரங்களும் அதற்கப்புறம் மலைகளுமாக அந்த இடம் பார்ப்பதற்கு ரமணீயமாயிருப்பதால் அந்த இயற்கைக் காட்சிகளை எடுப்பதற்கு ஸுந்தரம் நடிக்கும் படமுதலாளிகள் அங்கு வந்து, ஷூட்டிங்கு நடந்தது.

தற்செயலாக ஸுந்தரமும் ஸுசீலாவும் பார்த்துவிட்டார்கள். இதற்குமேல் வீண் ரஸாபாஸ விஷயவளர்த்தல் எதற்கு? பெற்றோரின் பெருமைகளையும், தன்னுடைய கண்ணியமான பிற்கால வாழ்க்கையையும் அடியோடு மறந்து, சினிமா மோகத்திலீடுபட்டு அந்தப் பாதகனின் வலையில் சிக்கி ஓடிவிட்டாள்.

விஷயமறிந்த பெற்றோர்களின் உள்ளம் சுக்கல் சுக்கலாக உடைந்தது. "இத்தகைய மகாபாவியைப் பெறுவதற்காகவா அத்தனை தவம் செய்தோம்?" என்று துள்ளித்துடித்தார்கள். தற்கொலை புரிந்துகொண்டு சாக எண்ணினார்களேயன்றி, நெறிதவறியும், நாணங்கெட்டும், பெண்மையின் பெருமையை இழந்தும், பெற்றோரை மோசம் செய்தும் சென்றுவிட்ட பெண்ணை இனித்தாம் கூப்பிட்டுக் குலாவப்போவதில்லை. ஓடிவிட்ட கழுதையைத்

தேடிப்பிடித்துப் பதம்செய்து குலத்திற்கு நாசத்தைத்தேட நாங்கள் தயாராக இல்லை. பெற்ற மகளானால் என்ன, மற்ற மக்களானால் என்ன! நியாயம் என்பது எல்லோருக்கும் ஒன்றேதான். தோட்டிமுதல் தொண்டைமான்வரையில் நியாயத்தை ஒன்றாகவே வழங்கியிருக்கிறார்களேயன்றி வேறில்லை. ஆகையால் அன்று மக்கட்பேறு இல்லாது தவித்ததுபோலவே இன்றும் இருக்க நாங்கள் தயங்கவில்லை. சில அன்பர்களைப்போல் நாங்கள் இதில் ப்ரவேசிக்கப் போவதில்லை. இந்த உறுதியிலிருந்து பிறழப்போவதே இல்லை" என்று வெகு ஆவேசத்துடன் கூறிவிட்டு வேலையை ராஜீநாமாச் செய்துவிட்டார். என்னவிருப்பினும் பெற்ற வயிறல்லவா? பங்கஜம் ஒரே அந்தகாரத்தில் மூழ்கித் துடித்தாள். வெளி உலகத்தையே பார்க்க அவள் கண்களும் உள்ளமும் கூசியது.

## 6

எந்த ஒரு விஷயமும் பட்டினவாஸத்தில் பரவி பரபரப்பை உண்டுபண்ணுவதைவிட க்ராமாந்தரத்தில்தான் அதிகமாகப் பரவி மிக்க பரபரப்பை உண்டுபண்ணுகிறது. இது ப்ரத்யக்ஷ உண்மை. மேல்குறித்த சம்பவம் நிகழ்ந்த அன்றே இவ்விஷயம் காட்டுத்தீ போல் ஊர் முற்றும் பரவிவிட்டது. கள்ளுக்காவடி தூக்கிச்செல்லும் காளியப்பன்முதல் புல்லை அறுத்துச் செல்லும் செல்லாத்தா வரை இதே பேச்சுத்தான் என்றால் வேறு கேட்கவேண்டுமா?

இந்த க்ராமத்தில் ஏராளமான பனைமரமும் தென்னைமரமும் இருப்பதால் மரம்படைத்த மகனீயர்கள் அந்த உத்க்ருஷ்டமான மரத்தை உலகிற்கு உபயோகமான முறையில் உதவவும், பகவானுக்கு அர்ப்பணமாகும் முறையில் இளநீராயும் தேங்காயாயும் சமர்ப்பித்துப் பயனடையக் கனவிலும் கருதாது, மக்களின் மதிப்பை அழித்துக் குடும்பத்தைப் பாழாக்கி, மனிதத்தன்மையை விரட்டி அழியாத பாதகத்தையும் மிருகத்தனத்தையும்,—குடியன், வெறியன் என்கிற பட்டத்தையும் தேடிக்கொடுக்கும் கள்ளிற்கு விட்டு, மகத்தான கைங்கர்யம் செய்துவரும் புண்ணியத்தைக் காவடிக் காரப்பேர்வழிகளும் பகிர்ந்துகொண்டு தொண்டுபுரிந்து வந்தார்கள்.!

கள்ளு எடுத்துப்போக வந்தபோது ஸினிமாக்காரர்கள் படம் எடுக்கும் அபூர்வத்தை ஒரு நாளும் கண்டறியாத காளியப்பனும், கருப்பனும் கண்டு ப்ரமித்து நின்று திகைத்துப்போனார்கள். அடுத்த இரண்டாவது நாள் வந்தபோது ஸினிமாக்காரர் இல்லை. அவ்வூரில் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த கோவிந்தஸாமியின் மகள் ஸினிமாக்காரனுடன் ஓடிவிட்டாள் என்கிற விஷயம் அறிந்து வியப்புற்றார்கள்.

காளியப்பன்:—அண்ணே... கேட்டியா சேதி... இந்தப் பாயும் சினிமாக்காரன் மறுபடியும் இங்கு வந்தாண்ணுக்கா நம்ப உஜாரா இருக்கணும்.

கருப்ப:—ஏண்டா! நம்மெகூட இஸ்திகினு பூடுவாண்னு பயமா?

காளி:—போடா பயித்தியம்! நம்மெ ஏண்டா இஸ்திகினு போவான்? நம்ம பொஞ்சாதி, தங்கச்சி, இப்படிப்பட்டவங்களே ஒடனே ஊருக்கனுப்பிடணும் தெரிஞ்சுச்சா...கோவிந்தசாமி ஊட்டுப் பொண்ணே...

கருப்ப:—அட சீ! மடசாம்பராணி! இதையா சொல்லவந்தே? நம்ம ஊட்டுப் பொண்ணுங்கிட்டே எந்த களுதையாச்சும் வந்திடுச்சுன்னு செருப்பு...செருப்பு இருக்குதுபாரு அது கிளிய அடிச்சி நொறுக்குவாங்க. அதுமட்டுமா! சாணியெ கரெச்சு ஊத்தி தொடப்பக் கட்டெடலேயே பொளந்துடுவாங்கோ. நம்ம ஊட்டுப் பொம்பளேங்களே என்னுனுடா கெனச்சே? ஒசந்த சாதி, படிச்சவங்க, அப்பிடி இப்டின்னு வாயே நீட்ராங்களே அவுங்ககிட்டேத்தான் ஊயனு மலேபேலே கெடக்குது தெரிஞ்சுக்கோ தம்பி! இன்னெண்ணு பாரு. இந்த பொண்ணே நாளேக்கே இட்டிகினு வந்திடுவாங்கபாரு.

காளி:—உளுமெ! உளுமெ!... அண்ணே! நீ சொல்றதெல்லாம் உளுமெத்தான். ஆனா, இந்த மனுசன் அப்படிசெய்யப்போவறதில்லெயாமே...மானத்தே உட்டு, ஊட்டேவிட்டுப்போன கயிதே அப்படியே அவதிப்பட்டுச் சாவட்டும்னு சொல்றாங்களாம். இன்னொ சினிமா, இன்னொ பாதாளி வேண்டிகெடக்கு! கள்ளுக் குடிச்சி மனுஷா பாளாவது ஒரு தினுசுன்னா இந்த எளவு வெபரீதமாயிருக்குதே!...

[இந்த சம்பவம் நிகழ்ந்த காலத்தில் மதுவிலக்குச்சட்டம் ஏற்படவில்லை.]



கருப்ப:—ஆமாம்...கள்ளெயுங்குடிச்சுப்பிட்டு சினிமாவேயும், பிடிச்சுப்புட்டு ஊரேயுங் கெடுத்துப் பாயாக்கிருங்க. தாங்க, கள்ளு ஸாராயம், ப்ராந்தி, உஸ்கி, இன்னும் என்னென்னமோ சொல்ருங் களே அத்தினியுங்குடிச்சிப்புட்டு படம் எடுக்கருங்களே அதுலே—குடியே கூடாது, குடிக்காதிங்க, அப்படி, இப்பிடின்னு பெருசா பேசி கதெ காட்ராங்களே. அப்படிதான் இருக்கும் அல்லா விசயமும் போயேன்— என்று ஊர் விஷயத்தைப்பற்றி விமர்சனம் செய்தவாறு கள்ளுக்காவடியைத் தூக்கிக்கொண்டு நடப்பதில் அவர்களுடைய ச்ரமத்தைக்கூட மறந்தார்கள்.

அதேசமயம் கள்ளுக்காவடிக்காரர்கள் பேசியதை ஸுசீலா வின் தகப்பனுர் முக்காடிட்டவாறு கேட்டுக்கொண்டே வந்தார். அவர்கள் பேசியதில் தம்தம் வீட்டுப் பெண்மணிகளே உயர்வு படுத்தியதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியுடன் பூரித்தார். எனினும் ஓடிவிட்டக் கழுதையைத் தான் அழைத்து வைத்துக்கொள்வதாகச் சொல்லியது மனத்தில் சுறுக்கென்று பட்டதும், காவடிக்காரர் களின் முன்புவந்து “அப்பா! நீங்கள் தூக்கிச்செல்லும் பொருள் குடிகெடுக்கும் குடியாயிருப்பினும், உங்கள் இதயம் பரிசுத்தமான நிலேயிலிருப்பதுகண்டு சந்தோஷப்படுகிறேன். நான்தான் அந்த அபாக்யப் பிண்டத்தைப் பெற்ற பாவி. இனி இச்சூரியன் மேற்கு திசையில் உதித்தாலும் சரி. கடல் நீர்முற்றும் கல்கண்டு போல் மாறி ணுலும் சரி, சூரிய ஒளியை ஒரு மின்மினி மறைக்கும் அபூர்வம் வந்தாலும் சரி, இந்த சரீரத்தில் ஆத்மா உள்ளவரையில் இனி நான் அந்தச் சண்டாளியை—குலத்ரோகியை, பாபப்பிண்டத்தை, எங்கள் ஆசைக்கடலே வற்றவைத்து அக்னியை மூட்டிவிட்ட மூதேவியை, பெண்ணின் இனத்திற்கே பெரும் இழுக்கைத் தேடிவிட்ட கிராதகியை, பெண்தர்மத்தைச் சாம்பலாக்கிய பிசாசை—திரும்பிக் கூடப்பார்க்கமாட்டேன். மனிதனுக்கு மானமும் நீதி நெறியுந்தான் முக்யம். சத்தியந்தான் துணேயேயன்றி வேறில்லே. ஆகையால் மானங்கெட்டு சிலரைப்போல் ஓடிவிட்ட நாயை...உதவாப் பிண்டத்தைத் தேடிப்பிடித்துப் பந்தியில் வைத்துத் தாலாட்ட நான் தயாராயில்லே. அவள் இறந்துவிட்டாள் என்று தலே முழுகிவிட் டேன். எனக்கு குழந்தைகளே பிறக்கவில்லே என்று எண்ணுவேன். இனி இப்பேச்சே இம்மாதிரி பேசாதீர்கள், உங்களுக்குப் புண் ணியமுண்டு” என்று அவர்கள் எதிர்பாராதவிதமாய்க் கூறிவிட்டு விடுவிடென்று போய்விட்டார். காவடிக்காரர்களின் ஆச்சரியம் கரைபுரண்டது.



| ஜகன்மோகினி | இந்தியா, ஸிலோன். | பர்மா | வெளிநாடு. |
|---|---|---|---|
| தனிப்பிரதி | அண 4. | 0—4—6. | 0—5—0 |
| வருடச் சந்தா | ரூ. 3. | 3—8—0. | 3-12—0 |

## ஸ்ரீ ராமாநுஜன்

[கிரந்தமாலா ஆபீஸ்: காஞ்சீபுரம். வருடச்சந்தா ரூ. 4.]

இது உபய வேதாந்த ப்ரவர்த்தகராய் பற்பல அரிய ஸம்ப்ரதாய நூல்களை வெளியிடுபவரான லோகப்ரஸித்த ஸ்ரீமான்-ப்ர அண்ணங்கராசாரியர் ஸ்வாமியால் நடத்தப்பட்டுவரும் மாதப் பத்திரிகை. இதன்பெயர்க்கு ஏற்க ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாய தத்வங்களை உணர்த்த முன்வந்திருப்பது இது.

ப்ரபந்நகாயத்ரி யென்னும் சிறப்புடைய இராமாநுச நூற்றந்தாதி பாசுரம் மாதம் ஒன்று முன்னணியாக நம் கண்ணைக்கவர்கின்றது. வான்மீகி இராமாயண, கம்பராமாயண கதைச் சுருக்கங்கள், இரண்டிற்குமுள்ள வேற்றுமைக் குறிப்புகளுடன் தொடர்ந்து வருவது அனைவர்க்கும் பயன்தரவல்லது.

நித்யாநுஸந்தான ஸ்தோத்ரமாலா என்னும் பகுதியில் பராங்குச நக்ஷத்ரமாலிகை சுலோகங்கள் நாகரம், தமிழ் எழுத்துக்களில் அச்சிட்டிருப்பதுடன் பொழிப்புரையும் குறிப்புரையும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது ஸம்ப்ரதாயஸ்தர்களுக்குப் பேருதவியாகும்.

நிற்க, தற்கால மாணவர்கள் ஒருசிறிதேனும் ஸம்ப்ரதாயப் பற்றின்றி ஆசார அநுட்டானங்களையும் புறக்கணித்து வருவது பெரும் க்லேசத்தை விளைவிக்கின்றது. இதற்கு நமது பத்ரிகை ஒருபரிஹாரம் தேடுமாயின் அனைத்துலகும் வாழப்பிறந்த எதிராசன் பெயர்தாங்கும் பெருமைக்கு ஏற்றதாகும். ஆசிரியர் தம் பெரிய போதத்தை இத்துறையில் ஈடுபடுத்தும் ஆற்றல் மிக்குடையவர். மாணவர்களும் மேல்விழுந்து வாசிக்கும் முறையில் பத்திரிகை வரவேண்டியது அத்யாவச்யம்

---

## ஸ்ரீ. அரவிந்தர் எழுதிய கடிதங்கள்—முதல் தொகுப்பு

[தமிழ் ஆக்கியோர் - கே. எஸ். வேங்கடராமன். வெளியிட்டவர்—ஸ்ரீ. அரவிந்தர் புத்தகாலயம் 369, எஸ்பிளநேட், மதராஸ். விலை: ரூபா. 1—4—0.]

இக்காலத்தில் நாம் கற்று அறியவேண்டிய நூல்களுள் இன்றியமையாதது இந்நூல். நம் பாரததேசத்தில் வாழ்க்கையின் குறிக்கோள்களை அறம், பொருள், இன்பம், வீடு என வகுத்தனர் ஆன்றோர். பொருள் இன்பங்களிலேயே திளைத்து உழலும் அயல் நாட்டினரிடம் அடிமைப்பட்டிருந்த நம்மவரும் பொருளின்பங்களை உரிய நெறியிற் செலுத்தவல்ல தண்டவாளங்கள்போன்ற அறம், வீடு என்னும் அழியாத பாதையை அறவே விடுத்து வழியல்லாவழிகளில் சென்று தடுமாறுகின்றனர். தற்போது சுதந்தரம் அடைந்த நம் நாடு தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமானல், பல்லாயிர ஆண்டுகளாக நம் சமுதாயத்தைக் காத்துவரும் ஆன்ம வளர்ச்சியே அடிப்படையாகப் போற்றப்படவேண்டும். ஸ்ரீ அரவிந்தர் தத்வதர்சியோடு அறச்சிறந்த தேசாபிமானியாகவும் விளங்குபவராதலின் நம் நாட்டின் மேன்மைக்கு உரிய அரிய வழிகளை அநுபவத்துடன் எடுத்துக் காட்டும் ஆற்றலுடையவர். இக்கடிதங்களில் ஆன்ம வளர்ச்சிக்குரிய சிறந்த சாதகமுறைகள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைத்தான மிகச் சீரிய முறையில் மொழிபெயர்ப்பு அமைந்துளது.

## உலகம் கண்ட நல் நாட்கள்

# மார்கழித் திங்கள்

அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள் இந்த உலகில் இருள்நீங்க வந்துதித்த மாதங்கள் நாள்கள்தன்னை மண்ணுலகோர் தாமறியத் தீது அகல நிற்தும் திரு.

## இந்தமாதம்

*மார்கழி மாதத்தில் அவதரித்த ஆழ்வார்—தொண்டரடிப்பொடிகள்; ஆசாரியர்—பெரியநம்பி.*

### தொண்டரடிப் பொடியாழ்வார்:

மன்னியசீர் மார்கழியில் கேட்டை இன்று மாநிலத்தீர்
என்னிதனுக்கு ஏற்றம் எனில் உரைக்கேன்—துன்னுபுகழ்
மாமறையோன் தொண்டர் அடிப்பொடி ஆழ்வார் பிறப்பால்
நான்மறையோர் கொண்டாடும் நாள்.

### பெரியநம்பி: (அவதாரம்: மார்கழியில்—கேட்டை)

அம்புவியில் பதின்மர்கலை ஆய்ந்துரைப்போன் வாழியே!
ஆளவந்தார் தாளிணையை அடைத்துய்ந்தோன் வாழியே!
உம்பர்தொழும் அரங்கேசர்க்கு உகப்புடையோன் வாழியே!
ஓங்கு தனுக்கேட்டை தனில் உதித்தபிரான்வாழியே
வம்பவிழ்தார் வரதருரை வாழிசெய்தான் வாழியே
மாறனேர் நம்பிக்கு வாழ்வளித்தான் வாழியே!
எம்பெருமானார் முனிவர்க்கு இத முரைத்தான் வாழியே!
எழில் பெரிய நம்பி சரண் இனி தூழிவாழியே!

### இந்த மாதத்தின் தனிச்சிறப்பு:

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்னும் ஸ்ரீ ஆண்டாள் இம்மாதத்தில் 'மார்கழித்திங்கள் மதிநிறைந்த நல்நாள்', என்று "பாவை நோன்பு" கொண்டாடி முப்பது நாட்களுக்கும் தப்பாமல் அநுஸந்திக்க முப்பது பாசுரங்களாலாகிய சங்கத்தமிழ்ப் பாமாலையைத் திருவரங்கனுக்குப் பாடித்தந்தாள். இப்ரபந்தம் இந்த மாதத்தில், நாள் பாட்டு, என்னும் சிறப்புடன் அநுஸந்திக்கப்படும். நுட்பமான கருத்துக்கள் அடங்கிய பூர்வாசாரியர்களது வியாக்யானங்கள சொற்பொழிவாகப் பலவிடங்களில் குழாங்களாய்க் கூடியிருந்து அநுபவிக்கப்படும் பெரும் சிறப்பும் ஒன்று உண்டு. நாளுக்கு ப்ராஹ்ம முஹூர்த்தம்போலே ஸம்வத்ஸரத்திற்கு இந்த மாதம்.

திருவாய்மொழித் திருநாள் என்னும் திரு அத்யயன உத்ஸவத்தில் திருவரங்கன் திருவாய்மொழி முதலிய தமிழ்வேதப் பாசுரங்களை இந்த மாதத்தில் தனித்துத் திருச்செவி சாத்துகிறான். பலசொல்வி என்? பகவான் கண்ணனே "மாஸாநாம் மார்க்கசீர்ஷோஹம்" என்று பேசுகிறான்.

இந்தமாதம் முப்பதும் நல் நாட்களே!

— ஸ்ரீ வைஷ்ணவதாஸன்

ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி

# இரண்டு மாத 'லீவு'

"அடே ராமு! என்ன செய்கிறாய்? புதன்கிழமை ஊருக்குப் புறப்பட திங்கள்கிழமை என்ன வந்தது? லச்சுவும், நீயும் கூடிக்கூடி என்ன பேச்சு? சாப்பிட வாருங்கள்" என்று அதட்டினாள் ருக்மிணியம்மாள்.

லச்சுவும், ராமுவும் இதைக் கொஞ்சங்கூடக் காதில் வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லை. அவர்கள் மூன்றுகால் குதிரை, பந்து, காலி வத்திப்பெட்டிகள், கையில்லாத பொம்மை இவைகளைச் சேர்த்துவைத்து மூட்டை கட்டுவதும், நடுநடுவில் காதோடு குசமசவென்று பேசுவதுமாயிருந்தார்கள்.

இவர்களை அதட்டும் ருக்மிணி மட்டும் என்ன? தன் வேலையைக் கவனித்தாளா? இல்லை. "என்ன புடவை எடுத்து வைப்பது? ரயில் பிரயாணத்திற்கு சாப்பாட்டு மூட்டைகட்டுவதா?... நடுநடுவில்... தன்னிடம் இணையற்ற அன்பு கொண்டிருக்கும் நாத்திக்கும் அவர் குழந்தைகளுக்கும் என்ன பரிசு வாங்கிக்கொண்டு போவது? இப்படிப்பட்ட பிரச்னையில் மூழ்கிக்கிடந்தாள். சாமான்களைப் பெட்டியில் வைப்பதும், எடுப்பதுமாக நர்த்தனம் செய்துகொண்டிருந்தாள்.

பெரியபெண் விமலாவோ, தன் அத்தானைப்பற்றியே கனவு கண்டு கொண்டிருந்தாள். பாலு இப்பொழுது இளங்காளையாக இருப்பான். பம்பாய்வாசியானதால் மிகவும் நாகரீகம்வாய்ந்தவனாக இருப்பான். தன்னை லக்ஷ்யம் செய்து பேசாவிட்டால்?... ஆனால், இரண்டு வருஷங்களுக்குமுன் வந்தபொழுது "விமலாவை நன்றாகப் படிக்கவைத்துவிடு மாமி! பிறகுதான் எங்கள் மணம்" என்று சொன்னானே அது பொய்யாகாது. விமலாவும் பி. ஏ. முடித்த பெண்தான். ஆனாலும், ருக்மிணி தன் பெண்ணை நாகரீக மோகத்தில் மூழ்கவிடாமல் அடக்க ஒடுக்கத்துடன் தன் பாணியில் வளர்த்திருந்தாள். விமலையும் இயற்கையிலேயே எளிய நடையும், பொறுமையும் உள்ள பாங்கான பெண். அவளுக்கு அத்தை வீட்டிற்குப் போனால் என்ன வரவேற்பு நடக்குமென்ற சிந்தனையிலும், அத்தானோடு எப்படிப் பேசுவது என்ற இன்ப நினைவிலும், தன்னை மறந்திருந்தாள்.

கோபாலய்யருக்கோ இரண்டுமாத விடுமுறையில் அக்காவீட்டில் எத்தனை நாட்கள் தங்குவது, பிறகு எங்கெல்லாம் சுற்றுவது என்று தீவிர யோசனை. சேர்ந்தாற்போல் உத்தியோகத் தொந்தரவில் ரஜா எடுக்க முடியாமல் மாறுதலின்றி இருந்ததால் அக்குடும்பத்திலுள்ள அனைவருக்கும், கிடைத்திருக்கும் இரண்டுமாத விடுமுறை மகிழ்ச்சிதரக்கூடியதாயிருந்தது. தவிரவும், கோபாலய்யருக்கு ஒரே தமக்கை; பம்பாயில் அநேக வருஷங்களாக இருக்கிறாள். அவள் புருஷனுக்கு சொந்தத்தில் மில்களும், கடைகளும் இருந்தன. நல்ல செல்வாக்குள்ளவர்.

லக்ஷ்மி அம்மாள் தம்பியிடமும், தம்பி மனைவியிடமும் மிகவும் அன்பு கொண்டிருந்தாள். வருஷம் ஒரு தடவை வந்து தம்பியுடன் சந்தோஷமாக இருந்துவிட்டுச் செல்வாள். ஒவ்வொரு தடவையும், பம்பாய்க்கு ருக்மிணியை அழைத்துக்கொண்டு வரும்படி தம்பியை வற்புறுத்துவாள். ஆனால், அவருடைய தொந்திரவான ரயில் உத்தியோகத்தில் விடுமுறையே கிடைப்பதில்லை. ருக்மிணிக்கு பம்பாய் போய்ப் பார்க்க வெகுநாளாக ஆசை. இதுவரை நிறைவேறவில்லை. எனவே அபூர்வமாக செல்லப் போகும் பிரயாணத்தின் ஆனந்த வெள்ளத்தில் எல்லோரும் மூழ்கியிருந்தார்கள். ருக்மிணி கார்த்திகை, மார்கழி இரண்டு மாதமும் அங்கு இருந்துவிட்டு தை மாத பொங்கலுக்கு வீடுவந்து சேரணுமென்று திட்டம் போட்டாள். மற்றவர்களோ, திரும்புவதைப்பற்றியே நினைக்கவில்லை.

## 2

“17-ந்தேதி புறப்படவேண்டுமென்று டிக்கட்கூட வாங்கிவிட்டோமே. இன்னும் இரண்டு நாட்கள்தானே இருக்கின்றன. எனக்கு இதுவரை இல்லாத தலைவலியும் ஜுரமும் எங்கிருந்தோ வந்துவிட்டதே, இதை ருக்குமிணியிடம் சொன்னால் பதறிப்போய்விடுவாளே?” என்று வருந்தின வண்ணம் படுத்திருந்தார் கோபாலய்யர்.

“அக்காவிடமிருந்து நாம் அங்கு வருவதைப்பற்றி மிகவும் சந்தோஷமென்றும், ஆவலுடன் எதிர்பார்ப்பதாயும் அன்பான கடிதம் வந்திருக்கிறது. பாருங்கள்......நம்ப சிவாஜியை, (இது அவர்கள் வீட்டு நாயின் பெயர்) எங்கு விட்டுச் செல்வது?...என்று கேட்டுக்கொண்டே வந்தாள் ருக்மிணி. அவர் பதிலளிக்காமல் இருக்கவே சமீபத்தில் வந்துபார்த்தாள். ஐயருக்கோ, ஜுரம் விஷம் ஏறுவதுபோல் ஏறிக்கொண்டிருந்தது. குளிர் தாங்காமல் உதடுகள் தந்தி அடித்தன. கை கால்களை குண்டுகட்டாகக் கட்டிக்கொண்டு இருந்தார்.

“என்ன உடம்பு, ஏன் இப்படி நடுங்குகிறது? காலையில் ஸ்நானம் செய்தீர்களே, உடம்பு ஒருமாதிரியாக இருந்தால் செய்யாமல் இருந்திருக்கலாமே”, என்று அடுக்கிக்கொண்டே போனாள்.

“ஒன்றுமில்லை கவலைப்படாதே. நாளைக்காலையில் ஸரியாகிவிடும்” இன்று ஒரு நண்பர் வீட்டில் ஐஸ்கிரீம் கொடுத்தார்; அதை சாப்பிட்ட முதல் கொஞ்சம் தலைபாரமும் குளிருமிருக்கிறது; நாளைக்காலை பூராவாக குணமாகிவிடும். நீ வழக்கம்போல் பிரயாணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்” என்று சமாதானமாகச் சொன்னார். ஆனால், சொல்லும்பொழுதே தன்னுடைய உடம்பு அஸௌக்கியம் அவ்வளவு சீக்கிரத்தில் குணமாகுமென்று அவருக்கே நம்பிக்கை இல்லை.

இவரது நிலையைக்கண்டு ருக்மிணி பதறிவிட்டாள். படுக்கையை விரித்து அவரை வசதியாகப் படுக்கவைத்துவிட்டு, டாக்டருக்கு டெலிபோன் செய்தாள். விமலாவுக்கோ அப்பாவின் உடம்பு அஸௌக்கிய கவலையைவிட அத்தானைப் பார்க்க (இன்னும் இரண்டு நாள்தானென்று நிமிஷங்களை எண்ணிக்கொண்டிருந்தவளாதலால்) முடியாமல் போய்விடுமோயென்ற கவலை பெரிதாக இருக்கிறது. வேலைக்காரர்களும் ஸ்தம்பித்து நின்றுவிட்டார்கள்.

## 3

மதராஸில் ருக்மிணி அம்மாளைத் தெரியாதவர்களே கிடையாதென்று சொல்லலாம். பழைய பண்பும், புதுநாகரீகமும் கலந்த வாழ்க்கையைக் கொண்டவள். மாதர்சங்கத்தின் அங்கத்தினள். இங்கிதமாய்ப் பழகும் சுபாவம். தம்பதிகள் எல்லோருக்கும் உதவிசெய்வதாலும், அன்பாய் பழகுவதாலும், அவர்களிடம் தனிப்பட்ட பற்றுதல் உண்டு. தவிரவும் ருக்மிணி பெரிய கிழவிமுதல் சின்னக்குழந்தைவரை திருந்தபடி கொண்டாடுவாள். எனவே அய்யர் உடம்பு அஸௌக்கியத்தைக்கேட்டு ஒவ்வொருவராக வந்து பார்த்துப் போய்க்கொண்டிருந்தார்கள். இரண்டுநாளில் குணமாய்விடும், சாதாரண மலேரியா ஜுரம்தானென்று அபிப்ராயம் கொடுத்தார் டாக்டர் துருராவ். இவர்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் லக்ஷ்மி, பாலுவுக்கு அய்யர் உடம்பைப் பற்றிய செய்தி போய்ச்சேர்ந்தது... இடைவிடாமல் வரும் நண்பர்களுக்கு பதில் சொல்லி சாத்தியமாகவில்லை. ருக்மிணிக்கு ஊருக்குப்போகும் எண்ணமே மறந்துவிட்டது. கணவனுக்கு சொஸ்தமாகவேணுமென்று அல்லும் பகலும் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். கோபாலய்யருக்கோ சேர்ந்தாற்போல் அடிக்கும் ஜுரத்தினால் உடம்பு மிகவும் பலஹீனமடைந்துவிட்டது.

அவ்வளவிலும், தான்போட்ட திட்டப்படி பிரயாணம் நடக்கவில்லையேயென்று ஏக்கம். தன் சகோதரி எத்தனையோ நாட்களாகக் கோரியும் போகமுடியவில்லையேயென்றும் ருக்மிணியின் இஷ்டம் தன்னால் நிறைவேற்றப்படவில்லையேயென்றும் வருந்துவார். இத்தகைய கவலைகள் உறுத்துவதனால்தானோ உடம்பு குணமாகாமலிருந்தது. குழந்தைகளோ மனச்சோர்வுடன் கவனிப்பாரின்றி இருந்தார்கள். வீட்டின் நிலையே தலைகீழாய் மாறியிருந்தது. வேளா வேளைக்குச் சாப்பாடு கிடையாது. செலவோ இரட்டிப்பு, வருகிறவர்கள், போகிறவர்கள் சொல்லும் சிகிச்சையைக்கேட்டு ருக்மிணிக்கு மூளையே குழம்பிவிட்டது. இந்த வைத்தியரைவிட்டு வேறு வைத்தியரை அழைக்கலாமென்று சிலர் யோசனை சொன்னார்கள். இன்னும் சிலரோ ஆயுர்வேதத்தினால் தங்கள் வீட்டில் பெரியபெரிய வியாதிகள் மூன்றே நாளில் குணமாயிருக்கிறதென்றும் அந்தவைத்தியம் செய்யென்றும் சாதித்தார்கள். இன்னும் சிலரோ ஹோமியோபதி வைத்தியம் செய்யக்கூடாதோவென்று அங்கலாய்த்தார்கள். ருக்மிணிக்கு டாக்டர் குருராவ் கைராசியில் அபார நம்பிக்கை. தவிரவும் தான் பூஜித்துவரும் சக்திதேவி ஒருநாளும் கைவிடமாட்டாளென்று தைரியப்படுவாள்.

சிலசமயம் மருந்து எடுத்துக்கொடுக்கும்பொழுது கடியாரத்தில் மணி அடித்தால் நல்ல சகுனமென்று சந்தோஷிப்பாள். யாராவது ஜலதோஷத்தினால் தும்மிவிட்டால் சீறுவாள். பக்கத்தாத்துப் பாட்டி திருஷ்டி தோஷம்தான் இப்படிப் படுத்துகிறதென்று உறுதியாய்ச் சொன்னாள். ருக்மிணி பாட்டியை திருஷ்டியும் கழிக்கச்சொன்னாள். ‘மணி, மந்த்ர, ஔஷதம்’ என்று சொல்வது வழக்கம். ருக்மிணி மனவேதனையில் யார் எது சொன்னாலும் செய்யச் சித்தமாயிருந்தாள்.

## 4

ஜுரம் ஆரம்பித்து பதினெட்டு நாட்கள் முடிந்தன. இரண்டு நாளாக ஜுரம் குறைந்துவிட்டது என்றுமனம்தேறினாள் ருக்மிணி. ஆனால், அன்றுமாலை குருராவ் அவருக்குமேல் பெரிய டாக்டரை அழைத்து வந்தார். அதைக்கண்டு பயந்தாள். கணவர் முகமும் வழக்கத்தை விடச் சோர்வுற்றிருப்பதை நோக்கினாள். அவளை சொல்லொணாக் கவலை கவ்விக்கொண்டது. அவர் வாயைத்திறந்து பேசவுமில்லை. கண்ணைத் திறக்கவுமில்லை. ருக்மிணி அசையாமல் அவர் பக்கத்திலேயே உட்கார்ந்து இருந்தாள். கல்லாய்ச் சமைந்துவிட்டாளென்றாலும் மிகையாகாது. டாக்டர் இரவு ஒன்பதுமணிக்கு இஞ்செக்ஷன் செய்துவிட்டு ஆவலுடன் உட்கார்ந்திருந்தார்.

ருக்மிணிக்கு திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. எழுந்து பூஜை அறைக்குச் சென்று சக்தி தேவியின்முன் தீபம் ஏற்றி வைத்துவிட்டு மனமாறப் பிரார்த்தித்தாள். இக்கலிகாலத்தில் சிவாஜிக்கு பவானி மாதா பிரத்யக்ஷமாக வில்லையா? நமக்கும் தேவி தோன்றாத் துணையாக இருந்து காப்பாற்றவேணும்எனப் பிரார்த்தித்து நிமிர்ந்தாள். தேவியின் மேல் சாற்றியிருக்கும் புஷ்பத்திலிருந்து ஒரு மலர் உதிர்ந்தது. இதை பெரிய சுபசூசகமாகக்கொண்ட ருக்மிணி மனந்தேறி கணவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். இரவு ஒருமணி. பளிச்சென்று கண்ணைத்திறந்து பார்த்தார் கோபலய்யர்.

“ருக்மிணி! தைமாதம் பிறந்ததும் திருப்பதிக்குப்போய் வருவோமா?” என்றார். இரண்டுநாளாகப் பேசச்சக்தியற்றுச் சோர்வுடன் பேசவே

ருக்மிணி சந்தோஷத்தில் துள்ளிக்குதித்தாள். டாக்டரும் திருப்தியான முகத்துடன் நாடியைப் பரிசோதித்தார். "அம்மா! உங்கள் மங்கல்ய பலம்தான்...என் மருந்து வேலைசெய்ய வேணுமென்று கவலையாக இருந்தது. இனி பயமில்லை. காலையில் வருகிறேனென்று சொல்லிப்போனார்.

அருமை சகோதரி வீட்டுக்குப் போகவும், ஊர் சுற்றவும் சந்தோஷகரமான அநுபவங்களுக்குமாகஎடுத்த இரண்டுமாதலீவு கோபலய்யர் ஜுரத்திற்கும்உடம்பைத் தேற்றிக்கொள்ளவும் உபயோகப்பட்டது.எப்படியானல் என்ன? ருக்மிணிஅம்மாள் சக்தி மாதாவின் கிருபையால்தான் கணவர் பிழைத்தாரென்று நம்பினள். வாஸ்தவமும் அதுதான். ஆனல், டாக்டர் குருராவ், தான் அந்த சமயம் தைர்யமாய் செய்த இஞ்செக்ஷன் தான் கோபலய்யரைப் பிழைக்கவைத்தது என்று 'கிளப்பில்' சொல்லிக் கொண்டிருந்தார். அதுவும் உண்மைதான். பாட்டியோ தன் ராசிக் கையினல் திருஷ்டி கழித்ததினல்தான் பிழைத்தாரென்று சொல்லிக்கொண்டிருந்தாள். அதுமட்டும் பொய்யா?

கோபாலய்யர் லீவு வீணய்விட்டதே யென்று வருந்தினர். ஆனல், ருக்மிணிக்குக் கணவர் பிழைத்து எழுந்ததில் புதுசந்தோஷமும், ஒரு நிதி கிடைத்ததுபோன்ற உணர்ச்சியும்; இன்னும் கொஞ்சம் சின்ன பெண்ணுக மாறிவிட்டாள்.

## 5

ருக்மிணி அம்மாளை 'பால் பொங்கிற்ற? பண்டிகை ஆச்சா' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் மிஸஸ் ரகுநாதன். அதற்குள் 'ருக்மிணி அம்மாள் வீட்டில் பாலா பொங்கிற்று. அமிர்தமல்லவா பொங்கிற்று?' என்று திருத்தம் செய்துகொண்டே வந்தாள் மிஸஸ் சங்கர். தம்பியைப்' பார்க்கவந்த அக்கா பொங்கல் பண்டிகைக்கு அங்கேயே தங்கிவிட்டாள். 'ஏன்சார் இப்பொழுதாவது இரண்டுமாத லீவு எடுத்துக்கொண்டு கிராமத்தில் சென்று இளைப்பாறுங்கள்' என்றார் ஒரு நண்பர். 'இனிமேல் இரண்டு மாத லீவே எடுக்கமாட்டேன் சார், இப்பொழுது பட்டபாடு போதாதா?' என்றார் கோபாலய்யர்.

'ஏன் சார் உங்கள் பெண் கல்யாணம் வந்தால்கூட லீவு எடுக்கமாட்டீர்களோ' என்று கிண்டல் செய்தார் நண்பர் நாகேந்திர ராவ்.

'மாப்பிள்ளை தேடவேண்டிய அவச்யமில்லை. லீவு எதற்கு?' என்று சொல்லி அய்யருடைய மருமான் பாலுவைப் பார்த்து கண்ணைச் சிமிட்டினள் மிஸஸ் சங்கர்.

ருக்மிணி அம்மாளுக்கு பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. "அக்கா! வெள்ளிக்கிழமை நாள் நன்றாயிருக்கிறது. பாலுவுக்கும், விமலாவுக்கும் நிச்சயதார்த்தம் செய்துவிட்டால் என்ன?" என்றாள்.

"அப்படியே செய்தால் போகிறது. கோபு பிழைத்த சந்தோஷத்தை இதைவிட உயர்வாகக் கொண்டாடமுடியுமா?" என்றாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த விமலா, பனிரெண்டு மணிக்குப் பிறந்த தை மாதத்தில் மாலை ஆறுமணிக்கே வழி பிறந்துவிட்டதேயென்று பூரித்தாள். வந்தவர்களும் நிச்சயதார்த்தத்திற்கு வருவதாகச் சொல்லிச் சென்றார்கள். பிறகு குடும்பத்துடன் திருப்பதி போய்வந்து, விமலாவின் விவாஹமும் நடந்ததென்று சொல்லவும் வேணுமா?

---

தாரண ... னம்
(700 பக்கங்கள் ...00 படங்களுடன்)
100 சகோதரிகள் சிருஷ்டி... ருதுமலர் மாலை ரூ. 9



183146
சென்னை-600 008

வை. மு. ஸ்ரீ. 3-வது நவீனம்—

## அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி

(ரூ. 1—8—0. ரிஜிஸ்தர் தபாலில் 1—12—0)

## நிதானகீர்த்தி தொகுத்து அளிக்கும் விவித விருந்து


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. நவீன ப்ரஹ்மதேவன் | — | ஒரு கற்பனாலங்காரம். | 1 |
| 2. நவீனங்களின் முன்னோர் | — | இலக்கிய ரஸனை. | 12 |
| 3. கடவுள் இருக்கிறார்! | — | சிறு கதை. | 25 |
| 4. பிரமித்துவிட்டோம்! | — | உண்மைச் சித்திரம். | 34 |
| 5. கீர்த்தனாமணி! | — | இசைக் கற்பனை ரசனை. | 38 |
| 6. ஒரு வாரம் | — | எழுநாளைய குறிப்புகள். | 43 |
| 7. ஸர்வம் ஸங்கீதமயம் | — | இசைவிழா வர்ணனை. | 53 |
| 8. இந்திரனின் புதல்வன் | — | ஸம்ஸ்க்ருத இலக்கியம். | 60 |
| 9. ஸ்ரீ க்ருஷ்ணாம்ருதம் | — | படிப்பினை. | 64 |
| 10. கண்கோள்ளாக் காட்சி | — | ஓர் ஆனந்தாநுபவம். | 71 |
| 11. அன்பின் ஆற்றல் | — | சிறு கதை. | 79 |
| 12. வாழ்வின் மேடு பள்ளங்கள் | — | நான்குநாளைய குறிப்புகள். | 85 |
| 13. எதிர்பாராத அநுபவம் | — | ஒரு நிகழ்ச்சிச் சித்திரம் | 92 |
| 14. போன் விழா | — | காணிக்கை. | 100 |
| 15. ஆறுதலும் கிளர்ச்சியும் | — | ஒரு ரஸாநுபவம். | 104 |
| 16. திருப்பதி யாத்திரை | — | வாழ்வு பெற்ற பயன் | 109-68 |


---

வை. மு. ஸ்ரீ. 4-வது நவீனம்—

## ராணி சிலாவதி

(ரூ. 1. ரிஜிஸ்தர் தபாலில் 1—4—0)


| அத்யாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | உபந்யாஸமும் உதாசீனமும். | 1 |
| 2. | பேய்க்குக் கள் வார்த்த கதைதான்! | 8 |
| 3. | வாக்கு பலித்தது — விபரீத யாத்திரையே! | 16 |
| 4. | நிந்தனையும் நிபந்தனையும். | 25 |
| 5. | உவமையும் உவகையும். | 31 |
| 6. | வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். | 40 |
| 7. | மடமையும் கடமையும்—சூழ்ச்சியின் வீழ்ச்சி. | 47 |
| 8. | இனம் இனத்தைச் சேரும்—தாபமும் தாபமும். | 58 |
| 9. | விதையும் அறுவடையும். | 69 |
| 10. | தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம்! | 75 |
| 11. | சீலவதியும் சிலாவதியும் | 84 |
| 12. | ராஜரிஷியின் இதய கீதம். | 91—96 |


ஷை நான்கு நவீனங்களையும் ஒரே சமயத்தில் வாங்குவோர் ரூ. 5. அனுப்பினால் தபாற்செலவின்றி ரிஜிஸ்தர் போஸ்டில் அனுப்பப்படும்.



மிக அபூர்வ சதுர்புஜ ராம விக்ரகம்

17-ம் நூற்றாண்டில் மிக அற்புதமாக உருவாக்கப்பட்ட ஷை விக்ரகம், மண்டோதரி, வெற்றி வீரனை (மானிட ரூப) ராமபிரானைச் சங்கசக்ரதாரியாகக் கண்டதை நமக்குக் காட்டுகிறதுபோலும்!...வெள்ளிவிழா மலரின் தேஜோன் மயமான அம்சங்களில் "சமீபகால சிற்ப விசித்திரங்கள்" என்ற அம்சமும் ஒன்று. விரிவான அறிக்கை உள்ளே காண்க.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
*Managing Editor:* V. M. SRINIVASAN, M.A., B.L.